மானங் காத்த மருது பாண்டியர்

846
4-54

V211,6L60
N54

ந. சஞ்சீவி, எம்.ஏ.

மானங் காத்த மருது பாண்டியர்

ந. சஞ்சீவி, எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பர் கல்லூரி, காஞ்சீபுரம்

பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை - 1

முதற் பதிப்பு : செப்டம்பர் 1954

உரிமை ஆசிரியர்க்கே

V2;1 'L60
N54

விலை ரு. 1-4-0

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

அணிந்துரை

வட இந்தியத் தலைவர்கள் வான்புகழ் பெறுகின்றனர்; இந்தியா முழுதும் அறிந்து போற்றும் பெருமை அவர்களுக்கு எளிதில் வாய்க்கின்றது; உலகம் அறியும் சிறப்பும் வாய்க்கின்றது. தமிழ்நாட்டுத் தலைவர்கள் ஏற்ற அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தும் அவ்வாறு உயர்ந்து விளங்குதல் அரிதாக உள்ளது. காரணம், தமிழர் தம்மவரின் சிறப்புக்களை உணராமையும், உணர்ந்தாலும் போற்றாமையுமாகும். தமிழ்நாட்டுச் செய்தித் தாள்களும் பிறர்க்குத் தரும் பெருமையிலும் விளம்பரத்திலும் காற்பங்கும் தமிழர்க்குத் தருவதில்லை. அதனால் வடநாடு, புகழ்மிக்க தலைவர்கள் நிறைந்த நாடு ஆகின்றது ; தமிழ்நாடு திக்கற்றுத் திகைக்க நேர்கின்றது.

நெடுங்காலமாகவே இத்தகைய புறக்கணிப்பு இருந்து வருதலை வரலாற்றுப் 'புத்தகங்கள் உணர்த்துகின்றன. வரலாற்றில் புகழ்பெற்ற வடநாட்டு வீரமாந்தர் பலர் காணப்படுகின்றனர்; தமிழ்நாட்டின் வீரப்பெருமக்களான கட்டபொம்மன், மருதுபாண்டியர் முதலானோர்க்கும் உரிய சிறப்பு அளிக்கப்படவில்லை.

இந்த நிலை நீடிக்குமானால், தமிழகத்திற்கு உய்வு இல்லை என்பதை இன்று பலரும் உணர்ந்துவருகின்றனர். தம்மவரை மறவாமல் போற்றிப் பிறரையும் போற்றுதலே நல்ல நெறியாகும்.

இந்தப் புத்துணர்ச்சியின் பயனாக இன்று சில நல்ல நூல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. 'மானங் காத்த மருது பாண்டியர்' என்னும் இந்நூல் இத்தகையதாகும். அந்நியரின் ஆட்சியை அஞ்சாமல் எதிர்த்துத் தமிழகத்தின்

பெருமையைக் காத்துத் தம் உயிரைப் பலியாக்கிய வீரப் பெருந்தகையினர் மருது பாண்டியர்.

உணர்ச்சி மிக்க இவர்களின் வரலாற்றைத் திருவாளர் ந. சஞ்சீவி எழுதி யுதவியது காலத்திற்கு ஏற்ற நல்ல தமிழ்த் தொண்டாகும். துடிதுடிப்பான தமிழுள்ளம் இவர்தம் நடையில் புலப்படுகின்றது. இந்த நன்முயற்சியைத் தமிழகம் வரவேற்று மகிழும் என நம்புகிறேன்.

மு. வரதராசன்.

முன்னுரை

எங்கள் காஞ்சீபுரம் பச்சையப்பர் கல்லூரியின் முதலாண்டுத் தலைவராக இருந்தவர் பேராசிரியர் சி. எஸ். சீனிவாசாச்சாரியார் அவர்கள். நான்கு ஆண்டுகட்கு முன் அவர் இக்கல்லூரியின் தலைவராக இருந்தபோது அவரோடு சேர்ந்து தமிழ் இளைஞர்கட்கு அறிவுத் தொண்டாற்றும் அரியவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவ்வமயம் பேராசிரியர் அவர்கள் தென்னிந்திய வரலாற்றுத் தொடர்புடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலவற்றை ஆங்கிலத்தில் எழுதிக்கொண்டிருந்தார். அவற்றை அவர் என்னிடம் அன்போடு தந்து, படித்துப்பார்த்து மொழி பெயர்க்கச் சொல்வது வழக்கம். அப்போது அக்கட்டுரைகளில் சில தமிழ்நாட்டுப் பாளையக்காரர்கள் நடத்திய சுதந்திரப்போரின் சிற்சில பகுதிகளை ஆராய்ந்து எழுதியனவாக இருக்கக்கண்டேன். அவற்றை யான் படிக்க நேர்ந்தபோது என் உள்ளம் பெற்ற எழுச்சியும் மகிழ்ச்சியும் சொல்லி முடியாது. அதுமுதல் அக்கட்டுரைகளை அவர் எழுத மூலகாரணமாக இருந்த கர்னல் வெல்ஷின் 'ராணுவ நினைவுகள்' என்ற புத்தகத்தையும் கூர்ந்து படிக்கலானேன். அதன் பயனாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வீரத் தமிழ்மக்கள் நடத்திய சுதந்திரப்போர் படம் படமாக என் அகக்கண் முன் விரியலாயிற்று. அவ்வாறு கடந்த நான்கு ஆண்டுகளாக அவ்வப்போது என் மனத்திரையில் திரும்பத் திரும்ப யான் கண்டுவந்த வீரமும் மானமும் நிறைந்த அக்காட்சிகள் தந்த பேருணர்ச்சியின் பயனே இந்நூல்.

மருதுபாண்டியரைப் பற்றிய வரலாறு இதுவரை ஒரு முழு நூலாக வெளிவரவில்லை. இக்குறை என் உள்ளத்தைக் கடந்த நான்கு ஆண்டுகளாக உறுத்தியவண்ணம் இருந்தது. அக்குறையை ஒருவாறு போக்கக் கருதி இந்நூல் எழுதத் துணிந்தபோது எனக்குப் பெருந்துணையாக அமைந்த நூல்களும் கட்டுரைகளும் பலவாகும். அவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை, முதன் முதலாக, "பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திர"த்தை இரு பெரும் பாகங்களாக எழுதித் தமிழ்மக்கட்குத் தந்ததன் வாயிலாக அழியாப்புகழ்ச் செல்வராக விளங்கும் கவிராஜ பண்டிதர் ஜகவீரபாண்டியனார் அவர்களுடைய அரிய நூல்களும், திரு. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் 'மருது பாண்டியர்' என்ற தலைப்பில் எழுதிய நல்ல கட்டுரையொன்றும், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இதே பொருள் பற்றி எழுதிய இரு இனிய கட்டுரைகளும், கவியோகி - சுத்தானந்த பாரதியார் அவர்களுடைய சுவை நிறைந்த 'கதை விருந்தும்' ஆகும். மேற்கண்ட இவைகளேயன்றி ஆனந்தவிகடனில் முறையாக வெளியிடப்பட்டு வந்த 'கட்டபொம்மு கதை'யும் இந்நூல் எழுதுவதற்குப் பெருந்துணை புரிந்தது. இவற்றோடு மருதுபாண்டியரின் வீரவாழ்வைச் சொற் சித்திரமாக்கிக் காட்ட எனக்கு இருந்த ஆர்வத்தை மேலும் தூண்டிவிடக் காரணமாய் இருந்தது 'கல்கி.' ஆசிரியரவர்களின் 'மாடத்தேவன் சுனை' என்ற அருமையான சிறுகதை என்பதையும் இங்கே நான் குறிப்பிடவே வேண்டும்.

சிந்திச் சிதறிக்கிடந்த மருதுபாண்டியரைப் பற்றிய புகழ் நிறைந்த செய்திகளையெல்லாம் திரட்டித் தொகுத்து இந்நூலை உருவாக்க எனக்குப் பல்வகையாலும் துணை நின்ற மேற்குறிப்பிட்டுள்ள பெருமக்கட்கும் - பத்திரிகைகட்கும்—பிற அன்பர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியறிதல் என்றென்றும் உரியது.

மருதுபாண்டியரைப்பற்றிக் கூறும் இந்நூலில் தமிழ்க் குடியிலேயே தோன்றிய புதுக்கோட்டைத் தொண்டைமானைப் பற்றியும் எட்டயபுரம் ஜமீன்தாரைப்பற்றியும் எழுத நேர்ந்துவிட்டது. அவ்வாறு அவர்களைப்பற்றி எழுதியபோது எனக்கு இருந்த வருத்தம் சிறிதன்று. ஆயினும் ஒரு நாட்டின் வரலாற்றை எழுதும்போது தவிர்க்க முடியாத கடமையாகவே கருதி அதை நான் கூடிய வரையில் உணர்ச்சி வயப்படாது செய்துள்ளேன். இந்நிலையில், தொண்டைமானைப்பற்றியும், எட்டயபுரம் அதிபரைப்பற்றியும், இந்நூலில் குறிப்பிடப்படும் செய்திகள் மருதுபாண்டியர் வரலாற்றுக்குத் துணைசெய்ய அமைந்தனவே அல்லாமல் வேறு எவரையும் குறைகூறக் கருதியன அல்ல.

மருது பாண்டியர்கள் பெயரால் அவர்கள் வரலாறு முழுவதையும் கூற முயலும் முதற் புத்தகம் இந்நூல்தான் என்று எண்ணும்போது என் மனம் எல்லையில்லா இன்பம் எய்துகிறது. என்னுடைய இந்த எளிய முயற்சி மருதுபாண்டியர் புகழை விளக்கவல்ல மேலும் பல செய்திகள் கிடைப்பதற்கு ஒரு சிறு தூண்டுகோலாகவேனும் அமையின் அதுவே என் ஊக்கமும் உழைப்பும் பெற்ற சிறந்த பரிசாகும்.

வரலாற்றுத் தொடர்புடைய இவ்வுரைநடை நூலுக்குச் சிறந்ததோர் அணிந்துரை வழங்கிப் பெருமை செய்துள்ள தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனார் அவர்கட்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் இவ்வளவு சிறந்த முறையில் வெளிவரப் பல்லாற்றானும் பெருந்துணை புரிந்த தமிழ்ப் பெருமக்கள் அனைவர்க்கும் என் நன்றிகலந்த வணக்கங்கள் உரியன.

வாழ்க தமிழ்! வெல்க தமிழினம்!

ந. சஞ்சீவி.

❊

படையல்

உணர்வின் கடலாய்

ஒழுக்கத்தின் இமயமாய் வாழ்ந்த

தமிழ் முனிவர்

திரு. வி. க. அவர்களின்

அன்பு நினைவுக்கு

❊

		பக்கம்
1.	புரட்சியின் தாயகம் ...	1
2.	அடிமை அரசியலும் ஆர்க்காட்டுப் பொம்மையும்	6
3.	வீரபாண்டியன் மூட்டிய தீ ...	10
4.	நீறு பூத்த நெருப்பு ...	26
5.	சிறைச்சாலை தகர்ந்தது! எரிமலை வெடித்தது! ...	28
6.	யார் அவர்கள் ? ...	39
7.	பெரிய மருது - சின்ன மருது ...	42
8.	சிவகங்கைச் சீமையிலே ! ...	54
9.	தமிழர்படை திரண்டது ! ...	64
10.	போர் ! போர் ! காட்டில் கடும்போர் ! ...	67
11.	மீண்டும் போர் ! மானங் காக்கும் சுதந்திரப் போர் ! ...	78
12.	களபலி ...	89
13.	கர்னல் வெல்ஷைக் கேளுங்கள் ...	99
14.	வீரர்களை வணங்குவோம். ...	106

படங்கள்

1. அட்டைப்படம் : குன்றக்குடிக் கோவிலிலுள்ள மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைகள்.

*2. பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை.

*3. சிறுவயல் காட்டில் கம்பெனிப் பட்டாளத்தின் ராணுவ நடவடிக்கைகள்.

---

*இவ்விரு படங்களும் வெல்ஷ் எழுதிய 'ராணுவ நினைவுகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டன.

மானங் காத்த மருது பாண்டியர்

1. புரட்சியின் தாயகம்

'செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.'

ஆம். தொல்காப்பியம் தோன்றிய காலந்தொட்டும் பாரதியார் கவிதை பிறந்த தலைமுறை வரை ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழையடி வாழையாகக் கணக்கற்ற புரட்சிப் பெருவீரர்கள் தமிழ் மண்ணில் தோன்றினார்கள். அவர்கள் ஏட்டிலும், நாட்டிலும், கவிதையிலும், கற்பனையிலும், சமயத்திலும், சாத்திரங்களிலும், ஆலயங்களிலும், அறப்பணிகளிலும், சிந்தனைக் கோட்டையிலும், செயல் உலகிலும் செய்த இணையில்லாப் பெரும் புரட்சிகள் யாவற்றையும் சொல்லால் அளவிட்டு உரைத்தல் யாரால் ஆகும்? வாழப் பிறந்த தமிழினம், எங்கெல்லாம் மனித அறிவும் உணர்வும் செல்லுமோ, அங்கெல்லாம் மாறுதல்களைக் கண்டு, புரட்சிகளைச் செய்து முன்னேறுவதையே தன் வாழ்வின் மூச்சாகக் கொண்டு விளங்கியது.

'நெல்லும் உயிரன்றே ; நீரும் உயிரன்றே ; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று

இருந்த முடியாட்சியிலும், 'கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றும்' கொடுங் கோலன் ஆகும் கொடுமைக்கு அஞ்சிய காவலரை - போர் போர் என்று தினவெடுத்துத் திரிந்த தமிழ் மறவர் வாழ்ந்த மண்ணிலே பிறந்தும், போர் முரசின் ஒலியன்றி வேறு ஒலி கேளாத காலத்தில் வாழ்ந்தும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று ஒற்றுமைச் சங்கு ஊதி, 'உலகம் ஒன்றே; அதில் உறையும் மாந்தர் அனைவரும் ஒரு குடியே' என்று சர்வதேசிய முரசு கொட்டிய செந்தமிழ்ச் சான்றோரை - சங்ககாலத் தமிழகத்திலன்றி வேறு எங்கே சந்திக்க முடியும்? 'கள்ளும் கற்பில் மங்கையர் உறவும் நாகரிகம்' எனக் கருதி மக்கள் மயங்கிய நாளில், பிறப்பு வழி பெருமை பேசும் பேதமை புகுந்த காலத்தில், அவற்றை எதிர்த்து, ஏடும் எழுத்தாணியுமே கொண்டு, கருத்துலகில் புரட்சி செய்து, சாதி, சமய பேதம் கடந்த நீதிநூலை, உலகப் பொது மறையை, காலத்தை வென்ற கவிதையைப் பாடித் தந்த திருவள்ளுவரைத் தமிழ் மண்ணில் அன்றி வேறு எங்கே காண முடியும்? பழியறியாப் பாண்டி மன்னன் குடியில் பிறந்தும், தேரா மன்னன் ஆராயாது செய்த அநீதி ஒன்றே ஆயினும், 'பட்டாங்கில் யானுமோர் பத்தினி யாகில், அல்வழிப் பட்ட ஆட்சியை அழித்தே தீருவேன்' என்று அமைதியே வடிவமாயிருந்த கற்பின் செல்வி, வீரக் கண்ணகி யாய் வீறு கொண்டு, சிந்திய கண்ணீரோடும், விரித்த கூந்தலோடும், ஏந்திய சிலம்போடும் மன்னவன் நகரில், மாட மாளிகைகளில், புரட்சித்தீ பற்றி எரியப் புறப் பட்டது மதுரை வீதிகளிலே அன்றி வேறு எந்நாட்டு எந்நகர வீதிகளில்?

அல்லற்பட்ட மக்களுக்காக அழுது இரங்கி, 'ஆருயிர் மருந்து' அளித்து அன்பு செய்த குற்றத்திற்காகத் தன் நாட்டு அரசனாலேயே கொடுஞ் சிறையில் தள்ளப்பட்ட, உலக வரலாற்றிலேயே முதல் பெண்ணரசி - சிறைக் கோட்டத்தையே சிதைத்து அறக்கோட்டமாக்கிய புரட்சி அன்னை, அறச்செல்வி - பிறந்தது தமிழ் மண்ணிலேயன்றி வேறு எங்கே? பிறந்த பொன்னாட்டில் வாழ இடமிருந்தும், வகையற்றுக் கண்ணற்ற குருடர் போல் கடல் கடந்து சென்று, கூலிகளாய் ஆப்பிரிக்கக் காடுகளில் அடைக்கலம் புகுந்த நேரத்திலும் தன் இனத்தின் மானங்காக்கப் புரட்சித்தீ பொங்கி எழுந்த நேரத்தில் அக்கோரத் தீக்குத் தன் ஆருயிரையே அர்ப்பணித்த வீர வள்ளியைப் போன்ற மங்கையரைப் பெற்றெடுத்த இனம் தமிழ் இனமன்றி வேறு எந்த இனம்? அது மட்டுமோ?

சிப்பாய்க் கலகம் என்ற சிந்தனையே எழாத நாளில், அறப்போர் என்ற வார்த்தையே பிறவாத காலத்தில், பாரத நாட்டின் சொத்தையல்ல, சுதந்திரத்தை, சுய மரியாதையையே சூறையாடச் சூழ்ச்சி வலை விரித்த வஞ்சகரை எதிர்த்து, வீர பாண்டிய கட்டபொம்மன் விடுதலைப் போரைத் துவக்கி வைத்தான். **அப்போரின் - இந்திய சுதந்திரப் போரின் - முதல் முழக்கம்** தமிழ் நாட்டுக் கோட்டைகளிலும், கொத்தளங்களிலும், மலைகளிலும், காடுகளிலும் அல்லவோ எதிரொலித்தது!

ஆம். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வீர பாண்டியன் துவக்கி வைத்த சுதந்திரப்போர், மன்னர் பலியான பின்னும் மானம் படைத்த அவன் மரபினர் நடத்திய போர், தளபதிகள் கொல்லப்பட்ட பின்னும் தளராமல் மக்கள் நடத்திய போர், அவர் வழிவழி வந்த

வீரத் தமிழ் மக்களால் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டது. அப்போரில் அல்லலுற்று அயர்வுற்ற நேரத்திலெல்லாம் அடிமைப்பட்ட மக்களுக்கு ஆத்திரம் ஊட்ட, ஆண்மை மிக்க அரசியல் தளபதிகள் எத்தனையோ பேர் ஒருவர் பின் ஒருவராகத் தமிழகத்தில் தோன்றிய வண்ணம் இருந்தனர்.

வில்லும் வாளும் ஏந்தும் உரிமையிழந்த தமிழ் மக்களை, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இடியென முழங்கிப் போர்புரியத் தன் சொல்லெடுத்துக் கவிபுனைந்து ஆவேச வெறி யூட்டினார் அமரகவி பாரதியார். தித்திக்கும் தமிழால் தேசபக்தி என்னும் தீயை நாட்டு மக்கள் நெஞ்சிலெல்லாம் மூட்டும் திருப்பணியைத் தடையின்றிச் செய்யும் பொருட்டு, வெள்ளைக் கொடுங்கோலர்களின் பருந்து விழிகளில் படாதவாறு எத்தனையோ காலம் அஞ்ஞாத வாசம் புரிந்தார். 'வந்தேமாதரம்' என்று வாய்விட்டு முழங்கிய பாவத்திற்காக, 'பொழுதெல்லாம் எங்கள் செல்வம்கொள்ளை போகவோ? நாங்கள் மட்டும் அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளைகள் அல்லமோ?' என்று வீர நெஞ்சம் விம்மித் துடிக்க, தமிழகத்தின் கடல்களில் கப்பலோட்டிய குற்றத்திற்காக இரு ஜன்ம சிறைத் தண்டனை பெற்றார் தேச பக்தர் சிதம்பரனார்; கண்ணற்ற கண்ணனூர் இருட் சிறையில் தள்ளப்பட்டார்; ஆங்கே ஏகாதிபத்தியத்தின் கொடுமைகள் எத்தனையுண்டோ அத்தனைக்கும் இலக்கானார். மனைவியையும் மக்களையும் பிரிந்த வீர சிதம்பரனார் சிறையில் மாடு போல் செக்கிழுத்தார். அங்குக் கையொடிய மனமொடியக் கல்லுடைத்தார். இவ்வாறு சிதம்பரனார் மூட்டிவைத்த தியாகத் தீயில் எத்தனையோ தமிழ் வீரர்கள் தங்கள் குருதியையே நெய்யாகக் கொட்டினர்;

எலும்பையே ஆகுதியாக இட்டனர். 'உயர்த்திப் பிடித்த கொடியை ஒரு நாளும் தாழ்த்த மாட்டேன்' என்று அரிமா என முழங்கித் தடியடி பட்டு, மண்டை பிளக்கப் பெற்று, தன் இரத்த வெள்ளத்தால் தமிழ் மண்ணைப் புனிதமுறச்செய்த திருப்பூர் குமரனை எவரே மறப்பர்?

பாரதியை, சிதம்பரத்தை, குமரனைப் போல் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டுச் சாவையும் மகிழ்வோடு தழுவிய எத்தனையோ வீரர்களைத் தமிழகம் ஈன்றது. எண்ணிடலங்கா - பெயரறியா - வீரர்களடங்கிய கூட்டம் அது. ஆனால் அவருள் சிலரையே அறிவோம் நாம்.

இந்தியாவின் இன்பத் தமிழகத்தின் விடுதலைக்காகத் தங்கள் நாட்டை, மனைவியை, மக்களை, நல்லுயிரை எல்லாம் இழந்து, தம் உயிரையும் துறந்த அம்மேலோர்களின் குழுவினைச் சார்ந்த இரு பெரு வீரர்களைப் பற்றியே சிறப்பாக இந்நூலில் படிக்கப் போகிறோம். தமிழகத்தின் மானத்தைக் காக்கத் தங்கள் இன்னுயிரையே காணிக்கையாகக் கொடுத்த அவ் இணையற்ற வீரர்களின் வரலாறு என்றென்றும் நம் இதயங்களில் வைத்துப் போற்றிப் பயனடையத் தக்க தகுதி படைத்ததாகும். பண்பும் பயனும் நிறைந்த அத்தமிழ் மறவரின் தீரவாழ்வை, 'தியாகப் பாதையை' அறியுந்தோறும் அறியுந்தோறும் நம் அகக்கண்களுக்கு நம்மை ஈன்றெடுத்த இன்பத் தமிழகம் எவ்வாறு புரட்சியின் தாயகமாகவும் பொலிவுற்று விளங்கியது என்ற வாய்மை புலனாகும்.

2. அடிமை அரசியலும் ஆர்க்காட்டுப் பொம்மையும்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி தென்னாடெங்கும் பொலிவற்றுக் கிடந்தது. நெஞ்சின் உரமும் நேர்மைத் திறமும் இல்லாதார் ஆட்சிக்கு அருமைத் தமிழகம் இரையாகியது! நாடெங்கும் ஆர்க்காட்டு நவாபின் தர்பார் தான்!

'விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யிடிக்கும் திறனுடையார்'

என்று பாரதியார் போற்றிய 'தமிழ்ப் பார்த்திபர்' மன்பதை முழுதும் வாழ்த்தி வணங்கச் செங்கோல் செலுத்திய செந்தமிழ் நாட்டின் ஆட்சி உரிமை யார் யார் கைக்கோ எவ்வெவ்வாறோ போய்ச் சேர்ந்தது. விஜயநகர நாயக்கர்கள் ஆட்சியில் தமிழ் நாடு பற்பல பிரிவுகளாகச் சிதைந்தது. பாண்டி நாடு மட்டும் எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்களாகப் பிரிவுபட்டது. இவ்வாறு பிளவுபட்டுக்கிடந்த தமிழகம் ஆர்க்காட்டு நவாபின் ஆட்சிக்குக் கைம்மாறியது. நவாபின் ஆட்சியில் தமிழகத்தின் நிலை தாறுமாறாயிற்று. அரசியல் அறிவும், சுதந்திர வேட்கையும், ஆண்மைத் திறமும் அற்றவனாக இருந்தான் ஆர்க்காட்டு நவாப். இந்த உண்மையை உணர்ந்த கணக்கற்ற பாளையப்பட்டுக்களின் குறுநிலத் தலைவர்கள் ஒவ்வொருவரும் சுதந்திர ஆட்சி நடத்தத் தொடங்கினர். தங்களுக்குள் ஒற்றுமைப் பண்பின்றிப் பூசலையும் பொறாமையையும் பெருக்கிக் கொண்டு, பிரிந்தும் பிணங்கியும் நிற்கலாயினர். ஊர் இரண்டுபட்டுக் கிடந்தால் கூத்தாடிக்குக் கும்மாளம் தானே? இத்தகைய சூழ்நிலையில்

வெள்ளைக்கம்பெனியார் தங்கள் இனத்துக்கே உரிய வஞ்சகச் செயல் புரிய வலை விரிக்கலாயினர். பரதேசி வெள்ளையர் விரித்த பாழான சூழ்ச்சி வலையில் அறிவும் ஆண்மையும் கெட்டுக் கிடந்த ஆர்க்காட்டு நவாபும் சிக்கினான். 1792ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஆர்க்காட்டு நவாப்பிற்கும் இடையே ஓர் ஒப்பந்தம் எழுந்தது. ஆம். ஒப்பந்தம் என்ற பெயரால் ஆங்கிலக் கம்பெனிக்குத் தமிழகத்தை அடகுவைத்தான் ஆர்க்காட்டு நவாப். 'ஆர்க்காட்டு நவாப் தான் பெற்ற கடனுக்காகத் தமிழகக் குறுநில மன்னர்களிடமிருந்து கப்பப் பணத்தை வசூலித்துக் கொள்ளும் முழு உரிமையையும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கே வழங்குவது.' இதுவே அந்த அடிமை ஒப்பந்தத்தின் சாரம். இத்தகைய ஒப்பந்தத்தின் மூலம் மன்னர் மன்னர்களை எல்லாம் அடிபணிய வைத்த தமிழகத்தின் அரசியல், அடிமை அரசியலாயிற்று! ஆர்க்காட்டு நவாபும் வெறும் அலங்காரப் பொம்மையானான். வயிறு வளர்க்க வந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் வெள்ளையர் வரி வாங்கும் எஜமானராகவே மாறினர்.

'நாட்டு மாந்த ரெல்லாம்—நம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென்(று)—உலகை
அரசர் எண்ணி விட்டார்'

என்று நெஞ்சம் கொதித்துப் பாரதியார் பாடியது ஆர்க்காட்டு நவாபின் அவமானச் செயலுக்கு எவ்வளவு பொருத்தம்!

ஆர்க்காட்டு நவாடீன் ஆண்மையற்ற செயலால் தமிழகம் வெள்ளைப் பறங்கியர்க்கு அடிமையாயிற்று. வரி வாங்கும் அதிகாரிகள் என்ற பெயரால் அவ் ஆங்கில

நாடோடிகள் செய்யாத அநீதி யெல்லாம் செய்தனர்; மக்களைக் கசக்கி, அவர்களிடமிருந்து பணத்தையும் கண்ணீரையும் கப்பமாகக் கொண்டனர்; தமிழகத்தின் செல்வத்தையெல்லாம் சூறையாடுவதையே அன்றாடத் தொழிலாகக் கருதினர். வாணிபம் செய்ய வந்த ஆங்கில நாடோடிகள் தங்கள் அதிகாரத்தைக் குறையின்றிச் செலுத்த, கிழக்கு இந்தியக் கம்பெனியின் பெயரால் ராணுவத்தையும் ஏற்படுத்தலாயினர். அலைகடலையும் வென்று, அப்பாலுள்ள நாடுகளை எல்லாம் தன்னடிப் படுத்திய தமிழகத்தின் கரைகளில் வெள்ளையர் படை இங்கிலாந்திலிருந்து வந்து இறங்கியது. பண்டங்களை விற்க வந்த கம்பெனியின் கிடங்குகளில் பேய்வாய்ப் பீரங்கிகளும், நச்சுக் குண்டுகளும், நானாவிதத் துப்பாக்கிகளும் நிரம்பின.

அழுக்காறு கொண்டு, ஆண்மை குன்றி வாழ்ந்த குறுநில மன்னர்கள் - பாளையக்காரர்கள் - இந்நிலை கண்டனர். அவர்கள் தொடை நடுங்கியது. நெல்லிக்காய்கள் போல் சிதறிக் கிடந்த அப்பாளையக்காரர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்திப் பறங்கித் துரைமார்கள் அரசியல் சூது ஆடத் தொடங்கினர்; தங்கள் நாட்டிலிருந்து வரவழைத்த வெள்ளைப் பட்டாளத்திற்கு உறுதுணையாகக் கூலிப்பட்டாளத்தையும் ஏராளமாகச் சேர்க்கத் தலைப்பட்டனர்; பாளையக்காரர்கட்கு இடையே ஏற்கெனவே எரிந்துகொண்டிருந்த பொறாமைத் தீக்குப் புதுநெய் வார்க்கும் திருப்பணியில் இறங்கினார்கள்; ஒருவருக்கு எதிராக மற்றவரைத் தூண்டிவிட்டுப் பாளையக்காரர்களுக்கிடையே தீராப்பகையை வளர்த்தனர். இவ்வளவு சூழ்ச்சிகட்கும் பெரும்பாலான பாளையக்காரர்கள் இரையாயினர். கண்ணிருந்தும் குருடர்களாக, வாயிருந்தும் ஊமையர்களாக அவர்கள் வாழ்க்கை மாறியது. அடிமை இருள் தமிழகத்தை ஆழ்ந்து கவ்விக்கொண்டது.

இத்தகைய சூழ்நிலையில்தான், காரிருள் கிழித்துப் பேரொளி விளங்கப் புறப்படும் ஆதவனே போல் பாஞ்சாலங் குறிச்சி வீர பாண்டிய கட்டபொம்மன் தோன்றினான். அடிமை வாழ்வும் வஞ்சனைப் பேயும் கொடுங் கூத்தாடியிருந்த இக்காலத்தில்தான் அவனுடைய அரசியல் வாழ்வும் தொடங்கியது. தொன்று தொட்டு எவர்க்கும் தலைவணங்காது வாழ்ந்த தமிழ் மன்னர் பரம்பரை இன்று ஆங்கில நாடோடிகளின் நய வஞ்சகத்திற்கு இரையாகிக் கிடக்கும் கொடுமையைக் கண்டு அவன் உள்ளம் குமுறியது. தங்கள் வாழ்விற்காகத் தமிழகத்தின் மானத்தையே குழி தோண்டிப் புதைக்கும் பாளையக்காரர்களின் சிறுமதியை, கோழை நெஞ்சைக் கண்டு, அவன் கண்கள் சிவந்தன. துப்பாக்கிக்கும் பீரங்கிக்கும் அஞ்சித் தமிழ் மக்களை அடிமைச் சிறையில் தள்ளும் குறுநில மன்னர்களின் துரோகச் செயல் கண்டு, அவன் வீர இரத்தம் - தமிழ்க் குருதி - கொதித்தது. அதன் விளைவுதான்...............!

3. வீர பாண்டியன் மூட்டிய தீ

பாளையக்காரர்கள் எல்லாம் பயங்காளிகள் என நினைத்த வெள்ளையர், எல்லோரையும்போல் வீர பாண்டியனையும் எண்ணினர் ; ஆனால் சாம்பலென்று அவர்கள் தொட்ட இடம், கை விரலைச் சுட்டுப் பொசுக்கும் வெந்தணலாயிருந்ததை அனுபவத்தால் அறிந்துகொண்டனர்.

பெரும்பாலான தமிழ் நாட்டுப் பாளையக்காரர்கள் அச்சமே தங்கள் ஆசாரமாகக் கொண்டபோதிலும், தமிழினத்தின் வீரத்திற்கே உரிய எடுத்துக்காட்டாகச் சில பாளையங்கள் விளங்கின. அவற்றுள் முதன்மையானது பாஞ்சாலங் குறிச்சியே யாகும். அதை ஆண்ட மன்னனே ' மானாபரணன் ' எனப் புலவரும் மக்களும் தலைவணங்கிப் போற்றத் தமிழ் வீரத்தின் தலைசிறந்த இலக்கியமாய்த் திகழ்ந்த வீரபாண்டிய கட்டபொம்மன்.

1760ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், மூன்றாம் நாள் ஜகவீர கட்ட பொம்மன் என்பானின் மகனாகத் தோன்றினான் நம் சுதந்திர வீரன் கட்ட பொம்மன். இவனுடன் பிறந்த தம்பியர் இருவர். இவர்களே குமாரசாமியும் துரைசிங்கமும். கட்டபொம்மனைக் 'கறுத்தையா ' என்றும், குமாரசாமியைச் 'சிவத்தையா' என்றும், துரைசிங்கத்தைச் ' சுப்பையா ' என்றும் அழைப்பர். இவருள் சிவத்தையா அல்லது குமாரசாமி என்பான் நிகரற்ற வாள் வல்லமை படைத்தவன் ; ஆனால் திருத்தமுறப் பேசும் வாய் வல்லமை இல்லாதவன். எனவே இவனை ' ஊமைத்துரை ' என மக்கள் உள்ளன்போடு அழைப்பர்.

வீர பாண்டிய கட்டபொம்மனின் ஆதிமூதாதையரான பால் ராஜ் என்பவர் ஆந்திரர். பெல்லாரி ஜில்லாவைச் சேர்ந்த அவர் பஞ்சத்தின் காரணமாகத் தம் பிறந்தகம் பெயர்ந்து, தமிழகத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் தஞ்சம் புகலானார். அவ்வாறு தமிழகம் போந்த பால்ராஜ் திருநெல்வேலியை அடுத்த சாலிகுளத்தில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் குடியேறினார். அவர் மகன் பொம்மு என்பவன் சாலிகுளத்தை அடுத்துள்ள அழகிய வீரபாண்டிபுரம் என்னும் ஊரை ஆண்டுவந்த ஜகவிர பாண்டியன் என்பானது படைத்தளபதியானான். அவன் ஆற்றலைப் போற்றிய மக்கள் ' கெட்டிபொம்மு' என அவனை ஆர்வத்தோடு அழைக்கலாயினர். ' கெட்டி பொம்மன் ' என்ற தெலுங்குப் பெயர் நாளடைவில் ' கட்ட பொம்மன் ' என்ற தமிழ்ப் பெயராயிற்று. பெயர் மட்டுமோ அவ்வாறு ஆயிற்று ? பால் ராஜாவின் பரம்பரையே தமிழ்ப் பண்பில் ஊறிக் கலக்கலாயிற்று. அழகிய வீரபாண்டியபுரத்தை ஆண்டு வந்த தமிழ் மன்னன் ஜெகவீர பாண்டியன் தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் தனக்கு மைந்தன் இல்லாக் குறையால் மனம் நொந்து இருந்தான். அந்நிலையில் பாண்டிமன்னர் மரபில் வந்த அவன் ஆதி கட்டபொம்மனது அறிவையும் ஆற்றலையும், தஞ்சமென வந்தவரைத் தழுவிப்போற்றும் தமிழகத்தின்பால் அவன் கொண்டிருந்த தணியாக் காதலையும் ஆழ்ந்து கருதினான்; அதன் பயனாக ' ஆந்திரன் ' என்றும் பாராமல் அவனை அரசனாக்கினான். இவ்வாறு அகதியாய் வந்து, தன் அறிவாலும் ஆற்றலாலும் தமிழகத்தின்மீது கொண்ட அன்பாலுமே அரசாளும் வேந்தனாகும் வாய்ப்புப் பெற்ற அக் கட்டபொம்மனது அரச மரபில் 47ஆம் வேந்தனாக வந்தவனே தமிழகத்

தின் அரசுரிமைக்காகச் சுதந்திரப் போர் தொடுத்த நம் தலைவன் வீரபாண்டிய கட்டபொம்மன். ஆம். 47 தலை முறைகளாகத் தமிழகத்திலேயே செங்கோலோச்சி வாழ்ந்த மரபைச் சார்ந்தவன் வீரபாண்டிய கட்டபொம்மன். அவன் பிறந்த நாடு தமிழ் நாடு. அவன் பேசியது தமிழ் மொழி. அவன் வளர்ந்து வாழ்ந்த பண்பாடு தமிழ்ப் பண்பாடு. அதுமட்டுமோ? அவன் எந்தத் தமிழகத்தில் பிறந்தானோ, அந்தத் தமிழகத்திற்காகவே வாழ்ந்து, அந்தத் தமிழகத்தின் சுதந்திரத்திற்காகவே போரிட்டான், மடிந்தான்.

வீர பாண்டியன் 1790 ஆம் ஆண்டு, பிப்ரவரி, 2ஆம் நாள் பாஞ்சாலங் குறிச்சியின் வேந்தனானான். முப்பதே ஆண்டினனான வீர பாண்டியன் பாஞ்சாலங் குறிச்சியின் ஆட்சி உரிமை ஏற்ற நாளில் தமிழகத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை நாம் முன்பே கண்டோம். நவாபின் தர்பாரில்சீமைத்துரைமார் வைத்ததே நாடெங்கும் சட்டமாக இருந்தது. செந்தமிழ் நாடு தன் சுதந்திர ஒளி இழந்து அவர்கள் கையில் சிக்கித் தவித்தது. ஏழை எளிய மக்களை எல்லாம் 'வரிவரி' என்று வாட்டி வதைத்தனர் கம்பெனி அதிகாரிகள். உழவர்கள் வடித்த துயரக் கண்ணீரோ சொல்லி முடியாது. இந்நிலையில் பாளையக்காரர்களின் நிலையும் செக்கிலகப்பட்ட எள்ளாயிற்று. 'கப்பம், கப்பம்' என்று அவர்களைக் கசக்கிப் பிழிந்தனர் வெள்ளை அதிகாரிகள். மானத்தோடு வாழ்வதிலும் மண்ணாளும் பதவியே பெரிதென நினைத்த பாளையக்காரர் பலர் துரைமார் சொல்லுக்குத் தலைவணங்கிக் கைகட்டி வாழும் ஈன வாழ்க்கையையே இனிது என மேற்கொண்டனர். ஆனால் வீர பாண்டியனோ இதற்கு விலக்கானான்; அடிமை என

வாழ்வதிலும் அரசுரிமைக்காகப் போரிட்டு மடிவதே மேல் என உறுதி கொண்டான்.

கம்பெனி அதிகாரிகள் கட்டபொம்மனைப் பயமுறுத்திப் பணம் வசூலிக்க முயன்றனர்; 'எங்கே கப்பம்? எடு' என்றனர். வீர பாண்டியன் கண்கள் சிவந்தன. 'கப்பமா? எதற்குக் கப்பம்? வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்குக் கிஸ்தி ஏது?' என்று அவ்வீரன் சிங்கம்போல் சீறி எழுந்தான். வீர பாண்டியனது கோபக்கனல் கண்டான் ஆலன் என்னும் ஆங்கில அதிகாரி; 'ஆறாயிரம் பொன் கொடுத்தால் போதுமப்பா! இந்தத் திக்கிற்கே திரும்போம்' என்று நயவுரை பகர்ந்தான். உள்ளத்தில் நஞ்சும் உதட்டில் தேனுமாய் ஆலன் பேசியது கேட்டான் வீர பாண்டியன்; நகைத்தான். 'வெள்ளைத் துரையே, தலைமுறை தலைமுறையாக எங்கள் பாண்டிய மரபு பிறர்பால் கப்பம் வாங்கியதுண்டு. ஆனால் எவர்க்கும் காணிக்கை செலுத்தி, கைகட்டிப் பிழைத்ததில்லை. அதனால் தம்படியும் தரமாட்டேன்' என்றான் வீரம் பொங்கும் விழிகளுள்ள வீர பாண்டியன். நயம், பயம் இரண்டிற்கும் வீர பாண்டியன் பணியாதது கண்ட அதிகாரிகளுக்கு ஆத்திரம் பொங்கியது. 'உன்னையும் உன் அரசையும் அழிப்பதே எங்கள் வேலை' என்று வெதும்பியது அவர்கள் உள்ளம். ஆனால் வீர பாண்டியனோ எதற்கும் அஞ்சினானில்லை.

'ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று'

என்ற குறள் நெறி நிற்க அவ்வீரன் உறுதிகொண்டான்.

நேருக்கு நேர் நின்று போர்புரிய மாட்டாத கோழை, முதுகில் குத்த வருவதுபோல் வெள்ளை அதிகாரிகள்

வீர பாண்டியனை எவ்வாற்றானும் வெல்ல எண்ணற்ற வஞ்சகச் சூழ்ச்சிகள் செய்யலாயினர்; பாளையக்காரர்கட்கு இடையே பிரித்தாளும் சூழ்ச்சியை வெற்றிகரமாகக் கையாண்டு அவனுக்கெதிராகப் பழியையும் பகையையும் பெருக்கினர். அதோடு அவர்கள் வீர பாண்டியனைத் துன்புறுத்தித் தங்கள் காரியத்தைச் சாதிக்கவும் திட்டமிட்டனர்.

கம்பெனியின் வரி வசூலிக்கும் கலெக்டரான ஜாக்சன் ஒரு வாரத்திற்குள் தன்னை நேரில் கண்டு பேச வேண்டுமென்று வீர பாண்டியனுக்குச் செய்தி அனுப்பினான். வீரபாண்டியன் அதை விரும்பவில்லை என்றாலும் சுற்றுச் சூழ்நிலை காரணமாக, 'நேரிலேயே தனியாகவே கலெக்டரைக் காண்போம்; நம் உறுதியைக் காட்டுவோம்; அவன் பகையைத் தொலைப்போம்' என்று கருதினான்; ஆயினும் அவன் தம்பியரின் வற்புறுத்தலால் தக்க படைகள் சூழப் பல்லக்கில் ஏறித் திருநெல்வேலி சென்றான். வீர பாண்டியன் தன்னைக் காணப் படைகள் சூழ வருவது அறிந்தான் ஜாக்சன். அவன் பலத்தில் அவனுக்கே நம்பிக்கை இல்லை. அவன் வீரபாண்டியனை நெடுந்தொலைவு இழுத்தடித்து அவமானப் படுத்தத் திட்டமிட்டான்: திருநெல்வேலி, குற்றாலம், ஸ்ரீ வில்லிபுத்தூர், சங்கரநயினார் கோவில், திருச்சுழி, அலங்காநல்லூர், கமுதி என்று இவ்வாறு 400 மைல் தூரம் அவனை இழுத்தடித்தான். இக்கொடுமை 23 நாட்கள் நடந்தது. நாடாளும் மன்னனுக்கு நாடோடிகள் செய்த அவமானம் என்னே! நினைத்தாலும் நெஞ்சம் குமுறுகிறது. இறுதியாகக் கலெக்டர் ஜாக்சன் இராமநாதபுரத்தில் வீர பாண்டியனைக் கண்டு பேச இணங்கினான். 'இந்த வெள்ளையன் எங்கேதான் போவான்? போகட்டுமே! இலங்கை

போனாலும் தொடருவேன்; இவன் நெஞ்சாழத்தைக் காணாமல் திரும்பேன்' என்று உறுதி கொண்டிருந்த வீர பாண்டியனும் இராமநாதபுரத்தில் ஆபத்து எதுவும் நேர்ந்தால் உதவும் பொருட்டுச் சுற்றிலும் தன் படைகளை நிறுத்தி வைத்துவிட்டுக் கலெக்டர் ஜாக்சன் தங்கியிருந்த 'இராமலிங்க விலாசம்' என்னும் மாளிகையினுள் நுழைந்து மேல்மாடிக்குச் சென்றான். கட்டபொம்முவின் வீரத்தோற்றத்தைக் கண்ட ஜாக்சன் வெகுண்டான்; கோபக்கனல் தெறிக்கப் பொய் மலிந்த குற்றச்சாட்டுக்களை எல்லாம் வீர பாண்டியன்மீது வீசினான். அவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த கட்டபொம்மனும் தன்மீது சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் கணீர் கணீர் என்று பதிலுரைத்து, மமதைகொண்ட ஜாக்சனின் வாயை அடக்கினான். வெல்லுஞ்சொல் வேறொன்றும் இல்லாதவாறு வீர பாண்டியன் கூறிய தீர மொழிகளைக் கேட்ட வெள்ளைக் கலெக்டர் அறிவும் அமைதியும் இழந்து, ஏற்கெனவே திட்டமிட்டு மறைந்திருக்கச் செய்த கூலிப்படைகளை வெளியே வருமாறு கூவினான்; 'பிடி கட்டபொம்மனை, பூட்டு விலங்கை' எனக் கதறினான். வஞ்சகனது கள்ளத்தை அறிந்த கட்டபொம்மன் கை உடைவாளைப் பற்றியது. அவன் உடல் துடித்தது; இரத்தம் கொதித்தது. அக்குரிசில் சரேலென எழுந்தான்; கலெக்டர் ஜாக்சனை ஒருமுறை உற்றுப் பார்த்துப் புன்னகை புரிந்தான். 'நீயும் ஒரு மனிதனோ' என்று கூறுவது போலிருந்தன அவன் பார்வையும் சிரிப்பும். 'நரியின் புதரில் கால் வைத்தது நம் தவறு' என நினைத்துக்கொண்டே மாடியை விட்டுக் கீழே இறங்கினான் கட்டபொம்மன். அச்சமயம் ஆணவமே வடிவெடுத்த ஜாக்சன், 'நில்' எனக்

கூறி, வீர பாண்டியன் மடியைப் பிடித்து இழுத்தான். வீர பாண்டியன் உடலும் உள்ளமும் நெருப்பாயின. அவன் ஒரு தள்ளு தள்ளினான். அலறிய வண்ணம் உருண்டான் ஜாக்சன். எஜமானுடைய அலறலைக் கேட்ட கம்பெனி வீரர்கள் கட்டபொம்மன்மீது பாய்ந்தனர். எஜமானைப் போலவே புத்தி படைத்த தளபதி கிளார்க் வீர பாண்டியன்மீது வாளும் கையுமாகப் பாய்ந்தான். பரதேசிக் கூட்டத்தின் வெறிச்செயலைக் கண்ட கட்டபொம்மன் தோள்கள் துடித்தன; உருவினான் வீர வாளை; சிங்கம் போல் கர்ஜித்தான்; எதிர்த்தோருடன் தனி ஒருவனாய் நின்று போராடினான். அதில் பாஞ்சைப் பதியான் வாளுக்குப் பலர் இரையாயினர். இந்நிலை கண்ட தளபதி கிளார்க் வீர பாண்டியனை எதிர்த்துச் சினம் கொண்ட பாம்புபோல் சீறினான். இருவருக்குமிடையே கடும்போர் - வாட்போர் - மூண்டது. முடிவில் வீர பாண்டியன் தன் கூர் வாளால் தமிழ் மண்ணின் சுதந்திரத்தைத் தட்டிப்பறிக்க நினைத்த வெள்ளைத் தளபதியை வெட்டி வீழ்த்தினான். மண்வெறி கொண்ட தளபதி மண்ணுக்கு இரை யானான். இதற்குள் இராமலிங்க விலாஸ மாளிகையின் புறத்தே இருந்து வீர பாண்டியனது சிங்கக் கர்ஜனை கேட்டு ஓடிவந்த மறவர் படைக்கும் கம்பெனிப் படைக்குமிடையே பெரும் போர் எழுந்தது. அப்போரில் வீர பாண்டியன் தம்பி ஊமைத்துரையே தமிழர் படைக்குத் தலைமை தாங்கினான். அந்த வீரத் தலைவன் வாளுக்கு அன்று கிடைத்த விருந்து பெருவிருந்தே!

'இராமலிங்க விலாச' நிகழ்ச்சி கம்பெனி அதிகாரிகட்குக் குலை நடுக்கம் தந்தது. பிறநாட்டு மக்களைச் சூறையாட வந்தவர்கள் எனினும், தம் நாட்டவர் இரத்தம்

சிறிதும் சிந்தச் சகியாத பண்பு படைத்தவர்களன்றோ வெள்ளைத் துரைமார்கள்! எனவே வீரபாண்டியன் - மாக்ஸ்வெல் சச்சரவுபற்றித் தீர விசாரித்தனர். இந்த விசாரணையில் வீர பண்டியன் தூத்துக்குடியிலிருந்து தன் வெள்ளை நண்பன் டேவிட்சனை, நிகழ்ந்த நிகழ்ச்சி பற்றிய உண்மைகளை எல்லாம் நடுவுநிலைமையோடு விளக்கி எழுதச்செய்திருந்த கடிதம் பெரிதும் பயன்பட்டது. அதன் விளைவாகக் கம்பெனி அதிகாரிகள், 'ஜாக்ஸன் வீர பாண்டியனிடம் நடந்துகொண்ட முறை அநியாயமானது; தேவையற்றது; நம் நோக்கத்திற்கே தீமை பயப்பது' என்று தீர்ப்பளித்தனர். அதோடு அவனைக் கலெக்டர் பதவியினின்றும் உடனே நீக்கி, அப்பதவிக்கு S. R. லூஷிங்டன் என்பவனை நியமித்தனர்; அதோடு இராமலிங்க விலாச நிகழ்ச்சியில் கைதி செய்யப்பட்ட பாஞ்சைப்பதியின் தலைமை நிருவாகி தானாபதிப் பிள்ளையையும் விடுதலை செய்தனர். கம்பெனி நிருவாகம் கலெக்டரை மாற்றியது; ஆனால் தன் கருத்தை ஒரு சிறிதும் மாற்றிக்கொள்ளவில்லை. புதிய கலெக்டர் லூஷிங்டன் தன் அறிவிற்கும் கற்பனைக்கும் எட்டிய எல்லா வழிகளையும் ஒன்றுவிடாமல் பயன்படுத்திக் கட்டபொம்மனைத் தன் கருத்திற்கு இணங்கவைக்கப் பார்த்தான். ஆனால் தான் செய்த முயற்சிகளனைத்தும் வீர பாண்டியனது நெஞ்சுறுதியால் பாழாய்ப்போனதை அறிந்து பதைத்தான்; கம்பெனி மேலதிகாரிகளுக்குக் காரசாரமான கடிதம் எழுதினான். அதில் வீர பாண்டியனைப் படைப்பலத்தால் அழிப்பது ஒன்றே அமைதிக்கு வழி என்றும் குறிப்பிட்டிருந்தான். அப்போது சென்னையில் கவர்னராய் இருந்தவன் இந்தியாவை அடிமைப் படுத்திய லார்ட் கிளைவின் மகன் எட்வர்ட் கிளைவ் என்பான். அவன் தன்

அதிகாரிகளை அழைத்து, ஆழ்ந்த ஆலோசனை நடத்தினான். அதன் பயனாகப் பாஞ்சைப்பதியானைத் தாக்க மேஜர் பானர்மன் என்பவன் போர் நிகழ்த்துவது உட்பட எல்லா அதிகாரங்களும் படைத்தவனாக, திருநெல்வேலிச் சீமையின் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டான். அவ்வாறு அவன் சர்வதிகாரம் பெற்றுப் படையெடுக்கப் போகும் செய்தி திருநெல்வேலி சீமை முழுதும் பறையறைவிக்கப்பட்டது. ஆம். ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வயிறு வளர்க்க வந்த கூட்டம் தமிழகத்தின்மீது படையெடுக்கத் தமிழகத்திலேயே தண்டோரா போட்டது. என்ன கொடுமை !

மேஜர் பானர்மன் போருக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தான் ; எனினும் இரத்தம் சிந்தாமலே வீர பாண்டியனைப் பாஞ்சாலங் குறிச்சியினின்றும் வெளியேற்றிக் கைது செய்யச் சதி புரிந்தான்; தூதுவர் வாயிலாகச் சமரசம் பேசும் பொருட்டுக் கட்டபொம்மனைப் பாளையங்கோட்டைக்கு வரும்படி அழைத்தான். ஆனால், வெள்ளையரின் கள்ளமெல்லாம் ஆதி முதல் நன்கறிந்திருந்த கட்டபொம்மனோ பஞ்சாங்கத்தில் நாள் நன்றாக இல்லை எனப் பதிலுரைத்து ஏய்க்கலானான். வீர பாண்டியனை நம்பிப் பயனில்லை என அறிந்தான் மேஜர் பானர்மன் ; இனியும் காலதாமதம் செய்வது தற்கொலைக்கு ஒப்பாகும் எனக் கருதினான்; எனவே உடனே படையெடுக்கத் துணிந்தான். அச்சமயம் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்களின் குலதெய்வமான தேவி ஜக்கம்மாவுக்குத் திருவிழா நடந்துகொண்டிருந்தது. அதற்காகப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையிலிருந்து பாதிக்கு மேற்பட்ட வீரர்கள் சென்றிருந்தனர். அவர்களுடன் வீர பாண்டியனுடைய இரு தம்பியரும்

மற்றும் பலரும் போயிருந்தனர். இந்த உண்மையை எவ்வாறோ ஒற்றறிந்த மேஜர் பானர்மன் பகலவன் ஒளி மறைய, பேரிருள் எங்கும் பரந்த நேரத்தில் தன் படைகளைக் காற்று வேகத்தில் கடத்திச் சென்று, பாஞ்சாலங் குறிச்சியின் எல்லையை நள்ளிரவிற்குள் எட்டிப் பிடித்தான்.

ஏற்கெனவே பாளையங்கோட்டையில் நடப்பதை எல்லாம் அறிந்து தெரிவிக்குமாறு வீர பாண்டியன் அமைத்திருந்த ஒற்றர்கள் பானர்மன் படை திரட்டி வரும் செய்தியை மின்னல் வேகத்தில் கட்டபொம்மன் காதுகளுக்கு எட்டுமாறு செய்தனர். நள்ளிரவில் வீர பாண்டியனுக்குச் செய்தி கிடைத்தது. 'என்ன ஆணவம் இந்த வாணிபக் கூட்டத்திற்கு!' என்று அவன் வெகுண்டான். 'விடியுமுன் பாஞ்சை வீரர்கள் யாவரும் கோட்டைக்குள் திரளவேண்டும்' என்று ஆணை பிறப்பித்தான். அவனிட்ட கட்டளை திக்கெட்டிலும் முரசறைந்து தெரிவிக்கப்பட்டது. தமிழ் மறவர் நாற்றிசையிலிருந்தும் வெள்ளமென விரைந்து வந்தனர் ; ஆனால் அதற்குள் கம்பெனிப்படை கோட்டையைச் சுற்றி அணிவகுத்து முற்றுகையிட்டிருப்பதைக் கண்டனர். எனினும் அஞ்சாது அணிவகுப்பைக் கிழித்துக் கொண்டு உட்புகுந்தனர் ஊமைத்துரையும் அவன் இளவலும். மற்றவர்களும் தங்கள் உயிரனைய கோட்டைக்கு உற்ற தீங்கைக் கேட்டுத் தீயென உள்ளம் கனன்று ஓடி வந்து அரணுக்குள் நுழைந்தனர்.

கடும்போர் மூண்டது. கம்பெனிப்படையின் வசமிருந்த பேய்வாய்ப் பீரங்கிகள் அலறின. நெருப்பு மழை போல் பாஞ்சைக் கோட்டையின்மீது தீக்குண்டுகள் பொழியப்பட்டன. ஆயினும் பாஞ்சை வீரர்கள் கலங்க

வில்லை. ஈட்டிகளை எறிந்தும், கவண் கற்களை வீசியும், எதிர்த்து வந்த பகைவரைக் கண்டதுண்டமாக வெட்டியும் கடும்போர் புரிந்தனர்; இடிபோல் முழங்கி, எதிரிகள் அணிவகுப்பைச் சிதைத்து, உள்ளே புகுந்து, தம் வஞ்சம் தீர, பானர்மன் நெஞ்சம் பதைப்பதைக்க, வெள்ளைப் படைகளை வெட்டித் தள்ளினர். பாஞ்சைவீரரின் அடக்கலாகா சினத்தைக் கண்ட பானர்மன் மேலும் மேலும் தன் பீரங்கிப்படைகளை முடுக்கிவிட்டான். இதையறிந்த வீர பாண்டியன் படைவீரர் வெறிகொண்டு கம்பெனிப் படையைத் தாக்கினர். இந்நிலையில் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையின் ஒரு புறத்தில் பிளவு கண்டது. மகிழ்ச்சியால் ஆர்த்தது கம்பெனிப்படை. ஆனால் வீர மறவர் நெஞ்சமோ துடிதுடித்தது.

கோட்டை பிளவு கண்டது அறிந்த காலன் என்னும் ஆங்கிலத் தளகர்த்தன் பரிமீதேறி அவ்வழி பாய்ந்தான். அவ்வாறு அவன் அம்புபோல் விரைந்து வருவதைக் கூர்ந்து கவனித்தான் வெள்ளையத் தேவன் என்னும் மறக்குல மாவீரன். கோட்டையின் பிளவைக் காலன் நெருங்கியதும் வெள்ளையத் தேவன் தன் கை வேலைக் குறி பார்த்து ஏகாதிபத்திய வெறியனது இதயத்தில் பாய்ச்சினான். தமிழ் வீரன் பாய்ச்சிய வேல் காலன் உடலில் ஊடுருவிப்பாய்ந்து, வெளிவந்து வெற்றிச் சிரிப்புச் சிரித்தது. அங்கேயே அக்கணமே பலியானான் காலன். அவனைத் தொடர்ந்துவந்த தளகர்த்தர் எழுவரும் கல்லாலும், வில்லாலும், வேலாலும், வாளாலும் தாக்குண்டு, காலன் சென்ற உலகிற்கே கடுகிச் சென்றனர். தளகர்த்தர்கள் தலையெல்லாம் தரையில் உருளுவது கண்ட கம்பெனிப்பட்டாளம் கதிகலங்கிச் சிதறி ஓடியது. படைகளெல்லாம் சிதறி ஓடும் நிலைகண்ட பானர்மன்

தன் கடுஞ்சினத்தாலும் கட்டளையாலும் கம்பெனிப் படைகளைத் திரட்டி, மீண்டும் போரிடச்செய்தான். இரு திறப் படைகளும் கடும்போர் புரிந்தன. இரத்த வெள்ளம் ஆறாகப் பெருகியது. கட்டபொம்மனும் ஊமைத்துரையும் வீர கர்ஜனை புரிந்தனர். அது கேட்ட தமிழ் வீரர் உயிரைத் துரும்பென மதித்துக் கம்பெனிப் படைகளைச் சின்னாபின்னமாகும்படி வேல், கம்பு, வளரித் தண்டு, குத்தீட்டி, சுருள்வாள் முதலியன கொண்டு தாக்கிப் புடைத்தனர். பானர்மன் படைகள் இருக்குமிடம் தெரியாமல் மறைந்தன. 'ஒழிந்தது வெள்ளைப் படை' என்று தோள் கொட்டித் துள்ளினர் வீர மறவர். ஆனால் வீர பாண்டியன் மனத்திலோ மகிழ்ச்சி இல்லை. பானர்மன் திட்டப்படி புதிய படைகள் வந்து சேரின் நிலைமை என்னவாகும் என அவன் கலங்கினான். குறைந்த படையுடன் கோட்டைக்குள்ளேயே இருந்து பேய்வாய்ப் பீரங்கிகட்கு இரையாகிச் சாவதைவிடப் பாஞ்சைப் பதியைவிட்டு வெளியேறி, கிழக்கிந்தியக் கம்பெனியை வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் ஒழிக்கத் தமிழகம் முழுவதையும் தட்டி எழுப்பிப் படை திரட்டவேண்டுமென்று கருதினான்; உடனே தன் அருமைத் தம்பியரும் அமைச்சர் முதலியோரும் சூழ, நள்ளிரவில் கோட்டையை விட்டு வெளியேறினான்.

வீர பாண்டியனுக்கு நாகலாபுரம், சிவகிரி, இராமநாதபுரம் முதலிய பாளையக்காரர்கள் துணை புரிய முன்வந்தனர். அது கண்டு மகிழ்ச்சி கொண்ட கட்டபொம்மன் கோலார்பட்டி சேர்ந்து அங்கு ஒருநாள் இரவு தங்கினான். பொழுது புலர்ந்தது. எட்டயபுரத்தான் செய்த துரோகத்தால் உளவறிந்த கம்பெனிப்படைகள் வீர பாண்டியன் தங்கியுள்ள இடத்தை வளைத்துக்கொண்டதை அவ்வீரன்

அறிந்தான்; உருவிய வாளுடன் வெளிவந்தான்; எதிர்த்து வந்த எட்டப்பன் வீரர்களை வெட்டிச் சாய்த்தான். அண்ணன் ஆத்திரத்தைக் கண்ட தம்பி ஊமைத்துரையும் ஏனைய மறவர்களும் வீரப்போர் புரிந்தனர். அப் பயங்கரப் போரின் விளைவாகப் பலர் மாண்டனர். இதற்கிடையில் வீர பாண்டியனும் அவன் தம்பி ஊமைத்துரை உட்படப் பலரும் தப்பிச் சென்றனர். ஆனால் அமைச்சர் தானாபதிப்பிள்ளையும் அவர் துணைவர் பலரும் கைதாயினர். வீர பாண்டியன் மீண்டும் தப்பிவிட்ட செய்தி பானர்மன் நெஞ்சில் வேதனைத் தீயை மூட்டியது. ஆத்திரங்கொண்ட பானர்மன் வீர பாண்டியனுக்குத் துணைபுரிந்த குற்றத்திற்காக நாகலாபுரம் பாளையக்காரரின் இளவலான செளந்திர பாண்டியனையும் கைது செய்தான். கைது செய்யப்பட்ட தானாபதிப் பிள்ளையையும் செளந்திர பாண்டியனையும் விசாரிக்க நீதிமன்றமும் ஏற்படுத்தினான் பானர்மன். இருவரும் விசாரிக்கப்பட்டனர். விசாரணையின் முடிவு பயங்கரம். இருவருக்கும் தூக்குத்தண்டனை! அவர்கள் சொத்தெல்லாம் பறிமுதல்! ஆம். பேயரசின் காட்டாட்சி!

பானர்மன் ஆத்திரம் இதோடு அடங்கவில்லை. பாஞ்சாலங்குறிச்சி மக்களை வாட்டி வதைத்தான் அந்தப் பாவி; வீர பாண்டியனது குடும்பம் முழுவதையும் கைது செய்தான்; ஆயுதம் தாங்கும் உரிமை யாருக்கும் இல்லையென்று அறிவித்தான். அந்தோ! அடிமை வாழ்வின் கொடுமைதான் என்னே! எங்கிருந்தோ வந்த பரதேசி வெள்ளையரிட்ட ஆணையால் வீர மறவர்கள் அனைவரும் மணியிழந்த நாகம்போல் ஆயினர். இத்தனையும் போதாதென்று வீர பாண்டியன் தலைக்கும் விலை வைத்தான் பானர்மன்; நாற்றிசையும் ஆட்களை அனுப்

பித் தேடினான்; இறுதியில், ‘வெள்ளையர்க்குக் குற்றவேல் புரிந்து வயிறு வளர்க்க, வாழ்க்கையையே தத்தம்செய்து விட்ட புதுக்கோட்டை மன்னன் வீர பாண்டியனைப் பக்குவமாகத் தன் மாளிகையில் சிக்கவைத்துவிட்டான்’ என்ற செய்தி அறிந்தான்; மகிழ்ந்தான். 1799-ம் ஆண்டு, அக்டோபர் 1-ம்தேதி பகல் 3 மணிக்குப் புதுக்கோட்டை அரண்மனை கம்பெனிப்படைகளால் சூழப்பட்டது. அப் படையில் எட்டயபுரத்து வீரர்களும் இருந்தனர்.

அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வீரபாண்டியன் அரவங்கேட்டு விழித்தான்; புதுக்கோட்டை மன்னனது நயவஞ்சகச் செயலை நினைத்தான்; ‘தமிழ் மண்ணே, உன் வயிற்றிலுமா துரோகிகள் பிறப்பது!’ என்று குமுறினான். அவன் உடம்பின் ஒவ்வொரு அணுவும் நொந்தது. இதற்குள் அரண்மனையின் மேல்மாடியில் தம்பியுடன் தற்காப்பின்றித் தங்கியிருந்த தன் நிலையை அறிந்து கம்பெனி வீரர்கள் கடுகி வருவதை அவ்வீரன் கண்டான்; உறங்கும் நேரமாதலால் உடைவாளுமில்லாதிருந்த தன்னிலையை நினைந்தான்; மனம் கொதித்தான்; எனினும் கலங்கினானில்லை; ‘செய்வதைச் செய்யுங்கள்’ என்றான். வீர பாண்டியன் கைகளிலும் ஊமைத்துரையின் கரங்களிலும் விலங்குகள் பூட்டப்பட்டன. புதுக்கோட்டை மண்ணில் விருந்தினனாக, அரசனாக நுழைந்த கட்டபொம்மன் சுதந்திரத் துரோகியின் சூழ்ச்சியால் கைவிலங்கோடு கைதியாக வெளிவந்தான். அந்நேரத்தில் அப்பெருமகனின் வீரவிழிகள் புதுக்கோட்டை மன்னனை ஒருமுறையேனும் பார்க்கவேண்டுமென்று துடித்தது. ஆனால் சிங்கத்தின்முன் சிறு நரி வரத்துணியுமோ?

வீர பாண்டியன் சிறைப்பட்டான். தென் பாண்டி நாட்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி தலைவிரித்

தாடியது. பாளையக்காரர்களின் கோட்டை கொத்தளங்களெல்லாம் இடித்துத் தூளாக்கப்பட்டன. ஆயுதங்கள் யாவும் பறிமுதலாயின. எது நேர்ந்தாலும் ஏதும் செய்ய முடியாத பயங்கரச் சூழ்நிலையை மக்கள் மனத்தில் உண்டாக்கினான் பானர்மன். இதில் வெற்றிகண்ட அவன் கட்டபொம்மனை விசாரணைக்காகக் கயத்தாற்றிற்குக் கொண்டுபோனான்; வீர பாண்டியனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினான். நீதியின் பெயரால் விசாரணை நாடகம் நடந்தது. முடிவு? தூக்குத்தண்டனை! ஆம். நாடாளும் மன்னனுக்கு நாடோடி அளித்த தீர்ப்பு அது. வீர பாண்டியன் தனக்கு விதித்த தண்டனையைக் கண்டு நடுங்கினானில்லை. ஆனால் பானர்மன் கண்கள் வீர பாண்டியனைக் காண அஞ்சின. முன்கூட்டியே உத்தரவு அனுப்பி, வீர பாண்டியனைத் தூக்கிலிடும் கோரக்காட்சியைக் காண்பதற்காகவே அழைக்கப்பட்டு வரிசையாக அமர்த்தப்பட்டிருந்த பாளையக்காரர்கள் அனைவரும் பொம்மைகள்போல் அசையாது இருந்தனர். அசைவதற்குக்கூட அவர்களுக்கு உரிமை ஏது?

வீர பாண்டியன் உள்ளம் குமுறியது. அவன் கண்கள் தீப்பிழம்பாய் விளங்கின. அவன் சுற்றிச்சுற்றிப் பார்த்தான்; எங்கும் துரோகிகளின் கூட்டமே இருக்கக் கண்டான். 'பேடிகளே, பதர்களே, நீங்களும் தமிழர்களோ?' என்று அவர்களைநோக்கி அவன் இருவிழிகளும் பேசின. அவன் தன் அருமைத் தம்பியின் திருமுகங் காணத் துடிதுடித்தான்; முடியவில்லை; 'அந்த வாய்ப்பும் இல்லையே' என்று உள்ளம் வெந்தான்; எனினும் தன் நெஞ்சுறுதியைக் கைவிட்டானில்லை; தன்னைக் கொல்லக் காத்திருந்த கட்டைப் புளியமரத்தினடியில் சென்று நின்றான். அவனை அறியாமல் அவன் உதடுகள் பேசின.

'இப்படி அந்நியனால் கைது செய்யப்பட்டுச் சாவதைவிட என் அருமைப் பாஞ்சைக்கோட்டையை விட்டு வெளியேறாது அங்கேயே பகைவனால் வெட்டப்பட்டு, வீர மரணம் அடையாது போனேனே' என்று அவ்வீரன் கூறினான்; இச்சொற்களைக் கூறிச் சில விநாடிகள் கண்மூடி மௌனியாய் நின்றான்; பிரார்த்தித்தான்: "இறைவனே, இந்திய சுதந்திரப் போரைத் தொடங்கிவைக்கும் பாக்கியத்தைத்தான் எனக்குக் கொடுத்தாய். ஆனால் அதை முடித்துவைக்க என்னால் இயலவில்லை. ஆயினும் என் வீர சந்ததியாரேனும் அதைத் தொடர்ந்து நடத்தி, துச்சமென அடிமை வாழ்வை உதறித்தள்ளி, சுதந்திர மக்களாக வாழ அருள்புரிவாயாக!" என்றுதான் அவன் ஊனும் உள்ளமும் உயிரும் பிரார்த்தித்திருக்கும்.

பிரார்த்தனை முடிந்தது. கட்டைப் புளியமரத்தில் வீர பாண்டியனைக் கொல்வதற்கென்றே அரவுபோல் சுருண்டிருந்த கயிற்றை அவ்வீர மகன் எடுத்தான்; தன் கழுத்தில் மாட்டிக் கொண்டான்; காலடியிலிருந்த நாற்காலியை உதறித் தள்ளினான்; ஆம். இந்த உலக வாழ்வையும் உதறி எறிந்தான்.

வெள்ளையரால் வீரபாண்டியனைத்தான் கொல்ல முடிந்தது. ஆனால் அவன் இலட்சியத்தைக் கொல்ல முடியவில்லை. அவன் சிந்திய இரத்தமும், செய்த தியாகமும், மிகப்பெரிய சுதந்திரப் போராகப் பின்னாளில் கிளம்பின. அதன் விளைவாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அழிந்தது. ஆனால் அவன் புகழ் அழியவில்லை: அழியவும் முடியாது.

வீர பாண்டிய கட்டபொம்மனைத் தூக்கிலிட்டுக் கொன்றதன் வாயிலாக அவன் மூட்டியதீ - பெருந்தீ - அணையாத் தீ - அணைந்து விட்டதாகவே எண்ணினர் வெறிபிடித்த வெள்ளை அதிகாரிகள். ஆனால்..........?

4. நீறு பூத்த நெருப்பு

1799ஆம் ஆண்டு, அக்டோபர் 16-ம் தேதி. ஆம். அன்றுதான் வீர பாண்டியன் தூக்கிலிடப்பட்டான். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எமன்போலிருந்த கட்டபொம்மனைத் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டோம் என்ற மகிழ்ச்சி வெள்ளை அதிகாரவர்க்கத்திற்கு இல்லாமலில்லை. ஆயினும் அவர்கள் எச்சரிக்கையாகவே இருக்க விரும்பினார்கள்: அதற்கான ஏற்பாடுகளையும் செய்தனர்; வீர பாண்டியனைக் கொன்ற ஏழே நாட்களில் திருநெல்வேலிச் சீமையில் பாஞ்சாலங்குறிச்சி உட்பட 42 கோட்டைகளை இடித்துத் தள்ளினர்; பாஞ்சாலங் குறிச்சியையும் அதற்குத் துணையாக நின்ற பிற பாளையங்களையும் கம்பெனியின் நேரடி நிர்வாகத்திற்கு இரையாக்கினர். எஞ்சியிருந்த பிற பாளையங்களையும் வெறும் ஜமீன்களாகத் தாழ்த்தினர். எக்காரணத்தை முன்னிட்டும் எவரும் ஆயுதம் தயாரித்தாலோ அல்லது வைத்திருந்தாலோ மரணதண்டனை கிடைக்குமெனப் பறையறைந்து அறிவித்தனர். இந்த அநீதிகளை எல்லாம் கண்ட தமிழ் மக்கள் மனம் எரிமலைபோல் கொதித்தது. 'கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்று கூறிப் பாஞ்சை வீரர்கள் பற்களை நறநறவெனக் கடித்த வண்ணமிருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக அருளும் ஆண்மையும் ஒருருவாகக் கொண்ட அண்ணலை - புரட்சியின் திரு உருவை, முப்பத்தொன்பது ஆண்டுகளே ஆன திருவுடை மன்னனை, தியாகசீலனை - தூக்கிலிட்டுக் கொன்ற வெள்ளைக் கொடியர்களின் வெறிச்செயலை எண்ணி எண்ணி, நெஞ்சு பொருது வேதனைப்பட்டனர்; இரவும் பகலும் எந்நேரமும் பழிவாங்கும் உணர்ச்சியே

அவர்கள் உள்ளத்தில் படர்ந்தது. 'நம் உயிரினும் சிறந்த உத்தமனைக் கொன்ற இந்த நாடோடிகளின் எலும்பை நொறுக்குவதே நம் கடமை' என்று அவ் வீரர்கள் கூறி, வெங்கதிரோனும் வெண்ணிலவும் சாட்சியாகச் சபதம் எடுத்துக் கொண்டனர். பாளையங்கோட்டைச் சிறையில் தன் தோழர்களுடன் பலத்த காவலில் வைக்கப்பட்டிருந்த ஊமைத்துரையோ, 'அண்ணனைக் கொன்ற ஆங்கில வர்க்கத்தை அழிக்காது ஆவி தரியேன்' என்று மண்மீது கையறைந்து உறுதிகொண்டான்.

வீர பாண்டியன் கொல்லப்பட்டதையும், ஊமைத்துரை முதலான தம் அருமைத் தலைவர்கள் சிறையில் கிடப்பதையும் நினைந்து நினைந்து, கைகளைப் பிசைந்த வண்ணம் இருந்தனர் ஆயிரக்கணக்கான இள மறவர்கள். அவர்கள் நெஞ்சில் வீர பாண்டியன் மூட்டிய தீ நீறு பூத்த நெருப்பாயிருந்தது. அதைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் சூழ்நிலை மிக விரைவாகவே உருவாகி வந்தது. தென்பாண்டி நாட்டு வீர இளைஞர்கள் ஓட்டநத்தம் என்னும் சிற்றூரில் நள்ளிரவு நேரங்களில் கூடிப் பலாத்காரப் புரட்சிக்கான திட்டங்களைத் திறம்பட வகுத்தனர்; அதன்வழிச் செயலாற்றவும் துணிந்தனர்.

5. சிறைச்சாலை தகர்ந்தது! எரிமலை வெடித்தது!

1801-ம் ஆண்டு, பிப்ரவரி 2-ம் தேதி, பாளையங் கோட்டைச் சிறைச்சாலையைச் சுற்றிலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட ‘மர்ம மனிதர்கள்’ நடமாடிய வண்ணமிருந்தனர். அவர் அனைவரும் அந்திப்பொழுதை ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்தனர்.

கதிரவன் மறைந்தான். காரிருள் சூழ்ந்தது. அந்நேரத்தில் அத்தனைபேரும் ஒருங்கே திரண்டனர்; வேறு வேறு பூண்டிருந்த வேடங்களைத் துறந்து வீரர்களாகக் காட்சியளித்தனர். புல் கட்டு, விறகு சுமை, காவடி, கமண்டலம் ஆகிய இவற்றிற்குள் ஒளித்து வைத்திருந்த கொலை வாளும், சுருள் வாளும், குத்தீட்டியும், கைத் துப்பாக்கியும், இன்ன பிற கொலைக்கருவிகளும் இருள் கிழித்து எங்கும் மின்னின. எல்லோரும் ஒருங்கு சேர்ந்தனர்; ஒரே நேரத்தில் பாளையங்கோட்டைச் சிறைக்காவலர்களைத் தாக்கினர். வழிமறித்து எதிர்த்த காவலரை-சிப்பாய்களை-வெட்டி வீழ்த்தினர். அவர்களிடமிருந்த ஆயுதங்களை எல்லாம் கைப்பற்றினர். உள்ளே இருந்த ஊமைத்துரையும் மற்றத் தோழர்களும், சிறைக்கு வெளியே வீரர் பட்டாளம் வீறிட்டு எழுந்து தலைவாயிற் கதவுகளைப் புறத்தேயிருந்து தாக்குவது அறிந்து, அப்பட்டாளத்தை மோதினர். சிறைக்கதவுகள் தகர்ந்து வீழ்ந்தன. வெள்ளம்போல் திரண்டிருந்த வீரர் சேனை ஊமைத்துரையையும் அவன் தோழர்களையும் தோள் மீதும் தலைமீதும் தூக்கிக்கொண்டு, ‘வீர பாண்டியன் வாழ்க! வெள்ளை ஆதிக்கம் வீழ்க!’ என்று முழங்கிய

வண்ணம் தங்கள் அருமைப் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிக் காற்றாய்ப் பறந்தது.

அவ்வாறு புரட்சி வீரர்கள் ஓடிவரும் வழியில் திடீரென தங்கட்கு எதிர்ப்பட்ட நூறு பேர் அடங்கிய கம்பெனிச் சிப்பாய்களைத் தாக்கி, அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒன்று விடாமல் கைப்பற்றினர்; பின்னர் ஓட்டமும் நடையுமாய் முப்பது மைல் தூரத்தையும் கடந்து சென்று, பாஞ்சைப் பதிக்குப் பக்கத்திலுள்ளதும், பின்னாளில் கப்பலோட்டிய வீரத்தமிழன் வ. உ. சி. பிறந்த இடமுமான ஒட்டப்பிடாரத்தில் தங்கி இளைப்பாறினர். அவ்வீரர்களின் உள்ளம் கொல்லன் உலைபோல் கொதித்துக்கொண்டிருந்தது. அருமைப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை தரைமட்டமாக்கப்பட்ட அவமானத்தை அவர்கள் எண்ணினர். தங்கள் தந்தையாகத் தாயாகத் தெய்வமாக விளங்கிய வீர பாண்டியன் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்ட கொடுமையை நினைந்தனர். அவர்கள் நெஞ்சம், வெடிக்க இருக்கும் எரிமலை வீறிட்டுக் குமுறுவதுபோலிருந்தது. அவர்கள் உதடுகளைக் கடித்துக் கொண்டனர்; உயிரைவிட்டேனும் கம்பெனிப்படைகளை ஊமைத்துரையின் தலைமையில் போரிட்டு நாசமாக்குவது என்று உறுதிகொண்டனர்.

பொழுது புலர்ந்தது. புரட்சி வீரர்கள் இரவு தாங்கள் போட்ட திட்டங்களை எல்லாம் உருவாக்கத் தீவிரமாக முனைந்தனர். அதற்குள் பாளையங்கோட்டைச் சிறை தகர்ந்ததையும், புரட்சிவீரர்கள் தப்பியதையும் அறிந்த மக்காலே துரை சங்கரநயினார் கோவிலிலிருந்த சிப்பாய்களைக் கயத்தாற்றிற்குச் சென்று, அங்கிருந்து ஆர்க்காட்டு நவாபின் குதிரைப்படைகளோடு சேர்ந்து குலையநல்லூர் போகுமாறு கட்டளையிட்டான்.

1801ஆம் ஆண்டு, பிப்ரவரி 8ம் தேதி குலையநல்லூரில் முகாம் அடித்திருந்த கம்பெனித் துருப்புக்களில் 900 துப்பாக்கி தாங்கிய வீரர்களும் வங்காளப் பீரங்கிப்படையும் இருந்தன. கூடாரமடித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் செய்தி அறிந்த 1200 வீர மறவர்களடங்கிய கூட்டம் இருள் சூழ்ந்ததும் திடீரென்று துப்பாக்கி, ஈட்டி, கத்தி முதலிய கொலைக்கருவிகள் கொண்டு கம்பெனி முகாமைத் தாக்கி நொறுக்கியது. ஆம் இரண்டாவது முறையாக மீண்டும் துவங்கியது போர். பாஞ்சாலங்குறிச்சியை, செந்தமிழ்நாட்டு உரிமையைக் காப்பதற்கான சுதந்திரப் போர், ஊமைத்துரை தலைமைதாங்கி நடத்தும் உரிமைப் போர்.

கம்பெனிப்படைகளும் அதிகாரிகளும் நடுக்கம் கொண்டனர். மறவர் சேனையைத் திருப்பித் தாக்கும் துணிச்சல் அவர்கட்கு இல்லை. அதோடு பிப்ரவரி 9ம் தேதி கம்பெனிப் பட்டாளத்திற்கு இருந்த மனநிலையை அப்பட்டாளத்தின் தளபதியாகவே இருந்த வெள்ளை மேஜர் ஒருவன் கூறுவதைப் பாருங்கள் : ‘இங்கே எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. முதலாவதாக ஆறே நாட்களில் மந்திரத்தாலேற்பட்டது போன்ற ஒரு கோட்டையால் எதிர்க்கப்பட்டோம். இரண்டாவதாக அதன் காவலாளர்கள் தொகை எண்ணிலடங்காத வண்ணம் பெருகி இருந்ததுடன் எங்களைத் தாக்கவும் தயாராக இருந்தனர். **ஆகவே எங்களுக்கு அங்கு இருக்கவேண்டிய வேலையே இல்லை என்று ஒருமனமாகத் தீர்மானித்தோம்.**’

இதிலிருந்து பாஞ்சைவீரர்களைக் கண்டு பலம் பொருந்திய பீரங்கிப்படை - கம்பெனிப்பட்டாளம்-எவ்வளவு நடுங்கியது என்பது புலனாகும். ஆம். நீறுபூத்த நெருப்பாயிருந்த தமிழ் மக்கள் நெஞ்சம் - வேதனையால் குமுறிக்கொண்டிருந்த வீரர்கள் நெஞ்சம்-எரிமலைபோல் வெடித்தது. அந்த எரிமலை கக்கும் கனலை, வாரி வீசும் தீக்குழம்பைக் கண்டு கதிகலங்கிய கம்பெனிப்படை இரவோடு இரவாகப் புறங்காட்டி ஓடியது. ஓடும் வழியிலும் அவர்கட்கு அமைதி உண்டா? அதுதான் இல்லை. கம்பெனிப்பட்டாளம் பாளையங்கோட்டைக்கு மூன்றிலொருபாக தூரத்தில் சென்றுகொண்டிருந்த நேரத்தில்-நள்ளிரவில் - ஊமைத்துரையின் படை காலனும் கண்டு அஞ்சும்வண்ணம் ஆரவாரித்துக்கொண்டு சென்று அவர்களைத் தாக்கியது. ‘செத்தோம், பிழைத்தோம்’ என்று கம்பெனிப் பட்டாளம் பாளையங்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தது. இந்த நிகழ்ச்சிக்குப்பின் வீர மறவர்கட்கும் வெள்ளைச் சிப்பாய்கட்கும் நடந்த போரில் பல இடங்களில் கம்பெனிப்படை முறியடிக்கப்பட்டது. அதோடு ஊமைத்துரை தென்பாண்டி நாடெங்கும் வெற்றிக் கொடி உயர்த்தினான். பதினைந்து நாட்களில் கணக்கற்ற பாளையங்களில் சுதந்திர எழுச்சியும் வீரத்தீயும் கொழுந்துவிட்டு எரிந்தன. தூத்துக்குடி நகரம் புரட்சிப் பட்டாளத்தின் கையில் சிக்கியது. அங்கிருந்த கம்பெனிச் சிப்பாய்கள் அனைவரும் கைதாயினர். ஆயுதங்கள் பறிமுதலாயின. சுருங்கச்சொன்னால் ஸ்ரீ வைகுண்டம் கோவில் தவிர, தென்பாண்டி நாட்டில் எல்லா இடங்களும் சுதந்திரவீரர்கள் வசமாயின. ஆயிரக்கணக்கான துப்பாக்கிகளும் அளவுகடந்த வெடிமருந்தும் மறவர் படையின் உடைமை ஆயின.

இந்நிலையில் புதிதாக எழுப்பப்பட்ட பாஞ்சைக் கோட்டையைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைக் கம்பெனிப் படைகள் செய்தன. பாளையங்கோட்டைக்குப் புறங்காட்டி ஓடிய கம்பெனிப்பட்டாளம் மீண்டும்

சுதந்திர வீரர்களின் கோட்டையை அணுகும் வழியில் பட்ட துன்பம் சொல்லி முடியாது. அங்குலம் அங்குலமாக அவர்கள் மறவர் சேனையை எதிர்த்து முன்னேறிக் கொண்டிருந்தனர். பாய்ந்து வரும் கம்பெனிப் பட்டாளத்தின் குதிரைகளை வீர மறவர்கள் தங்கள் ஈட்டிகளாலேயே குத்திக்கொன்றனர்; இரவில் காடுகளின் இரு புறங்களிலும் உள்ள புதர்களில் பதுங்கியிருந்து கம்பெனிச் சிப்பாய்களை வெட்டிக் குவித்தனர். ஆம். தமிழ் மறவரின் வீர வாளுக்கு அந்நாளில் கிடைத்த இரை ஏராளம்! ஆறே நாட்களில் புதிதாகக் கட்டப்பட்ட பாஞ்சைக்கோட்டை முன் நிலையினும் உறுதி மிக்கதாக விளங்கிற்று. பல்லாயிர வீரர்கள், கிழவர்கள், குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் சேர்ந்து செந்தமிழ்நாட்டின் சுதந்திரத்தையே காக்கக் கட்டிய கோட்டையல்லவா? இரு பக்கங்கள் 500 அடி நீளமும், மற்ற இரு பக்கங்கள் 300 அடி நீளமும் கொண்டதாய்ப் பாஞ்சைக்கோட்டை ஓர் ஒழுங்கற்ற இணைகரம் போன்றிருந்தது. பனஞ்சாற்றில் மண்ணைப் பிசைந்து கட்டப்பட்ட வன்மை வாய்ந்த இக்கோட்டையின் சுவர்கள் 12 அடி உயரமுடையனவாக இருந்தன. முள் வேலிகளால் சூழப்பட்டிருந்த இக்கோட்டையின் கொத்தளங்கள் சதுர வடிவினவாய் விளங்கின. ஏராளமான பீரங்கிகள் வைக்க ஏற்ற வசதிகளும் இருந்தன.

வலிமை சான்ற இக்கோட்டையைப் பிடிப்பதற்கான இறுதிப் போரைக் கம்பெனிப்படையினர் 1801ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 31ஆம் தேதி தொடங்கினர். கோட்டைக்கு மேற்கே 600 கெஜ தூரத்தில் பெரியதொரு மேட்டை எழுப்பினர். அதன் நீளம் 40 அடி; அகலம் 15 அடி; உயரம் 16 அடி; அதன்மேல் பீரங்கிகளை நிறுத்திக்

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை

கோட்டைச் சுவர்மீது குண்டுகளைப் பொழிந்தனர். ஓரிடத்தில் சிறிது கீறல் தென்பட்டதும் பறங்கியர் படை அதை நோக்கிப் பாய்ந்தது ; கோட்டைமீதேறிக் குதிக்கலாம் என வெறிகொண்டு தாவியது. ஆனால் அந்தோ! அவர்கள் ஒவ்வொருவரும் வீர மறவர் வேல்களால் குத்தப்பட்டும், வாள்களால் வெட்டப்பட்டும், இருபது அடி நீளமுள்ள ஈட்டிகளால் எறியப்பட்டும் இறந்தொழிந்தனர். இம்முயற்சியில் கம்பெனியைச் சார்ந்த 4 அதிகாரிகள், 44 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 13 அதிகாரிகள், 254 சிப்பாய்கள் படுகாயமுற்றனர். ஆங்கிலேயரது தோல்வியும் பாளையக்காரரின் பாதுகாப்புத் திறனும் விளக்க முடியாத ஒரு பெரிய அற்புதமாகவே தோன்றின ; பாஞ்சைக்கோட்டையின் உச்சியில் ஓர் ஆள் தென்படவில்லை. ஆனால் ஈட்டிகளின் காடாய் அந்த இடம் விளங்கியது! கோட்டையைத் தாக்க வந்த 120 ஐரோப்பியரில் 46 பேர்தான் காயமின்றித் தப்பினர். கம்பெனிக்குத் துணையாக 1000 எட்டயபுரப் பாளயக்கார வீரர்கள் படையும் சேர்ந்துகொண்டு கோட்டையைப் பிடிக்க முயன்றது. அதன் பலனாகக் கூலிப்படையின் வீரர்களில் நூற்றுக்கணக்கானவர் தலைகள் தரைமீது உருண்டன. இவ்வாறு போரின் முதற்கட்டம் கம்பெனிப் படைக்குப் படுதோல்வியாய் முடிந்தது. கம்பெனி அதிகாரிகள் வெள்ளைக் கொடி வீசி ஒரு நாள் முழுதும் உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி ஊமைத்துரையின் சேனை வீரர்களிடம் கெஞ்சினர். அடு போரிலும் அறம் பிறழாத் தமிழ்ப் பண்பினன் அன்றோ ஊமைத்துரை! ஒரு நாள் முழுதும் அவர்கட்கு அவன் ஓய்வு தந்தான். ஒரு சிறு குழப்பமும் விளைவிக்கவில்லை. வீர மறவரிடம் விளங்கிய

இந்தப் பெருந்தகைமையை வெள்ளை அதிகாரிகளே புகழ்ந்துள்ளனர்.

இந்நிகழ்ச்சி நடைபெற்ற ஒரு மாதம் இருபது நாட்களுக்குப் பின்பே கம்பெனிப் படை, கர்னல் அக்நியூ தலைமையில் பாஞ்சைக்கோட்டையைத் தாக்கத் துணிவு கொண்டது.

பாஞ்சைப் பதியைப் பிடிப்பதற்கான இறுதிப் போரின் இறுதிக்கட்டம் கர்னல் அக்நியூ தலைமையில் 1801ஆம் ஆண்டு, மே 21-ல் தொடங்கப்பட்டது. புதிதாகக் கொண்டுவரப்பட்ட பெரிய பெரிய பீரங்கிகளின் துணையால் கோட்டை கடுமையாகத் தாக்கப்பட்டது. கோட்டையை எதிரிகள் தகர்ப்பதைத் தடுக்கும் பொருட்டுப் பாஞ்சை மறவர்கள் கம்பெனிப் படையை நோக்கித் திருப்பிச் சுட்டவண்ணம் இருந்தனர். இருபுறமும் கட்டப்பட்ட பீரங்கிகளின் அலறல் எண்டிசையையும் அதிரவைத்தது. எங்கும் புகை மண்டலம் ஆயிற்று. கடைசியாக மே மாதம் 24ஆம் தேதி வீரர்கள் நிறுவிய வெற்பனைய கோட்டை பிளவுகண்டு விழும்படி செய்வதில் கம்பெனிப் படைகள் வெற்றி கண்டனர். கம்பெனிப் படைக்கு வெற்றிப் போதை தலைக்கேறியது. அப்போதை வெறியில் அவர்கள் விரைந்து சென்று பாளையக்காரர்களைத் தாக்கினர். கடும்போர் மூண்டது. கோட்டை இடிந்தாலும் மனம் இடியவில்லை வீர மறவர் சேனைகட்கு.

நாற்புறமும் சுற்றி நின்று வெடிகுண்டுகளை வீசிக் கொன்ற கம்பெனிப் பட்டாளத்தைப் பாஞ்சை மறவர் எதிர்த்துத் தாக்கி, எமனும் அஞ்சப் போராடினர்; பெரிய பெரிய மரங்களை எல்லாம் வெட்டிச்சாய்த்தனர்; ஆழமான அகழிகளை எல்லாம் தங்கள் பாதுகாப்பிற்காக வெட்டி-

னர் ; முன்னேறும் கம்பெனிப் படைகளை முறியடிக்கப் பாடுபட்டனர். அம் முயற்சியில், சுதந்திர வீரர்கட்கும் ஏகாதிபத்திய வெறியர்கட்கும் இடையே நடந்த போரில் ஒவ்வொரு தமிழ் வீரனும் காட்டிய தீரமும் தியாக உணர்ச்சியும் ஒவ்வொரு தனி நூலாக எழுதத்தகும். ஆம். அப்போது நடந்த அப்போர் யாரோ சிலருக்கு இடையே நடந்த அரசுரிமைப் போர் அன்று. ஏகாதிபத்தியப் பேயர்கட்கும் பெற்ற தாய்நாட்டின் சுதந்திரத்தைக் காக்கத் துணிந்த வீரமக்கட்கும் இடையே நடந்த உரிமைப்போர் - அறப்போர்.

புரட்சி வீரர்கள் தாங்கள் வெட்டிய குழிகட்கு உள்ளிருந்து, விரைந்து வரும் கம்பெனிப் படைகளைச் சுட்டும், பொசுக்கியும், கொன்றும், சிதைத்தும் நாசமாக்கினர். பாஞ்சைக் கோட்டை, ஏகாதிபத்திய வெறியர்கட்கு ஏற்ற கொலைக்களம்-கல்லறை-ஆயிற்று. ஆயினும் புரட்சி வீரர்கட்குப் போதிய ஆயுதம் இல்லை. ஆனால் கம்பெனிப் படையிடமோ கணக்கற்ற பீரங்கிகளும், கொலைக்கருவிகளும், எட்டய புரத்தானைப் போன்ற துரோகிகள் தந்துதவிய ஏராளமான கூலிப்படைகளும் இருந்தன. நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தும், வீர மறவர்பால் கொழுந்துவிட்டு எரிந்த சினத்தீயை, அவர்கள் காட்டிய வீர உணர்ச்சியை வரலாற்றிலேயே காண முடியாது. அவ்வாறிருந்தும் இறுதியில் மிருக பலத்திற்கே தாற்காலிய வெற்றி கிடைத்தது. எதற்கும் கலங்காத மறவர் பட்டாளம் தங்கள் ஆருயிரனைய புரட்சித் தோழர்கள் சில தினங்களில் பிணமான கோர காட்சி கண்டு கலங்கினர். கடந்த மூன்று மாதங்களில் பாஞ்சைக் கோட்டையின் மண்ணுக்குக் கீழே பாதாளத்தில் நிலவறையிலே மிகக் கொடிய குண்டுமாரி பொழியும்

நேரத்திலும் சுதந்திர வேட்கையால் தமிழகத்தின் சுதந்திரத்திற்காகப் போரிடும் வீர மறவர்கட்குத் துணையாக வாழ்ந்து வந்த மாதர் நல்லாரும், அவர் மழலைச் செல்வங்களும் நச்சுக் குண்டுகளின் வெம்மை தாங்காமல் புழு வாய்த் துடித்தனர். சேர்த்துவைத்திருந்த உணவெல்லாம் தீர்ந்து தொலைந்தன. பசியாலும் நோயாலும் குடும்பம் குடும்பமாக மண்மகளின் மடிக்குள் மறைந்திருந்த தாய்மாரும், தள்ளாத கிழவரும், தவழும் குழந்தைகளும் தவித்தனர். 'ஐயோ! ஐயோ!' என்னும் ஒலி விநாடிக்கு விநாடி அதிகமாயிற்று.

நிலைமை சமாளிக்க முடியாமற்போனதை அறிந்தான் ஊமைத்துரை. அவன் முன் இருந்த வழிகள் இரண்டே. ஒன்று, மாற்றானுக்கு அடிபணிவது; மற்றொன்று, மானத்தைக் காக்க வெளியேறுவது. ஊமைத்துரை ஆழ்ந்து சிந்தித்தான்; 'மானத்தை விடுவதினும் மரணத்திற்குத் துணிந்து வெளியேறுவதே நலம். தமிழகத்தின் பிற பகுதிகட்குச் செல்வோம். நம்மை ஒத்த சுதந்திர வீரர்களைத் திரட்டுவோம். வெறிகொண்ட வெள்ளையர் கும்பலை வேரறுப்போம்' என்று உறுதி கொண்டான். இதற்குள், 'தென் பாண்டிச் சீமையிலே இருபெருஞ் சிங்கங்கள் கம்பெனி வெறியர்களைக் கருவறுக்கக் கங்கணம் கட்டியுள்ளார்கள்' என்ற செய்தி வீரன் ஊமைத்துரைக்கு எட்டியது. அவன் மேனி சிலிர்த்தது; தோள்கள் விம்மின; மார்பு விரிந்தது; "சுதந்திர வீரர்களே, புறங்காட்டாது போரிட்டுக் கொண்டே கோட்டையைவிட்டு வெளியேறுங்கள். படுகாயம் உற்றோர், பெண்டிர், முதியோர், குழந்தைகள் அனைவரையும் கோட்டைக்கு வெளியே பாதுகாப்பான

இடத்திற்குக் கொண்டு செல்லுங்கள்" என அவன் வீரத் திருவாய் புரட்சி வீரர்கட்குக் கட்டளையிட்டது.

ஊமைத்துரையின் இக்கட்டளையைக் கேட்ட பாஞ்சை வீரர்கள் அணி அணியாக வெளியேறினர்; வாள்வீரர் சுற்றிலும் நடக்க, இடையே பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாத்துச் சென்றனர். ஆனால் இந்த நேரத்தில் வீர மறவர்கட்கும் வெள்ளை வெறியர்கட்கும் இடையே நடந்த போரை நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகிறது. கம்பெனிப் படை வீரர்கள் வெறிகொண்டு வீர மறவர்களை வெட்டிக் குவித்தனர். குழந்தை என்றும், பெண் என்றும் பாராமல் கணக்கற்ற உயிர்களைக் கொன்று குவித்தனர் அக் கொலைகாரர்கள். அறுநூறுக்கு மேற்பட்ட சுதந்திரவீரர்கள் பலியாயினர். அவர்களில் பலர் பெண்கள். பாஞ்சைக் கோட்டையைச் சுற்றிலும் பிணக்காடு; இரத்தவெள்ளம்; சாவொலி; ஆம். பின்னாளில் நடந்த பாஞ்சாலப் படுகொலையினும் பல்லாயிரம் மடங்கு கொடுமையான படுகொலையைப் பாஞ்சைக் கோட்டை நிழலிலே நடத்தினர் நாடோடி வெறியர்கள். இத்தனைக்கும் தப்பி இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் வெளியேறினர். அவர்களில் ஊமைத் துரையும் ஒருவன்.

கோட்டையிலிருந்து வெளியேறி வடக்கு நோக்கிச் சென்றனர் புரட்சி வீரர்கள். அவர்களைக் கர்னல் அக்நியூ தன் படைவீரருடன் விரட்டிச் சென்றான். சிறிது தூரம் சென்றதும், மறவர் படை சிங்கம்போல் சினங் கொண்டு திரும்பியது. கர்னல் அக்நியூவின் படைக்கும் ஊமைத்துரைக்கும் இடையே கடும்போர் மூண்டது. வெள்ளை வெறியர்களை வேண்டுமட்டும் வெட்டிச் சாய்த்தான் வீரன் ஊமைத்துரை. அன்று அவன் நிகழ்த்திய

போர் மனித சக்திக்கும் மீறியதாகவே விளங்கியது. இறுதியில் அவன் உடல் எல்லாம் வெட்டுண்டு, தரையில் உணர்ச்சியற்றுச் சாய்ந்தான். அந்நிலையில் பிணக்குவியலின் மத்தியில் தன் வீரமகனைத் தேடி வந்தாள் ஒரு மறக்குல மங்கை! இறுதியாகத் தன் வீர வயிறு ஈன்ற தீரனையும் கண்டாள்; உயிர் போகும் நிலையில் உள்ள அவனை மார்புறத் தழுவினாள். ஆவி பிரியும் நிலையில் இருந்த அவ்வீரமைந்தன், "தாயே, நான் போகிறேன்; அதோ! என் சாமி! அவரைக் காப்பாற்று. போ, போ" என்று கூறித் தலைசாய்த்தான். மைந்தன் இட்ட கட்டளையை மனத்தில் வைத்து, அழுத கண்ணீரோடு ஐயனை - ஊமைத்துரையை - இரு கரங்களால் அணைத்து எடுத்துச் சென்று, தன் இல்லத்தில் வைத்துக் காப்பாற்றினாள் அத்தமிழ்த்தாய். அவள் திருவடிகளை வணங்குவோமாக!

சாவின் வாயிலிருந்து தன்னைக் காத்த தொண்டு கிழவியின் அன்பாலும் அறிவாலும் எல்லா விபத்துக்களிலிருந்தும் தப்பி, உடலும் உள்ளமும் தேறிய ஊமைத்துரை, அவ் வீரத்தாயின் திருவடிகளைத் தொட்டு வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, வாளும் கையுமாகப் புறப்பட்டான். அவன் கால்கள் மிக வேகமாக நடந்தன; அவன் கை உடைவாளைப் பற்றிய வண்ணம் இருந்தது; அவன் இரு கண்களும் யாரோ இருவரை அக்கணமே காண விழைவன போல் துடித்துக் கொண்டிருந்தன.

6. யார் அவர்கள்?

சுமார் இருநூறு ஆண்டுகட்குமுன் பாஞ்சைப் பதியைப் போலவே வீரத்திலும் தியாகத்திலும் இணையற்று விளங்கிய பெருமை சிவகங்கைச் சீமைக்கு உண்டு. கி. பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் இதை ஆண்டு வந்த கிழவன் சேதுபதியின் காலத்தில் புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய ஜமீன்களைக்கொண்ட மறவர் நாடு சீரும் சிறப்பும் அடைந்து திகழ்ந்தது. 36 ஆண்டுகள் மறவர் நாட்டை ஆண்டபின் கிழவன் சேதுபதி 1710ஆம் ஆண்டில் இறந்துபோனான். அதற்குப்பின் மறவர் சீமையில் அரசுரிமை குறித்துப் பெருத்த உள்நாட்டுப் போர் கிளம்பியது. 'எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்' என்று கருதிய புதுக்கோட்டை அரசர், தஞ்சை மராத்திய மன்னர், மதுரை நாயக்க மன்னர் ஆகியவர்களும் இந்தப் போரில் கலந்துகொண்டு, தங்கள் தங்கட்கு வேண்டிய கட்சியை ஆதரித்தனர். கடைசியில் அவர்கள் கைக்கொண்ட பகுதிகள் போக, மீதியிருந்த மறவர் நாடு ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று பங்கு கட்டையத்தேவன் என்பானுக்கும், மீதி இரண்டு பங்கு சசிவர்ணத் தேவனுக்கும் வழங்கப்பட்டன. சுமார் 1730ஆம் ஆண்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் பயனாகச் சசிவர்ணன் பெற்றதே சிவகங்கை இராச்சியம். இந்தச் சசிவர்ணதேவன் சிவகங்கைச் சீமையைச் சுமார் 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்து வந்தான். இவனுக்குப்பின் இவன் மகனான முத்துப் பெரிய வடுகநாத உடையணத் தேவன் பட்டம் எய்தினான்.

முத்து வடுகநாதன் அரசியலை ஏற்றுக் கொள்வதற்கு முன்பே தென்னாட்டின் அரசியலில் இருள் கவிய

ஆரம்பித்துவிட்டது. தமிழகத்தின் அரசியல் பல்வகையாலும் பாழ்படல் ஆயிற்று. ஆர்க்காட்டு நவாபும், ஐதர் அலியும், ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும், டச்சுக்காரரும் தங்கள் ஆற்றலின் நிலை கண்டுணரத் தமிழகத்தைப் பயன்படுத்தலாயினர். தமிழ்நாடு கொலைக்கும், கொள்ளைக்கும், சூதுக்கும், சூழ்ச்சிக்கும் இரையாயிற்று. ஆர்க்காட்டு நவாப் ஆங்கிலக் கம்பெனியின் படை பலம் கொண்டு பிடித்த தென்பாண்டிச் சீமைகளில் 'தடி எடுத்தவனை எல்லாம் தண்டல்காரனாக' ஆக்கித் தர்பார் நடத்தினான்; தமிழகத்தில் சுதந்திரமாக ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்களின் நாடுகளை எல்லாம் வெள்ளை வெறியர்களின் துணைகொண்டு தாக்கினான். இக்கொடுமைகளைக் கண்ட வீர மறவர் நெஞ்சம் கொதித்தது. அவர்கள் நவாபையும் அவனைக் கைப்பாவையாக்கிக் கொள்ளையடிக்கத் துடித்த கம்பெனிக் கூட்டத்தையும் முறியடிக்கத் திட்டமிட்டனர். இதை அறிந்த ஆர்க்காட்டு நவாப் ஆங்கிலக் கம்பெனியிடம் அடைக்கலம் புகுந்தான். அதன் பயனாக 1772ஆம் ஆண்டில் ஜெனரல் ஸ்மித் மறவர் நாட்டின் மீது படையெடுத்தான்; இராமநாதபுரத்தைத் தாக்கினான்; அப்போது அச்சீமையை ஆண்டுவந்த ஒன்பது வயது சிறுவனான சேதுபதியையும் அவன் பிரதிநிதியாக நாட்டை ஆண்டுவந்த அவன் தாயாரையும் அவன் சகோதரியையும் சிறைப்படுத்தித் திருச்சிக்கு அனுப்பிக் காவலில் வைத்தான். இவ்வாறு இராமநாதபுரத்தில் வெற்றிக்கொடி உயர்த்திய வெள்ளைப்படையால் சிவகங்கையைத் தொடக்கூட முடியவில்லை. அங்கே அரசராக இருந்த முத்து வடுகநாதன் வயதானவனாயினும் சிவகங்கைச்சீமை என்றால் கம்பெனிப் பட்டாளத்திற்குச் 'சிம்ம சொப்பனமாக'

இருந்தது. காரணம் சுதந்திர வெறிகொண்ட வீரமறவர்கள் நிறைந்த சிவகங்கைச் சீமையின் இரு கண்களாகவும் இரு கைகளாகவும் விளங்கினர் இரு சகோதரர்கள். அந்த இரும்பு மனிதர்கள் பெயரைக் கேட்டதும் பறங்கிப்படை நடுங்கியது. ஆர்க்காட்டு நவாபின் தலை ஆட்டம் கண்டது. யார் அவர்கள்? அவர்கள்தான் **பெரிய மருது, சின்ன மருது என்ற இரு சகோதரர்கள்; நம் நூலின் மாண்பு மிக்க தலைவர்கள்.**

7. பெரிய மருது - சின்ன மருது

கட்டபொம்மு சகோதரர்களைப் போலவே பாரத நாட்டை, அருமைத் தமிழகத்தைப் பரதேசி வெள்ளையரிடமிருந்து காப்பாற்ற, உயிரையும் துச்சமாய் மதித்துச் சுதந்திரப் போர் நடத்திய மருது சகோதரர்களில் மூத்தவன் பெயர் வெள்ளை மருது. இளையவன் பெயர் சின்ன மருது.

வெள்ளை மருது வீரன்; மாவீரன்; வீரர்களை எல்லாம் தலைவணங்கச் செய்த பெருவீரன். அவனைச் சந்தித்த ஐரோப்பியர்கள் அனைவரும், 'குஷ் வமிசத்தின் வழி வந்தவன், மாபெரும் வேட்டை நிபுணன், பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் தந்தை எனப் போற்றப்படும் 'நிம்ராட்' போன்ற பெருவீரன் இவனே தமிழகத்திற்கு' என்று எண்ணி, வியந்து மரியாதை காட்டினர். அத்தகைய வீரத் தலைவனாக விளங்கிய வெள்ளை மருதுக்கு வேட்டை என்றால் பெருவிருப்பம். அவ்வீரப் பெருமகன் அடர்ந்த காடுகளில் நுழைந்து, கொடிய விலங்குகளை வேட்டையாடும் வீர விளையாட்டிலே தன் காலத்தையெல்லாம் கழித்தான். ஆம். அவன் வாழ்க்கையே ஒரு வீர விளையாட்டுத்தான்! கணையமரம் போன்ற கைகளையும், ஓங்கி உயர்ந்த கற்சிலை போன்ற தோற்றத்தையும், முறுக்கிவிட்ட இரும்புக் கம்பிகள் போன்ற தசைநார்களையும், பருத்த முண்டாக்களையும், மலைபோல் உயர்ந்த தோள்களையும், கூர்வாள் போல் திருகிவிட்ட மீசையையும், பரந்து விரிந்த மார்பையும், சிங்கம்போன்ற பார்வையையும் படைத்திருந்த வெள்ளை மருதைப் பார்த்தாலே ஒருவகையான அச்சம்கலந்த வியப்புணர்ச்சி எவர்மனத்திலும் ஊடுருவிப்

பாயும். அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த மிக உறுதியான ஆர்க்காட்டு ரூபாயை ஒரு நொடியில் வளைத்துக் காட்டக்கூடிய ஆற்றல் அவன் கைவிரல்கட்கே இருந்தது என்றால் அவன் உடல் ஆற்றலை யாரால் அளவிட்டுரைக்க முடியும்? எவ்விதமான நாடாளும் பொறுப்பும் கவலையும் இன்றிக் காலும் மனமும் கண்ணும் விரும்பிய இடமெல்லாம் ஓயாது திரிந்து, தன் வீர விளையாடல்களைத் தொடர்ந்து நடத்திவந்த அவனைக் 'காட்டுராஜா' என்று கூறுவதே எவ்வகையிலும் பொருத்தம்.

எப்போதாவது வெள்ளை மருது தன்பால் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிற ஐரோப்பிய நண்பர்களைச் சந்திக்கத் தஞ்சைக்கும் திருச்சிக்கும் வருவது வழக்கம். வெள்ளை மருதுவின் நண்பர்களில் யாருக்கேனும் பெரிய வேட்டை ஒன்றுக்குப் போகவேண்டும்போல் தோன்றினால் இவனுக்கு ஒரு செய்தி தட்டிவிட்டால் போதும்! 'ஆஜானுபாகுவான தோற்றமுடைய மருதுவை அங்கே காணலாம்! அவ்வாறே எவ்வித வீர விளையாட்டிலும் யார் கலந்துகொள்ள நினைத்தாலும் சரி. அவர்களை முன்னின்று அழைத்துச்சென்று, வெற்றியும் புகழும் தேடிக் கொடுத்து, அவர்கள் உடம்புக்கும் உயிருக்கும் தீங்கில்லாமல் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பு நம் பெரிய மருதுவையே சார்ந்தது. வேட்டைக்குச் செல்லும்போது பேய்வாய்ப்புலி ஒன்று எதிர்ப்பட்டால் பெரிய மருது அடையக்கூடிய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன் நண்பனாக இருந்த ஐரோப்பிய துரை, வில்லும் வேலும் வாளும் ஏந்திய பலம் நிறைந்த வீரர்கள் பலர் புடைசூழ, உடலும் உள்ளமும் நடுங்கிநிற்கும் நேரத்தில் பெரிய மருது பாய்ந்து சென்று, சீறி வரும் புலியின் வாலை இரு கைகளாலும் பிடித்து, இருபதடி தூரம் 'விறுவிறு' என்று

இழுத்துச்சென்று, இரு பின்னங்கால்களையும் இறுகப்பற்றிக் கவண்போல் சுழற்றி, ஓங்கித் தரைமீது அடிப்பான். ஆத்திரத்தோடு அவனைக் கடித்தெறிய அப்புலி தன் பேழ்வாயைத் திறக்கும். அப்போது பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டே தன் கால் தினவு தீர, புலி சாக, அதைத் தன் காலின் கீழே போட்டுத் துவைப்பான்; பின் அதன் வாயை இரு பிளவாகக் கிழித்துப் பற்களை ஆட்டிப் பிடுங்கி, அவற்றைக் கொண்டுவந்து நண்பர்கட்கு எல்லாம் காட்டி, நாற்றிசையும் அதிர வெற்றி நகை புரிவான். இத்தகைய வீரவாழ்க்கை வாழ்ந்த காட்டு ராஜாவைப்பற்றி நமக்கு எழக்கூடிய ஓர் ஐயத்தைப் போக்கும் வகையில் பெரிய மருதுவை நன்கு அறிந்தவனும், பின்னாளில் 'நண்பர்கள்' என்ற நன்றி உணர்ச்சியும் அற்று, ஏகாதிபத்திய வெறிகொண்டு, மருது சகோதரர்களைக் கொல்லக் காரணமாயிருந்தவனுமாகிய வெள்ளை மேஜர் ஒருவன் தன் புத்தகத்தில் எழுதிவைத்துவிட்டுப் போயிருப்பதைக் கீழே காணலாம் :

'பெரியமருதுவின் இத்தகைய வாழ்க்கை, பாதுகாப்பு நிறைந்த நகரவாழ்க்கை வாழ்கிறவர்க்குப் பொருளற்றதாகவும் சோம்பேறித்தனம் நிறைந்ததாகவும் தோன்றும். ஆனால் உண்மையில், அடர்ந்த காடுகள் செறிந்ததும், மக்களைக்கொன்று குவிக்கும் கொடிய விலங்குகள் நிறைந்ததுமான ஒரு நிலப்பகுதியில் பெரிய மருதுவின் இத்தகைய வீரவாழ்க்கை மிக்க பயன் நிறைந்து விளங்கியது.'

இவ்வாறு பெரிய மருதுவின் பயன் செறிந்த வாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டும் வெள்ளை மேஜர் தன் உள்ளத்தை ஒளிக்க முடியாமல் அவ்வீரனது பண்பார்ந்த உயரிய உள்ளம் பற்றிக் கூறும் உண்மையைப் பின்வரும் வரிகளால் அறியலாம் :

'பெரிய மருது என்னும் இக்கீழ்த்திசை நிம்ராட்டிடமிருந்து நான் 1795ஆம் ஆண்டில்—மதுரையில் மிக இளைய சுபேதார்களில் ஒருவனாக இருந்தபோது - அன்பிற்கும் கவனிப்பிற்கும் சான்றாக எத்தனையோ அடையாளங்களைப் பெற்றிருக்கிறேன். ஆம். அது அவனுடைய பெருந்தன்மையை நிரூபிக்க நல்லதொரு சான்றாகும்.'

இவ்வாறு தன் பகைவனாலும் போற்றப்படும் வீரமும் விழுமிய பண்பும் படைத்து வாழ்ந்த பெரிய மருது இயற்கையாகவே இரக்கமும் கருணையும் நிறைந்தவனாக விளங்கினான். அந்நாளில் தன் சீமையில் ராஜபாட்டைகளையும், கொடி வழிகளையும், நாடு நகரங்களையும் பயமுறுத்திக் கொள்ளை அடித்துவந்த கள்ளர் கூட்டத்திற்கு அவன் எமனாக விளங்கினான் ; அதே நேரத்தில் ஏழைக் குடிமக்களின் இன்னுயிர்த் தோழனாகவும் திகழ்ந்தான். மறவர் சீமை முழுதிலும் தமிழ்மக்கள் உள்ளத்தில் கோயில்கொண்ட நிகரற்ற வீரனாகவும் தலைவனாகவும் பெரிய மருது காட்சியளித்தான்.

'மூத்தது மோழை, இளையது காளை' என்பது பழந் தமிழ்ப் பழமொழி. ஆனால் மூத்ததே காளையானால் இளையதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? சின்ன மருது கார்வண்ணன் ; ஆனாலும் கட்டழகன் ; அண்ணனைப் போல் அவ்வளவு பெரிய உருவமுடையவன் அல்லன். ஆயினும் எவர்க்கும் இளைக்காத தோற்றப் பொலிவு படைத்தவன். கம்பீரமான தோற்றம் ; சிரித்த முகம் ; எளிய கோலம். எவருடனும் கர்வம் இன்றிப் பழகும் கள்ளமற்ற சுபாவம். இத்தகைய சிறப்புக்கள் யாவும் அமைந்தவன் சின்ன மருது.

அண்ணனைக்காட்டிலும் உலகியல் அறிவிலும் ராஜ தந்திரத்திலும் வல்லவனாக விளங்கினான் சின்ன மருது.

காட்சிக்கு எளியனாக, கடுஞ்சொல் அற்றவனாக இருந்த அவன் நா அசைந்தால் நாடு அசையும். அவன் இட்டது சட்டம் மறவர் சீமையில். அவ்வாறு செல்வாக்கின் உச்சியில் இருந்தபோதும் அவன் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றியும், அவனிடமிருந்த நற்பண்புகளைப் பற்றியும் பின்னாளில் தன் கையாலேயே தன் 'நண்பன்' என்றும் பாராமல் சின்ன மருதுவை – செந்தமிழ்நாட்டுச் சுதந்திர வீரனை–தொடையிலே சுட்டுப் புண்ணாக்கிய ஏகாதிபத்தியத்தின் சரியான பிரதிநிதியான வெள்ளை மேஜர் ஒருவன் ஏட்டில் எழுதிவைத்துள்ளதைப் பாருங்கள் :

'சின்ன மருது கம்பீரமும் கட்டழகும் விநயமும் நிறைந்த வியத்தகு மனிதன் ; நல்ல நடத்தையும் எளிதில் எவர்க்கும் காட்சி தரக்கூடிய இயல்பும் படைத்தவன். தன் தலையின் அசைப்பே நாட்டின் சட்டமெனக் கருதும் மக்களின் தலைவனாக அவன் விளங்கியபோதிலும் தனி ஒரு காவலாளியின் பாதுகாப்புக்கூட இல்லாமல் திறந்த வெளியில் வாழ்ந்துவந்தான். 1795ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் நான் அவனைக் காணச்சென்றபோது அவன் இல்லத்தின் உள்ளே நுழைய விரும்பிய எவர்க்கும் சுதந்திரமாக உள்ளே புகவும் வெளியே போகவும் எவ்விதமான தடையும் இல்லை என்பதை நேரில் கண்டறிந்தேன். அச்சமயத்தில் குடிமக்களின் தந்தையாக விளங்கிய அந்த மாவீரனுக்குக் கடவுள் கருணை புரியவேண்டும் என்பதே அவன் நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய பிரார்த்தனையுமாக இருந்தது. அவன் நாட்டின் வழியாகச் செல்லும்போது ஏற்பட்ட சாதாரணமான ஒரு சந்திப்பின் காரணமாகவே அவன் எனக்கு நண்பனாகிவிட்டான். அதிலிருந்து நான் மதுரையில் இருந்த காலமெல்லாம் அவன் எனக்கு உயர்ந்த

ரக அரிசியையும் சுவை மிக்க பழங்களையும் அனுப்பத் தவறியதில்லை. சிறப்பாகக் கெட்டியான தோலோடு கூடிய சுவை மிக்க பெரிய ஆரஞ்சுப்பழங்களை அவன் எனக்கு அன்போடு அனுப்பிவந்தான். அத்தகைய அருமையான பழங்களை நான் இந்தியாவின் வேறு எப் பகுதியிலும் கண்டதில்லை.'

பெருந்தன்மையும் வள்ளன்மையும் நிறைந்த சின்ன மருது பின்னாளில் தன்னையே கொல்லத்துணிந்த வெள்ளைத் துரைக்குப் பழமும் அரிசியும் மட்டுமா கொடுத்து உபசரித்தான் ? அந்தோ ! தமிழகத்திற்கே உரிய போர்க்கருவிகளை எல்லாம் பயன்படுத்தும் கலையெல்லாம் அன்றோ கற்றுக்கொடுத்தான். ஆம். வெள்ளைத் துரைமகனுக்கு வீரமும் படைப்பயிற்சியும் கற்றுத் தந்த ஆசிரியனாகச் சின்ன மருது விளங்கிய உண்மையை அந்த வெள்ளைத் துரையே தன் புத்தகத்தில் வரைந்துள்ளான். அது மட்டுமா ? ஏகாதிபத்திய வெறியால் மனிதப் பண்பு இழந்து, அருந்த அரிசியும் சுவைக்கப் பழமும் தந்து அன்பு காட்டிய தன் நண்பனைக் கொல்லக் காரணமாயிருந்த தன்னை - தன் நெஞ்சே சுட்ட சூடு பொறுக்காமல் அவன் கல்நெஞ்சும் கலங்கி எழுதும் எழுத்தைப் பாருங்கள் :

'சின்ன மருதுதான் எனக்கு முதன் முதலாக ஈட்டி எறியவும், கதையைச் சுற்றவும் கற்றுக் கொடுத்தவன். கதை என்னும் இவ்வாயுதம் இந்தியாவிலேயே தமிழ்ப் பகுதியில்தான் பயன் படுத்தப்படுகிறது. ஆயினும் ஆற்றலும் திறமையும் படைத்த ஒருவரால் முந்நூறு அடி தூரத்தில் உள்ள ஒரு பொருள் மீது கூட, கதையை வியக்கத்தக்க வகையில் குறிபார்த்து எறிந்து வெற்றி பெறலாம். இத்தகைய வீர மனிதனையே

நான் பிற்காலத்தில் யுத்தத்தின் காரணமாகக் காட்டு விலங்கைப்போல் விரட்டிப் படுகாயப்படுத்திச் சாதாரண வேலையாட்களால் பிடிக்க நேர்ந்தது. அதன் பின் முறிந்துபோன தொடையோடு சிறையில் அவன் நொந்து கிடந்ததையும், இறுதியாக வீரம் மிக்க தன் அண்ணனோடும், அவன் வீரத்திற்குச் சிறிதும் குறைபாத அவன் மகனோடும் உயிர்த் தோழர்கள் பலரோடும் சாதாரண தூக்குமரம் ஒன்றில் தொங்கிக் கொண்டிருந்ததையும் காண நேர்ந்தது.'

ஆம். வாழ்ந்த நாளிலும் மாண்டு மறைந்த பின்னும் எதிரிகள் இதயத்தையும் உருக்கக்கூடிய அன்பும் பண்பும் வீரமும் கருணையும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த தமிழ் வீரர்களே சுதந்திரப் போரின் பெருமை மிக்க தளபதிகளான நம் மருது சகோதரர்கள். சின்ன மருது - பெரிய மருது பெயர் கேட்டால் அந்நாளில் அழுத பிள்ளையும் வாய் மூடும். தொண்டு கிழவன் கிழவியரும் தம் இரு கைகளையும் குவித்து நடுங்கும் குரலோடு, நன்றியுணர்ச்சியால் கலங்கும் கண்களோடு, ‘ இறைவனே, அம் மாவீரர்கள் நன்றாக வாழ அருள் புரிய வேண்டும்’ என்று வாழ்த்துவார்கள். இவ்வாறு பச்சைக் குழந்தை முதல் பல்விழுந்த கிழவர் வரை, ஆண் - பெண் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு வாழ்ந்த, தேசபக்தியின் வடிவாய் விளங்கிய அத்தமிழ் வீரர்கள் இருவரும் தெய்வபக்தியிலும் எவர்க்கும் குறையாது வாழ்ந்த உண்மையை நினைக்கும்போது பக்தி படைத்தார் நெஞ்சம் பரவசமாகும்.

முருகன் கோயில் கொண்டிருக்கும் குன்றக்குடியில் ஆண்டவனுக்குத் தக்க கோயில் இல்லாது இருப்பது கண்டு, மலைமேல் திருக்கோவில் கட்டி, அங்கிருந்து கண்

டால் தெரியும் வண்ணம் தெற்கில் மருதாபுரி என்ற அழகிய குளத்தையும், அதன் கரையில் ஆயிரம் தென்னை மரங்களையும் உண்டாக்கினார்கள் மருது பாண்டியர்கள். இவ்வாறு அவர்கள் குன்றக்குடியான்பால் கொண்ட ஆராத காதலுக்கு அடையாளமாக இன்றும் அங்குக் கோவில் கொண்டுள்ள அறுமுகப் பெருமானது திருமேனிக்குச் சாத்தப்படும் பொற்கவசம் காட்சி அளித்து வருகிறது. அப் பொற்கவசத்தில் ‘சின்ன மருது உபயம்’ என்ற சீரிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆம். பொன்னில் பொறிக்கப்பட வேண்டிய அப் பெருவீரர் திருப்பெயர், ‘ சுற்றி நில்லாதே போ, பகையே ’ என்று துள்ளி வரும் வேல் தாங்கி நிற்கும் குமரவேள் பூணும் பொற்கவசத்திலேயே அழகுறப் பொறித்திருத்தல் மிக்க பொருத்தம் உடையதன்றோ? அதோடு, ‘ தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே ’ என்று குமரகுருபரர் உள்ளங் கனிந்து போற்றிப் பரவிய மதுரை மீனாட்சி அம்மை சந்நிதியில் அணையா விளக்குகளாய் ஒளிரும் அழகு மிக்க இரு திருவாட்சித் தீபங்கள் இவர்கள் உபயமே ஆகும். அச்சுடர் விளக்குகட்கு நெய்க்காக ஆவியூர் என்னும் கிராமமும் அளிக்கப்பெற்றது. இப்படியே திருக்கானப்பேர் என்னும் பாடல் பெற்ற தலமாகிய காளையார் கோவிலில் மூன்று சந்நிதிகள் கொண்ட திருக்கோயிலைக் கட்டி, திருவாரூர் தேருக்கு அடுத்தபடி பெரிதாக மதிக்கப்படும் தேர் ஒன்றையும் செய்து தந்து, ஆனைமடு என்னும் அழகான நீராழியையும் புதுப்பித்தார்களாம். இக்கோயில் திருப்பணிக்குப் பல கல் தொலைவில் உள்ள மானாமதுரையிலிருந்து கைவழியாகவே செங்கல் வந்தன அறிஞர்கள் கூறுகிறார்கள். அங்ஙனமாயின் இவர்கட்கு இருந்த ஆள் கட்டையும், மக்கள் இவர்கள்பால்

கொண்டிருந்த மாறா அன்பையும் என்னென்று சொல்வது !

தெய்வங்களுக்கெல்லாம் கோயில் கட்டியும், கட்டிய கோயில்களைப் புதுப்பித்தும் வந்த மருத பாண்டியர் களுக்கு மக்கள் தங்கள் மனத்தையே கோயிலாகக்கட்டிக் கொடுத்தனர். ஆம். மக்களின் உள்ளமே மருது பாண் டியர்க்கான கோயில். அவர்கள் நாட்டு ஆண்களும் பெண்களும் மகிழ்ச்சியோடு பாடும் பாடல்களே அம் மருது பாண்டியர்களின் புகழ் பரப்பும் காவியம். சான்றாக இதோ ஒரு பாடலைப் பாருங்கள் :

> ' சாந்துப் பொட்டு தளதளங்க
> சந்தனப் பொட்டு கமகமங்க
> மருதைக் கோபுரம் தெரியக் கட்டின
> மருது வாரதைப் பாருங்கடி.'

இப்படி எத்தனையோ தெம்மாங்கு, கும்மி முதலிய பாடல்கள் இன்றும் தென் பாண்டி நாட்டிலே கிராம மக்கள் நாவில் நடமாடுவதைக் காணலாம், கேட்கலாம்.

மருதப்பன், மருதீசன், மருதேசுவரன் என்றெல் லாம் தம் குடியினரால் வழிபடப்பட்டு வந்த குலதெய் வத்தின் பெயரையே தம் பெயராகக் கொண்டு வீரமும் கருணையும் நிறைந்த வாழ்வு வாழ்ந்து வந்த இம்மருது சகோதரர்கள் தம் காலத்தில் ஏழைகளின் கண்கண்ட தெய்வமாக விளங்கினர் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உள்ளன. அவற்றுள் சுவை பொதிந்த ஒன்றனை மட்டும் இங்குக் காண்போம்.

ஒருநாள் காட்டு வழியே சென்று கொண்டு இருந்த சின்ன மருது பசியாலும் களைப்பாலும் மயக்கமுற்றுக் கீழே சாய நேர்ந்தது. அந்நிலை கண்டு அக்காட்டினைக்

V211 'L60 N54

காவல் காத்துக்கொண்டிருந்த ஒரு கிழவி சின்ன மருது வின்பால் விரைந்தோடினாள். பசியால், அயர்வால் சாய்ந்து கிடந்த அவன் நிலைகண்டு, ஈன்ற குழவி முகம் கண்டு இரங்கும் தாய்போல் அவர் களைப்பை மெல்ல நீக்கிய அந்தக் கிழவி, ' ஐயா, ஏழை நான். என்னிடம் உங்கள் பசியாற்ற ஒரு பொருளும் இல்லை. ஆயினும் காலையில் நான் குடித்தது போக மிஞ்சியிருக்கும் இனிய கூழ் சிறிதிருக்கிறது. குடிக்கிறீர்களா ?' என்றாள். கிழவியின் கருணைமொழிகளைக் கேட்ட சின்ன மருது, 'அம்மா, தங்கள் பெயரென்ன ?' என்றான். 'தாயம்மாள்' என்றாள் கிழவி. ' ஆ! நீ தாய் அம்மாளேதான். நீ தரும் கூழும் அமிழ்தம்தான். கொண்டு வா ' என்று கூறிக் கிழவி தந்த கூழைக் குடித்துக் களைப்பு நீங்கினான் சின்ன மருது. அவன் உள்ளம் நன்றி உணர்ச்சியால் பொங் கியது. உடனே அவன் ஓலை ஒன்றெடுத்து அதில் முள் ளால் ஏதோ எழுதிக் கையெழுத்தும் இட்டு, அதைக் கிழவி கையில் கொடுத்தான். ஆம். அது வெறும் நற்சான்றல்ல ; ' இக்கிராமம் தாயம்மாள் என்னும் இக்கிழவிக்கே உரியது ' என்ற சாசனம். என்னே சின்ன மருதுவின் பெரிய உள்ளம்! அக்கிராமம் இன்றும் ' கூழூர் ' என்ற பெயர் படைத்துச் சின்ன மருதுவின் சீரிய புகழ் விளக்கி நிற்கிறது!

ஏழைகளின் துயர்தீர்க்கும் இறைவனாக விளங்கிய சின்ன மருது புலவர் நாவில் பொருந்திய புகழ்படைத்த தலைசிறந்த கொடையாளியாகவும் இருந்தான். அவ னுடைய அப்பெருமையினை இக்காலத்தும் வழங்கிவரும் சில அழகிய தனிப்பாடல்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. மருது சகோதரர்கள் காலத்தில் வெள்ளைக் கம்பெனியின் தூண்டுதலாலும், பிற அரசியல் காரணங்களாலும்

ARCHIVES
108182

நாடெங்கும் கள்ளர் பயம் நிறைந்திருந்தது. ஆனால் அக்கள்ளர் கூட்டத்திற்குப் பொல்லாப் பகையாக விளங்கினார்கள் மருது பாண்டியர்கள். ஒரு சமயம் கமுதியைச் சேர்ந்த புலவர் ஒருவர் தம் மனைவியுடன் வேற்றூர் சென்று கொண்டிருந்த வேளையில் - இரவு நேரத்தில் - கள்ளர்கள் அவரை வழிமறித்து, அவர் மனையாட்டியின் தாலியையும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டனர். புலவர் உள்ளம் மிக நொந்தது. நேரே மருது பாண்டியனிடம் போய் அவர் முறையிட்டார்; 'கணவன் உயிரோடு இருக்கும்போதே மனைவியின் தாலி அறுபடுகிறதே! உன் நாட்டில் செங்கோல் இல்லையா ?' என்ற கருத்தமைய,

மருவிருக்கும் கூந்தல் மனையாள் கணவன்
அருகிருக்கத் தாலி அறுமா ?—இரவுனக்குச்
செங்கோல் இலையா இத் தேசமெங்கும் கள்ளருக்குப்
பங்கோ மருதுபூ பா !

என்ற கவிதையைக் கூறினார். செவி கைக்கச் சொற்பொறுக்கும் பண்பமைந்த மருது பாண்டியன் தன் நாட்டின் நிலையெண்ணி மனம் நைந்ததோடு புலவர்க்கு வேண்டுவன எல்லாம் தந்து, ஆறுபவுன் தங்கத்தில் தாலியும் செய்து, அதைப் புலவர் கையில் கொடுத்து அவர் மனைவியின் கழுத்தில் அதைக் கட்டி மகிழச் செய்தான். நொந்து வந்த புலவர் உள்ளம் குளிர்ந்தது. அவர் இதயம் இன்பக் கடலாயிற்று.

' தாலிக்கு வேலி தமிழுக்குதவிய தார்மன்னனே '

என்று அவர் வாயார அவ்வள்ளலை வாழ்த்திச் சென்றார்.

இவ்வாறே கள்ளர் வகுப்பைச் சேர்ந்த புதுக்கோட்டை மன்னன் தந்த பொருளைப் பெற்று வரும் வழியில் கள்ளர்களிடம் அப் பொருளைப் பறிகொடுத்த

பைந்தமிழ்ப் புலவர் ஒருவர் அதுகுறித்து மருதுபாண்டியனிடம் முறையிட்டுக் குறைதீர்ந்தபின்,

கள்ளன் கொடுத்ததைக் கள்ளன் எடுத்தகன்றான்
உள்ளம் கடுத்தால் உறலாமோ ?—வள்ளல்
மருதரசன் உள்ளான் மடவாய், வறுமை
ஒருவ அருள்வான் உடன்.

எனச் சொற்பொருள் அழகமையப் பாடிய தமிழ்ப் பாடலில் புலவரையெல்லாம் போற்றிய மருது பாண்டியனது புகழ் விளங்குகிறதன்றோ !

இவ்வாறு அலந்தோர்க்கும் அருந்தமிழ்ப் புலவோர்க்கும் புகலிடமாய்த் திகழ்ந்த மருதுபாண்டியர் உண்மையான தேசபக்தியையும் தெய்வ பக்தியையுமே தம் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தனர். அத்தகைய பண்பாடு நிறைந்த உள்ளம் படைத்த அவ்விரு பெரு தமிழ் வீரர்களும் தமிழகத்தின் மானத்தைக் காக்க நிகழ்த்திய சுதந்திரப்போர் வீரச்சுவை நிறைந்த விழுமிய போராகும். அப்போரில் அவ்வீரர்களும் அவர்களைப் பின்பற்றிய பல்லாயிரக்கணக்கான மறவர்களும் குடும்பம் குடும்பமாகச் செய்த தியாக வரலாறு கற்பார் கண்கட்கு வீர ஒளியையும் உள்ளத்திற்குச் சுதந்திர உணர்ச்சியையும் ஊட்ட வல்லதாகும். இத்தகைய தமிழ் மறவர்களாகிய மானங் காத்த மருது பாண்டியரது தீரமும் தியாகமும் நிறைந்து விளங்கும் சுதந்திரப் போராட்டத்தின் வீரச்சுவை மலிந்த வரலாற்றை இனிக் காண்போம்.

8. சிவகங்கைச் சீமையிலே!

சிவகங்கைச் சீமையிலே மருது பாண்டியருக்கு அளவில்லாத செல்வாக்கு இருந்தது. அவர்கள் கிழித்த கோட்டை எந்த மறவனும் தாண்டான். அவர்கள் ஆணைக்கு ஆயிரக் கணக்கான மறவர்கள் ஆர்வத்தோடு காத்திருப்பர். 'விழு நெருப்பில்' என்றால் மகிழ்ச்சியோடு விழுந்து சாவர் பலர். அத்தகைய அன்பு படைத்த மக்களையும் மறவர் சேனையையும் அவ் வீரர்கள் பெற்றிருந்தார்கள்.

ஆரம்பத்தில் சிவங்கை மன்னருக்கு வேட்டை நாய்களை வளர்த்து, அவர் வேட்டைக்குக் கிளம்பும்போது உடன் செல்லும் வேட்டைத் தலைவனாகவே பெரியமருது நமக்குக் காட்சி அளிக்கிறான். அவ்வாறே சின்ன மருது ஆரம்பத்தில் சிவகங்கை மன்னருக்கு அடைப்பக்காரத் தொழில் செய்ய வந்து சேர்ந்தவனாகவே தெரிகிறது. ஆயினும் தங்கள் நெஞ்சுரத்தாலும், நேர்மைப் பண்பாலும், நுட்ப மதியாலும், நன்றி உணர்ச்சியாலும் இவ்விரு சகோதரர்களும் நாளடைவில் இணையில்லா அரசியல் செல்வாக்குப் பெற்றுவிட்டனர்; நாடாளும் மன்னனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பை நாளுக்குநாள் மிகுதியாக்கிக் கொண்டு, அரசனையும் விஞ்சிய புகழ்ச் செல்வர்களாக விளங்கினார்கள். இறுதியில் தள்ளாத் வயதினனாக இருந்த முத்து வடுகநாதன் எதற்கும் மருது பாண்டியர்களையே நம்பி வாழும் நிலை ஏற்பட்டது. மருது பாண்டியரும் இந்த நம்பிக்கைக்கு அணுவளவும் துரோகம் இன்றி, அரசரும் குடிமக்களும் ஒருங்கே புகழும்படி நாட்டாட்சியில் அறிவுரை கூறும் அமைச்சர்களாகவும், நாட்டு மக்களைப் போர்ப் பயிற்சியில் தலைசிறந்தவர்

களாக்கப் பாடுபடும் சிறந்த தளபதிகளாகவும் விளங்கினர். தங்கள் நாட்டில் இருந்த மறவர், அகம்படியார், சேர்வைகள், முதலியார், பிள்ளைமார், ராஜாக்கள், நாயுடுகள் அனைவரையும் கூட்டிப் போர்ப்பயிற்சி தந்தார்கள் மருது பாண்டியர்கள். அவர்களுடன் எப்போதும் இருபதாயிரம் வீரர்கள் எதற்கும் தயாராக இருந்தனர்.

இந்நிலையில் தான் சிவகங்கைச் சீமைக்குச் சோதனை நிறைந்த காலம் தொடங்கிற்று. நாம் சிவகங்கைச் சீமையைப் பற்றியும், அதை ஆண்ட முத்து வடுகநாத பெரிய உடையணத் தேவனைப்பற்றியும், யூனியன் ஜாக்கின் நிழலில் நின்றுகொண்டு ஆர்க்காட்டு நவாப் செய்துவந்த தர்பாரையும், அவன் புரிந்த அநீதிகளையும் பொறுக்க முடியாமல் வீர மறவர்கள் நெஞ்சம் குமுறிக் கொண்டிருந்த செய்தியைப் பற்றியும் முன்பே படித்திருக்கிறோம். 'கப்பம்' என்று கேட்ட தனக்குக் கத்தியை உருவிக் காட்டிய மறவர்கள், தன்னையும் தனக்குத் துணையாக நிற்கும் கம்பெனிக் கூட்டத்தையும் நாசமாக்கச் செய்யும் சதிகளை அறிந்து சீற்றம்கொண்ட நாவாப்பின் சேனை ஜோசப் ஸ்மித்தின் தலைமையில் இராமநாதபுரத்தைக் கைப்பற்றிய செய்தியை அறிந்திருக்கிறோம் அல்லவா? அதற்குமேல் நடந்தவற்றைப் பார்ப்போம் :

ஜோசப் ஸ்மித் வெற்றித் திமிரோடும், நவாப் சேனையோடும், பிற கூலிப் படைகளோடும் சிவகங்கைச் சீமையை நோக்கிச் சீறி வருவதை அறிந்தான் முத்துவடுகநாதன். அவன் மீசை துடித்தது; கண்கள் சிவந்தன; தன் இரு கண்கள் போன்ற மருது பாண்டியரைப் பார்த்தான். 'அரசே, அஞ்ச வேண்டாம். அந்நியப் படையின் அடிச்சுவடும் காணாதவகையில் அவர்களைக் கண்ட துண்டமாக

வெட்டிப் புதைப்போம்' என்று அண்ணனும் தம்பியும் ஒரே குரலில் உரைத்தனர்.

மருது பாண்டியரின் நெஞ்சுறுதியைக் கண்ட முத்து வடுகநாதன் மகிழ்ச்சிகொண்டான். அவனுடைய மகிழ்ச்சியை இரு மடங்காக்கினுள் அவனுடைய வீரபத்தினி வேலுநாச்சியென்பாள். ஆம். முத்துவடுகநாதனுக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்த வேலு நாச்சி வீர நெஞ்சம் படைத்தவள்; சின்ன மருதுவிடம் போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் கலையைக் கசடறக் கற்றவள். அத்தகைய பெண்மணியின் நெஞ்சில் ஆண்மை பொங்காது இருக்குமோ? 'தலைவரே, தொடுங்கள் போரை; தமிழகத்தின் மானத்தைக் காக்க இந்தப் பெண்ணின் இரத்தமும் பயன்படட்டும்' என்று அவள் உள்ளம் கருதியதைத் தன் கணவரிடம் வீரமொழிகளில் உணர்த்தினுள். வீறிட்டு எழுந்தான் முத்து வடுகநாதன்; தன் தலைநகரை விட்டுக் காளையார் கோயில் காட்டில் புகுந்துகொண்டான். காரணம் அது கட்டுக்காவலும் பலமும் பொருந்தியதோர் அரணுக விளங்கியதே ஆகும். எளிதில் எவரும் அதனுள் புகுந்து வெற்றி பெறல் அரிது. இதை நன்குணர்ந்த நவாப் புதுக்கோட்டை மன்னனுக்கு ஆசை வார்த்தை சொல்லி, அவனையும் தன் உதவிக்கு வரும்படி அழைத்தான். கம்பெனிப்படையை கர்னல் பான்ஷோர் நடத்திவந்தான். காசாசை பிடித்த ஒரு கயவன் காளையார் கோவில் அரண் பற்றிய உளவுகளை யெல்லாம் பகைவர்க்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்து விட்டான். அவனைக் காசால் அடித்து மயக்கி வைத்திருந்த நவாப் சேனையும் கம்பெனிப் படையும் புயலெனச் சீறி அரணுக்குள் பாய்ந்தது. துரோகியின் செயலையும் விரோதிகளின் வெற்றியையும் கண்ட

முத்துவடுகநாதன் உள்ளம் எரிந்தது. 'பகைவரை வெட்டி வீழ்த்துங்கள்; குண்டுக்குக் குண்டு; குத்துக்குக் குத்து; வெட்டுக்கு வெட்டு......நடக்கட்டும்' என்றுன் முத்து வடுகநாதன். ராணி வேலு நாச்சியும் கொடி பிடித்துக் குதிரைமீதேறி முன்னின்று 'ம்ம்......சாடுங்கள்; சிதையுங்கள் பகைவரை' என்றுள். அவ்வீர மங்கையின் கைவாள் கணக்கற்ற ஏகாதிபத்திய வெறியர்களின் தலையை வெட்டிக் குவித்தது. கண்டனர் இக்காட்சியை வீர மறவர்கள். அவர்கள் குருதி துடித்தது. அவர்கள் மாற்றார் படையைச் சின்னபின்னமாக்கினர். இந்நிலையில் மருது சகோதரர்கள் தம் கை வாளாலும், வளரித் தடியாலும், கதையாலும் மாற்ருர் படைவீரர்களைப் பிண மலைகளாக்கிக் குவித்தனர். ஆயினும் துரோகிகள் சதி, புதுக்கோட்டையான் படை, நவாப் சேனை, ஆயுத பலம் நிறைந்த கம்பெனிப் பட்டாளம் - இவை அனைத்தும் சேர்ந்து தாக்கும்போது கோட்டையின் கதி என்னுகும்? மதில்கள் இடிந்தன. கோட்டை வாசல் பகைவர் கைகளில் பிடிபட்டது. நிலைமை யறிந்த சின்னமருது முத்து வடுகநாதன் காதோடு காது வைத்துப் பேசினுன்; 'அரசரே, கிளம்புங்கள்; ஏற்பாடுகள் தயார்: தப்பிச் செல்வோம்; படைதிரட்டிப் பின்னர்த் தாக்குவோம்' என்றுன். முத்து வடுகநாதன், 'முடியாது: ஒருநாளும் முடியாது. நீங்களும் இராணியும் எப்படியாவது தப்பிச்செல்லுங்கள். நான் என் நாட்டைவிட்டு வெளியேறேன். கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரை மாற்றுனது மார்பை, மண்டையைப் பிளந்து போராடுவேன். வெற்றி அல்லது வீரமரணம் அடைவேன். என் உடல் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் ஒரு சுதந்திர வீரன்

கிளப்புவான். எனவே கவலை வேண்டாம். புறப்படுங்கள். இராணியைக் காப்பாற்றுங்கள்' என்றான். இதற்குள் தலைசிறந்த அத்தமிழ் வீரரை நாற்புறமும் பகைவர்படை வளைத்துக்கொண்டது. 'என்னைக் கைது செய்ய எமனாலும் முடியாது' என்று எட்டிப் பிடிக்க வந்த பகைவரை வெட்டி வீழ்த்தினான் முத்துவடுநாதன்; கையில் கிடைத்த ஆயுதங்களை எல்லாம் பயன்படுத்திப் பகைவர் படையைக் கூறு கூறாக்கினான்; கருவிகள் யாவும் தீர்ந்த பின்னரும் கடுகிவந்த பகைவனைக் கையாலேயே குத்தினான்; வாளாலும் ஈட்டியாலும் வீரமிக்க கைகளாலும் வந்தவரை எல்லாம் எதிர்த்து, விண்ணுலகுக்கு அனுப்பிய அவ்வீரமகனது திருக்கரங்களை வெட்டித் தள்ளினர் ஏகாதிபத்திய வெறியர்கள். 'கைபோனால் என்ன' என்று பாய்ந்துவந்த பகைவரைக் கால்களால் எட்டி உதைத்தான் முத்துவடுகநாதன். கால்கள் துண்டாயின. களைத்தானில்லை. அடக்கவந்தவர்களைப் பற்களால் கடித்து அலறவைத்தான். அவன் திருமுகத்தைத் தாக்கினர் கயவர்கள். அப்போதும் அவ்வீரன் காறி உமிழ்ந்தான் வெறியர் கூட்டத்தைப் பார்த்து. இறுதியில் ஒரு குண்டால் தமிழகத்தின் சுதந்திரத்திற்காக இறுதிவரைப் போராடிய வீர முத்துவடுகநாதன் பலியானான். 'வீரருள் வீரனாய் வாழ்ந்த அத் தமிழ்மகனை நாம் என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றுவோமாக !'

முத்துவடுகநாதன் மாண்டான். அவன் வீரபத்தினி வேலு நாச்சியும் மருதுபாண்டியரும் திண்டுக்கல்லுக்குக் காற்றாய்ப்பறந்து சென்றனர். அப்போது திண்டுக்கல் மைசூர் ஆதிக்கத்தில் இருந்தது. பிரிட்டிஷ் அதிகாரத்தைத் தொலைக்க உறுதிபூண்டிருந்த ஐதர்அலி

அப்போது அங்கிருந்தான். அவன் மருது பாண்டியரையும் இராணி வேலு நாச்சியையும் வரவேற்றான்; அவர்கள் சுதந்திர வேட்கையையும் வீர உணர்ச்சியையும் கண்டு வியந்து வாழ்த்தினான்.

இதற்குள் நவாப்பின் ஆளுகைக்கு இராமநாதபுரமும் சிவகங்கையும் இரையாயின. அப்பகுதியை அவன் எட்டு ஆண்டுகட்குக் குத்தகைக்கு விட்டான். கி. பி. 1780ஆம் ஆண்டுவரை நவாப்பின் தர்பார் அந்த வகையில் நடந்தது மறவர் நாட்டிலே. ஆனால் நாட்டு மக்கள் மனம் குமுறிக்கொண்டிருந்தது. கனவிலும் நனவிலும் குடிமக்கள் தங்கள் அரச குடும்பத்தைப் பற்றியே நினைத்துக் கண்ணீர் சிந்தினர். வீரமங்கை வேலுநாச்சி நாட்டைவிட்டு வெளியேறியதையும், மருதுபாண்டியர்கள் தங்கள் சீமையைப் பிரிந்து வாழ்வதையும் உணர்ந்தபோதெல்லாம் அவர்கள் நெஞ்சம் காட்டு நெருப்பாய் கனன்று எரியத் தொடங்கியது.

இந்நிலையில் மருது பாண்டியர்களும் கைகட்டி வாளா இருக்கவில்லை. மறைமுகமாக அவர்கள் மறவர் நாட்டில் உள்ள மக்களோடு இரகசியத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தனர். குடிகளும் தங்கள் அரசிக்கு இரகசியமாகத் திறைப்பணம் அனுப்பி வந்தனர். அதனால் நவாப்பின் குதிரைக்காரனால் தம்படி கூட வசூலிக்க முடியவில்லை. நாட்டிலே வறுமையும் பஞ்சமும் தாண்டவம் ஆடின. கள்ளர்களின் கொள்ளை ஊரைக் கலகலக்க வைத்தது. அவர்களை அடக்குவது நவாப்பின் தர்பாரால் ஆகிற காரியமா? இல்லை. சிவகங்கைச் சீமையில் நிலவிய இந்த நிலைமையே இராமநாதபுரத்திலும் இருந்தது. கடைசியில் வேறு வழியில்லாமல் நவாப் மறவர் நாடு

களைத் திரும்பவும் பழைய அரச குடும்பத்தினருக்கே திருப்பிக்கொடுத்துவிட நேர்ந்தது.

மீண்டும் வேலு நாச்சியே சிவகங்கைக்கு அரசியானாள். மருது சகோதரர்கள் அவளுக்கு அறிவொளி காட்டும் அமைச்சர்கள் ஆனார்கள். வெள்ளை மருது, நாட்டு அரசியல் பற்றி அதிகக் கவலை ஏதும் இன்றிப் பழையபடி 'காட்டு ராஜா' ஆனான். அதனால் சின்ன மருதுவே நாட்டின் நிருவாகத்திற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின் சிவகங்கைச் சீமையின் அரசியலில் பல முறை நவாபும் கம்பெனி அதிகாரிகளும் தலையிடுவதும், அதைத் தகர்க்க மருது பாண்டியர் எதிர்த்துப் போராடுவதுமான பல நிகழ்ச்சிகள் நடந்தன. அரசியல் நிருவாகம் வேலு நாச்சியின் கைக்கும் மருது பாண்டியர் கைக்குமாகப் பந்துபோல் மாறி மாறிச் சென்றது. காரணம் விதவையான அப்பெண்ணரசியால் நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் நிருவாகப் பொறுப்பு முழுதையும் தன்னந் தனியாக மேற்கொள்ள முடியாமையே ஆகும். மேலும் மருது பாண்டியர் வீரத்திலும் தியாகத்திலும் மக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. முத்து வடுகநாதன் மாண்ட பின்னும் தங்கள் அரசியைக் காப்பாற்றி மறைமுகமான புரட்சி வேலைகள் மூலம் நாட்டின் அரசுரிமையை வேலு நாச்சிக்கே உரிமையாக்கிய வீர சகோதரர்களின் மீது மறவர் மக்களுக்கு இருந்த வாஞ்சை எல்லையற்ற நிலைக்கு வளர்ந்துகொண்டே போயிற்று. சிவகங்கைச் சீமையின் அரசுரிமையைப் பற்றி இடையிடையே நிகழ்ந்த சிறு சிறு மாறுதல்கள் எல்லாம் ஒரு வகையாகத் தீர்ந்தபின் மருது சகோதரர்களே அச்சீமையின் அரசுரிமையை ஏற்றுக்கொண்டார்

கள். சிறப்பாகச் சின்ன மருதுவே சிவகங்கைச் சீமையின் மன்னனானான். இதில் எவ்விதமான ஒளிவும் மறைவும் இல்லை. நாட்டு மக்களும் கம்பெனி அதிகாரிகளும் சின்ன மருதுவே சிவகங்கைச் சீமையின் மன்னன் என்ற உண்மையை நன்கு அறிவர். இன்னும் தெளிவாகச் சொன்னால், நாட்டின் திறைப்பணம், வரவு செலவு கணக்குகளெல்லாம் வேலு நாச்சி உயிரோடு இருந்த போதே மருது பாண்டியர் பெயராலேயே அரசாங்கக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டதாம். இவ்வாறு சிறுகச் சிறுக சிவகங்கைச் சீமையின் ஆதிக்கத்தைக் கைப்பற்றி வந்த மருது பாண்டியர் 1800ஆம் ஆண்டில் வேலு நாச்சி இறந்துபோனதும் எவ்விதமான தடையும் இன்றிச் சிவகங்கைச் சீமையின் நேரடி நிருவாகத்தைத் தாங்களே ஏற்று நடத்தலானார்கள்.

இந்நிலையில் தான் வீரபாண்டியன் தொடங்கிவைத்த சுதந்திரப் போரைத் தொடர்ந்து நடத்திய மாவீரன் ஊமைத் துரை மீண்டும் பாஞ்சைப் பதியைத் துறந்து வாளும் கையுமாய்த் தன் உயிர் நண்பர்கள் புடைசூழச் சிவகங்கைச் சீமைக்கு வந்து சேர்ந்தான்.

வீரபாண்டிய கட்டபொம்மன் மீது தலைநாள் தொட்டே மருது பாண்டியர்க்கு மிக்க அன்பும் மதிப்பும் இருந்து வந்தன. சற்றேறக்குறைய **ஒன்றரை ஆண்டுகளும் எண்பது நாட்களும்** நடந்த பாஞ்சைப் பதியின் சுதந்திரப் போரில் தங்களால் இயன்றவரை எல்லா உதவிகளையும் எப்போதும் செய்து வந்தனர் மருது பாண்டியர். இடுக்கண் வந்தபோது இவ்வாறு மருது பாண்டியர் செய்த உதவிகளை ஊமைத் துரையின் நன்றி உணர்ச்சி நிறைந்த உள்ளம் மறக்கமுடியுமோ? எனவே தன் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உரிய மருது பாண்டியர்

களின் துணைகொண்டு பரதேசி வெள்ளையரின் ஆதிக்கத்தை நாசமாக்க உறுதிகொண்டனர் ஊமைத்துரையும் அவன் உயிர்த் தோழர்களும். இங்கிலையில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது பாண்டியர் மனத்தை நெருப்பாக்கிற்று: ஆணவம் பிடித்த ஆங்கிலக் கம்பெனிப் படையின் வெறிபிடித்த நெறியற்ற போக்கு.

சிவகங்கைச் சீமையின் அரசுரிமையை மருது பாண்டியரிடமிருந்து பிடுங்க, நவாப்பும் கம்பெனி அதிகாரிகளும் சேர்ந்து, 'ஒழுங்காகக் கப்பம் கட்டுவதில்லை' என்ற காரணம் காட்டிச் சதி செய்தனர்; மிரட்டினர்: 'வீரன் ஊமைத்துரை உயிரோடு தப்பிவிட்டான். அவன் உள்ளவரை நமக்கு அமைதி ஏது? காற்றோடு தீ கலந்தாற்போல் மருது பாண்டியரோடு சேர்ந்துகொண்டு, அவன் மாபெரும் போரைத் துவக்குவதற்கு முன்பே நாம் சிவகங்கையைத் தாக்கவேண்டும்' என்று சிந்தித்துத் திட்டமிட்டனர். இதை அறிந்த மருது பாண்டியரும் அவன்மீது பேரன்பு படைத்த வீரமறவர்களும் திரண்டு எழுந்தனர்; 'பரதேசிக் கூட்டத்திற்கு இவ்வளவு மமதையா? எங்கள் அருமை அரசன் முத்து வடுகனைக் கொன்ற வெள்ளைக் கூட்டத்தை இன்னும் உயிரோடு உலாவ விடுவதா?' என்று ஆத்திரம் கொண்டனர். வீர வெறியால் 'அருமைச் சிவகங்கைச் சீமையின் சுதந்திரத்தை இனி எக்காரணத்தாலும் பறிகொடுக்க முடியாது' என்று எழுச்சி கொண்டனர் மருது பாண்டியர். இங்கிலையில் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல் கம்பெனி அதிகாரிகள், 'கப்பம், கப்பம்' என்று மருது பாண்டியரை வற்புறுத்தலாயினர். ஆனால் சிவகங்கைச் சீமையின் சுதந்திர வீரர்களோ, 'தலை போனாலும் சல்லிக்காசும் கப்பமாகத் தாரோம்' என்று

கண்டிப்பாகக் கூறிவிட்டனர். மூண்டது போர். ஆம். ஏகாதிபத்திய வெறிக்கும் சுதந்திர வேட்கைக்கும் இடையே போர்!

சிவகங்கைச் சீமைக்கான சுதந்திரப்போர் மூளும் சமயம் பார்த்து ஊமைத்துரையும் அவன் தோழர்களும் மருதுபாண்டியர் நாட்டிற்கே வந்து சேர்ந்தனர். அவர்கள் உள்ளம் கொல்லன் உலைபோல் கொதித்துக் கொண்டிருந்தது. 'பாஞ்சைப் பதிக் கோட்டையைத் தகர்த்ததோடு, அங்கிலப்பரப்பு முழுவதையும் உப்பையும் வரகையும் வாரி இறைத்து உழவும், ஆமணக்குச் செடிகளை நடவும் இந்தப் பறங்கிக் கூட்டத்திற்கு எவ்வளவு திமிர்!' என்று எண்ணி ஊமைத்துரையின் உள்ளம் குமுறியது. 'நான் நாடிழந்தாலும் நம்பிக்கை இழக்கவில்லை. வீரபாண்டியன் தம்பிதான் நான் என்பதை உலகறியச் செய்வேன்' என்று அவ்வீரன் உறுதி பூண்டான்.

வெள்ளை வெறியர்களின் நெறிகெட்ட செயலைச் சுட்டுப் பொசுக்க உறுதிகொண்ட முப்பெரு வீரர்களும் சிவகங்கைச் சீமையிலே சந்தித்தனர். ஆம். சிங்கங்கள் ஒன்று கூடின. அவ்வீர சிங்கங்களின் கர்ஜனையைக் கேட்டுக் கம்பெனிப் பட்டாளத்தின் குலை நடுங்கியது.

9. தமிழர் படை திரண்டது!

காட்டரசன் - சிங்கத்தின் தலைமையில் கடும்புலிகள் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டாற்போல் வாளும் வேலும் தாங்கிய வீரர் கூட்டம் பல்லாயிரக் கணக்கில் பெரிய மருது - சின்ன மருது, ஊமைத்துரை ஆகிய முப்பெரு வீரர்களின் தலைமையில் அலைகடல் போல் அணிவகுத்து நின்றது. உருவிய வாளுடன் நின்ற அவர்கள் உள்ளம், 'ஒழிக கம்பெனியான் ஆணவம்' என்று முழங்கியது.

சிவகங்கைப் பாளையத்தாரிடம் சுமார் இருபதாயிரம் வீரர்கள் கொண்ட மறவர்படை இருந்தது. ஈட்டி, வாள், வேல், வளரித் தடி, கதைபோன்ற பழைய போர்க் கருவிகளோடு புதிய போர்க்கருவிகளான துப்பாக்கிகளும் வெடிமருந்தும் ஓரளவு இருந்தன. ஆனால் கம்பெனிப் பட்டாளத்திடமோ பயங்கரப் பீரங்கிகள் நிறைந்திருந்தன. இந்நிலையிலும் துரோக சக்திகள் மட்டும் கம்பெனிப் பட்டாளத்திற்குத் துணைபுரியாமல் இருந்திருந்தால் பிரிட்டிஷ் படைகளைக் கொன்று குழியிலிட்டிருப்பார்கள் மருதுபாண்டியரும் ஊமைத்துரையும். ஆனால் இச் சந்தர்ப்பத்திலும் துரோகம் செய்வதற்கே தன் உள்ளத்தைப் பண்படுத்தி வைத்திருந்த புதுக்கோட்டைத் தொண்டைமான், தன்னை, தன் நாட்டை, படையைக் கம்பெனி அதிகாரிகட்கு அடகு வைத்தான். வீர பாண்டியனைக் காட்டிக் கொடுத்து எத்தனையோ சன்மானங்களைப் பெற்றுச் சுவை கண்டவன் அல்லவா அவன்? தொண்டைமானது துரோகச் சிந்தனையை அறிந்த மருதுபாண்டியர், தமிழகத்தின் மானத்தைக் காக்கும் பொருட்டு, தாய்நாட்டின் உரிமைக்காகத் தங்களோடு சேர்ந்து போரிடாவிடினும், பகைவர்க்குப்

பயன்படாமல் நடுநிலைமையாவது வகிக்கும்படி அவனை மன்றாடி வேண்டினர். தொண்டைமானோ அவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பவன்? தொண்டைமானது பிடிவாதத்தைக் கண்ட மருதுபாண்டியர் அன்பால் முடியாததை அச்சத்தால் சாதிக்க முயன்றனர். தொண்டைமான் துரோகம் புரிந்தால், அவன் நாட்டிற்கும் நகர்க்கும் கோட்டைக்கும் களஞ்சியத்திற்கும் தீ வைப்பதாகப் பயமுறுத்தினர். ஆனால் புதுக்கோட்டை மன்னனோ, நயத்திற்கு இசையாதது போலவே பயத்திற்கும் பணியாதிருந்தான். ஆபத்து நேரின் தன்னினும் பலம் பொருந்திய கம்பெனிப் படைகள் தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது. எல்லாவற்றிலும் விந்தையானது வெள்ளை நாடோடிகள் பாளையக்காரர்களை முற்றிலும் முறியடித்து வெற்றி பெறும்வரை தன் திருமணத்தைக் கூடத் தள்ளிவைக்க அவன் உறுதிகொண்டான். என்னே அவன் ஆண்மை! அதோடு புதுக்கோட்டையின் ஓரே ப்டைத் தளமாகவும் பலம் பொருந்திய கோட்டையாகவும் இருந்த திருமயத்தையும் பிரிட்டிஷ் துருப்புகட்கே ஒப்படைத்தான் தொண்டைமான். அதோடு அமைந்தானா? நாலே நாட்களில் மூவாயிரம் படைவீரர்களுடன் இன்ஸ் என்பவனுக்குத் துணைபுரிய நத்தம் என்னும் இடத்திற்கு ஏகாதிபத்திய வெறியர்கட்குப் பக்கபலமாகப் படை திரட்டிச் சென்றான்.

இங்ஙனம் தமிழகத்தின் சுதந்திர வீரர்கட்கு எதிராகத் தமிழகத்திலேயே துரோகிகள் மூகாமை உருவாக்குவதில் வெற்றிகண்டவன் கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பாக தஞ்சாவூரில் தளபதியாக இருந்த கர்னல் **ப்ளாக்பர்ன்** என்ற வெள்ளையன்.

இவ்வாறு தமிழகத்தைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் பெரிய அளவுக்கு வெற்றிகண்ட கம்பெனி அதிகாரிகள் மருதுபாண்டியர்களுக்கு எதிராக முதன் முதலாக மீண்டும் 1801ஆம் ஆண்டு, மே 29ஆம் தேதி போர் துவங்கினார்கள். ஆம். பாஞ்சைக்கோட்டையைத் தகர்த்தெறிந்த வெற்றி வெறி கம்பெனிப் படையின் தலைக்கேற, ஐந்தே நாட்களில் மீண்டும் போர் தொடங்கினர். அப்போர் அவர்கள் உயிரையும் உடைமையையும் வாட்டி வதைக்கும் கொடியபோர் ஆயிற்று.

பாஞ்சைப் பதியைப் பிடிக்கப்போரிட்ட கம்பெனிப் படைகளில் ஒரு பகுதியை மட்டும் அங்கேயே நிறுத்தி வைத்து, அக்கோட்டையைத் தரைமட்டமாக்கி, அந்நிலப் பகுதி முழுதும் உப்பும் வரகும் வாரி இறைத்து உழும்படி கட்டளை பிறப்பித்த கம்பெனித் தளபதிகள், 'எஞ்சிய படையுடன் ஊமைத்துரை தப்பி விட்டானே! இனி மீண்டும் எந்தக் கோட்டையுள் இருந்துகொண்டு நம்மைக்கூவி அழைப்பானோ! இன்னும் நம்முள் எத்தனை பேர் எமனுலகம் சேர்வோமோ!' என்று எண்ணியவர்களாய் மேஜர் ஷெப்பர்டு என்பவன் தலைமையில் 26மைல் தொலைவில் உள்ள நாகலாபுரத்திற்கு ராணுவ நடை போட்டனர். அங்கே சென்றதும் மே மாதம் 28ம்தேதி புதுப்படைப் பலத்தைச் சேர்த்துக் கொண்டு, மீண்டும் சோதனை நிறைந்ததோர் கட்டத்திற்குத் தங்களைத் தயாராக்கிக் கொண்டு, கமுதியை நோக்கி விரைந்தது கம்பெனிப் பட்டாளம். இவர்கள் வருகையைச் சிவகங்கைச் சீமையில் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு, 'வரட்டும், வரட்டும் வெள்ளைப்படை; நாய்க்கும், நரிக்கும், பேய்க்கும், எமனுக்கும் வயிறார விருந்து வைப்போம்' என்று கூர்வாளைத் தீட்டியவண்ணம் தமிழர் படை திரண்டிருந்தது.

10. போர்! போர்! காட்டில் கடும்போர்!

தமிழகத்தின் சுதந்திர வீரர்கள் கமுதியில் நிறைந்துள்ளதை அறிந்த கம்பெனிப்பட்டாளம் 1801, மே மாதம் 29ஆம் தேதி அங்கே நுழைந்தது. எதிர்பார்த்த வண்ணம் வீர மறவர்கள் கம்பெனிப் பட்டாளத்தை வாள்கொண்டு வரவேற்றனர். மூண்டது போர்! இரு தரப்பிலும் நல்ல சண்டை! வெட்டு, குத்து, நாசம்! கமுதியில் தொடங்கிய போர் 46 மைல் தொலைவில் உள்ள நாகலச்சேரியிலிருந்து திருப்பூவணத்திற்கு மாறியது. இங்கு நடந்த போரில் கம்பெனி வீரர்கள் பலர் பலியிடப்பட்டனர். இதற்குப் பின் எட்டரை மைல் தொலைவில் உள்ள திருப்பாச்சேத்தி என்ற இடத்தில் நடந்த போரில் சுதந்திர வீரர்கள் தங்கள் வஞ்சம் தீரக் கம்பெனிப் பட்டாளத்தைக் கொன்று குவித்தனர். அன்றைத் தினத்தில் நடந்த போரில் மட்டும் மேஜர் கிரே என்ற தளபதியும் 16 பேரும் எமனுலகம் சென்றனர் என்றும், லெப்டினன்ட்டுகளான பிளாக்கர், கோல், பர்மின்டர், ஸ்டுவர்ட் என்ற நான்கு படைத்தளபதிகளும் முப்பத்தைந்து பேரும் படுகாயப்படுத்தப்பட்டனர் என்றும் வெள்ளைத் தளபதி வெல்ஷ் எழுதிவைத்துள்ள 'நாட் குறிப்பு' கூறுகின்றது. இதை அடுத்து ஜூன் 10ஆம் தேதி நடந்த வீரப்போரில் 3000க்கு மேற்பட்ட சுதந்திரவீரர்கள் கலந்துகொண்டனர். அன்றைய போரில் முதலில் பத்து ஐரோப்பியர்களும் எண்பத்தாறு சுதேசிக் கூலிப்படை வீரர்களும் சிவகங்கை மறவர்களின் இரத்தம் தோய்ந்த வாளுக்கு இரையாயினர். இப் 'பரிசுகளை' மறவர் சேனையிடம் இருந்து வேதனையுடன் பெற்றுக்கொண்ட கம்பெனிப்

பட்டாளம் அடுத்துப் பார்த்திபனூரில் ஓரிரவு முகாம் அடித்தது. அன்று முழுதும் அவர்கள் உறங்கவில்லையாம். அன்றைய தினம் நள்ளிரவு கழிய, விடியற்காலம் மணி நான்கானதும் பெற்ற மன நிம்மதியை அம்முகாமில் இருந்த கர்னல் வெல்ஷ் அதற்குமுன் எப்போதுமே கண்டது இல்லை என்று எழுதிவைத்துள்ளார். என்னே கம்பெனிப் பட்டாளத்திற்கு இருந்த குலை நடுக்கம்!

பொழுது புலர்ந்தது. கம்பெனிப் பட்டாளம், 'தலை தப்பியது போதும்' என நினைந்து, ஓட்டோடியும் பரமக்குடி வழியாக இராமநாதபுரம் போய்ச் சேர்ந்தது. இடை வழியில் ஊமைத்துரையின் வீரர்களும் மருதுபாண்டியரின் மறவர்களும் கம்பெனிப் பட்டாளத்திற்குத் தர வேண்டிய காணிக்கைகளைக் கொடுக்கத் தவறவில்லை. 'எப்படியோ அடிபட்டாலும் உதைபட்டாலும் உயிரோடு பிழைத்தோம்' என்று இராமநாதபுரம் சேர்ந்த கம்பெனிப் பட்டாளம் ஆறு நாட்கள் நிம்மதியாகத் தங்கி, ஓய்வுகொண்டு, தின்றும் குடித்தும் திரிந்ததாம். இந்த ஆறுநாள் ஓய்விற்குப் பின் மீண்டும் கம்பெனிப் பட்டாளத்திற்குக் கடுமையான வேலை தரக் காத்திருந்தது மறவர் சேனை.

ஜூன் 22ஆம் தேதி மீண்டும் கம்பெனிப் பட்டாளம் மறவர் சேனையை அடக்க மார் தட்டிப் புறப்பட்டது. பழமனேரி ஆற்றங் கரையில் அமைந்துள்ள பலம் பொருந்திய கமுதிக் கோட்டையில் ஆரம்பித்த கம்பெனிப் படைகளின் முகாம் சிறு வயல் வரை நீண்டு கொண்டே சென்றது. இந்த இடைக்காலத்தில் - எட்டு நாட்களில் - கம்பெனிப் படைகள் கண்ட சேதம்: 6 வெள்ளையர்களும் 6 சுதேசிகளும் கொல்லப்பட்டனர்.

மூன்று வெள்ளை அதிகாரிகளும், 16 ஐரோப்பியர்களும், 36 சுதேசிகளும் படுகாயம் அடைந்தனர். இந்த எட்டு நாள் போரில் நாலாயிரம் வீரமறவர்கள் தாக்கியும் தற்காத்தும் போர் புரிந்தனராம். கம்பெனிப் பட்டாளம் இவர்கள் படுத்தும் கொடுமை பொறுக்காமல் நள்ளிரவில் ஒக்கூர் என்ற கிராமத்தையே தீயிட்டுச் சாம்பலாக்கியது.

கிராமங்கட்கு எல்லாம் தீயிட்டுக் குடிமக்கட்கு சொல்லொணாத் துன்பமும் அவமானமும் இழைத்து முன்னேறி வந்த கம்பெனிப் பட்டாளம் கடைசியாக மருதுபாண்டியரின் தலைநகரான சிறுவயல் நகருக்குள்ளேயே நுழைந்தது! வீரமறவர்கள் கம்பெனிப் பட்டாளத்தை எதிர்த்துக் கடும்போர் நடத்தினர். பாஞ்சைப் பதியில் போலவே இங்கும் வீரமறவர்களிடம் பேய்வாய் பீரங்கிகளும் ஏராளமான வெடிமருந்துகளும் இல்லாமையாலும், மேலும் மேலும் துரோகிகளால் கம்பெனிப் படைக்குப் பலம் பெருகியதாலும், அனல்மழை பொழியும் கம்பெனிப் பட்டாளத்தின் மூர்க்கம் நிறைந்த தாக்குதலுக்குத் தமிழர் படை பின்வாங்க நேர்ந்தது. ஆனால் வீரமறவர்கள் அவ்வாறு பின்வாங்க நேர்ந்ததை அறிந்து, அழகின் வடிவாய் விளங்கிய தங்கள் அருமைத் தலைநகராகிய சிறுவயலைத் தீக்கு இரையாக்கி, அந்நகரில் ஒரு அங்குலம்கூட அந்நியனுக்குப் பயன்படாதவாறு செய்துவிட்டுத் திரும்பினர். இவ்வாறு ஆத்திரம் கொண்ட வீரமறவர்கள் வைத்த வெந்தீக்கு இரையான அழகு மிக்க சிறுவயல் நகரின் சிறப்பை இச் சந்தர்ப்பத்தில் நேரில் கண்ட கர்னல் வெல்ஷ் சித்திரித்துக் காட்டியுள்ளதைப் பாருங்கள்:

'மருது பாண்டியரின் அரண்மனை ஆரவாரமான தோற்றத்தைவிட எளிமை கலந்த அழகிற்கே பேர்பெற்று

விளங்கியது. சிறியதாயினும் உறுதியாகவும் நன்றாகவும் கட்டப்பட்டிருந்தது அவ் அரண்மனை. சிறுவயல் நகரத்தின் வீதிகள் அகலமாகவும் ஒழுங்காகவும் அமைக்கப்பட்டிருந்தன. அவ்வீதிகள் ஒன்றில் அழகிய மரச்சாலை ஒன்று அமைந்திருந்தது. மொத்தத்தில் அந்த நகரம் இந்தியாவில் நான் கண்ட வேறு நகரங்களைக் காட்டிலும் மிகுந்த அழகும் சிறப்பும் பொருந்தியதாகவே விளங்கியது.'

இத்தகைய சிறந்த நகரைத்தான் மறவர் சேனை தன்மான உணர்ச்சியின் காரணமாகத் தீயிட்டுக் கரியாக்க நேர்ந்தது. என்னே காலத்தின் கொடுமை! கம்பெனிப் படை முகாம் அடித்திருந்த இடத்திலிருந்து மூன்றே மைல் தொலைவில் இருந்த சிறுவயல் நகரத்தைப் பிடிக்கக் கம்பெனிப் படைகள் பட்ட பாடு கொஞ்சம் அல்ல! ஆறு மணிநேரம் மிகக் கடுமையான போர் நடந்தது. ஆம். அங்குலம் அங்குலமாகவே கம்பெனிப் பட்டாளம் வீரமறவர்களை எதிர்த்து முன்னேற வேண்டியிருந்தது. அவ்வாறு முன்னேறியும் தீயில் வேகும் நகருக்குள்ளே தான் நுழைந்தது ஏகாதிபத்தியப் படை. இதற்குப் பின் மருதுபாண்டியரின் வீரப்போர் புதியதொரு கட்டத்தை அடைந்தது. சிறுவயலுக்குத் தென்மேற்கில் 7 அல்லது 8 மைல் தொலைவில் உள்ளது காளையார் கோவில். மருது பாண்டியர் நாளில் இந்தப் பகுதி முழுதும் அடர்ந்த காடாக இருந்தது.

சிறுவயல் நகரத்தைத் தீக்கு இரையாக்கிவிட்டு வெளியேறிய வீரமறவர் சேனை சிறுவயல் காட்டுக்குள்ளே சென்று, காளையார் கோவிலை நோக்கிப் பறந்தது. ஆனால் மலைபோல் உயர்ந்து, பச்சைப்பசேலெனப் பயங்கரமாக நிற்கும் அக்காட்டுள் நுழைந்து அவர்களை வெற்றி

கொள்வது கம்பெனிப் படைகளுக்கு எளிதில் கைகூடுமோ? எனவே சிறுவயல் காட்டையே அழித்துக் காளையார் கோவிலை அடைய நீண்டதோர் பாதை போடும் வேலையில் முனைந்தனர் கம்பெனிப் படையினர். இந்த வேலையில் முன் நின்றவர்கள் புதுக்கோட்டைத் தொண்டைமான் அனுப்பிவைத்த இரண்டாயிரம் கூலிப் படைகள். இவர்களைப் பாதுகாக்க இருநூறு வெள்ளையரும், மலேயா நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட சிப்பாய்களும் துப்பாக்கியும் கையுமாக நின்றனர்.

32 நாட்கள் பாடுபட்டுக் காட்டைக் கிழித்துப் பாதைபோடும் பெரிய வேலையில் கம்பெனித் துருப்புக்கள் காலத்தைக் கழித்தன. ஜூலை மாதம் 31ஆம் தேதி தொடங்கப்பட்ட இவ்வேலை செப்டெம்பர் மாதம் 2ஆம் தேதி கைவிடப்பட்டது. காட்டை அழிக்கும் கடினவேலையில் ஈடுபட்ட கம்பெனிப் படைகள் அனைத்தும், உள்ளமெலாம் உடைந்து, மெய்யெலாம் சோர்ந்து பழைய ஒக்கூர் கிராமத்திற்கே ஓடிவந்தன. இந்த 32 நாட்களில் காட்டுக்குள் சிக்கிக்கொண்ட கம்பெனிப் படைகளைக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் மருது பாண்டியர்களின் சேனை கண்ட துண்டமாக்கியது. பல முறை கம்பெனிப்படைகள் 'கூண்டோடு கைலாசம்' போகவேண்டிய நிலையிலிருந்து உயிர் தப்பின. காட்டை அழிக்கும் முயற்சியிலும் கம்பெனிப்படைகள் சுலபமாக வெற்றி பெற இயலவில்லை. வெட்ட வெட்ட, காடு அடர்த்தியாகவும் கடினமாகவும் இருப்பது கண்டு வெள்ளைப்படை வெருண்டு நின்றது. இடையிடையே கடுமழையில் கம்பெனிப் பட்டாளம் அடைந்த துன்பம் சொல்லொணாதது. ஆம். இயற்கையும் கூட இந்த ஏகாதிபத்திய வெறியர்களை எதிர்த்துப் போராடியது.



சிறுவயல் காட்டைச் சிதைத்துக் காளையார் கோவிலுக்குப் பாதை அமைத்தல் முதலான கடும் முயற்சிகளைக் கம்பெனிப் பட்டாளம் மேற்கொண்டதைக் காட்டும் படம்.

பாண்டியர்கட்கு முதல்தரமான துரோகம் புரிந்தான்; அப்போது கம்பெனிப்படைகளின் முக்கிய தளபதியாக இருந்தவனும், பாஞ்சைப்பதியின் அழிவுக்குக் காரணமாக இருந்த பாதகனும் ஆகிய கர்னல் அக்னியூ துரையின் காலில் போய் 'அடைக்கலம்' என்று அவன் வீழ்ந்தான். அத்துரோகி அக்னியூ துரையின் அருகிற் சென்று இரகசியங்களும் பேசினான். மருது பாண்டியர்களின் சேனையைப்பற்றியும் அவர்களுடைய போர்த் திட்டங்கள் பற்றியும் எல்லாச் செய்திகளையும் கூறித் தன் இனத்தவரையே காட்டிக்கொடுத்தான் அக்கல் நெஞ்சன்.

இத்தகைய துரோகச் செயல்கள் தங்களைச் சுற்றி நடந்துகொண்டிருந்தபோதிலும் வீரமிக்க மருது பாண்டியர் சிறிதும் மனம் தளராது, 'வீர மறவர் அல்லமோ நாம்?' என ஆவேசம் கொண்டு, 'உயிரினும் மானம் பெரிது' என்று போரிட்டனர். இப்போரில் நேரடியாகப் பங்கு கொண்டிருந்த கர்னல் வெல்ஷ் கூறுவதுபோல் இருபதாயிரம் தமிழ் மறவர்கள் தமிழகத்தின் சுதந்திரத்திற்காக வீரப் போர் நடத்தினர். ஆம். மண்ணைப் பறிக்க நடந்த போர் அல்ல அது. தாய்நாட்டின் மானத்தைக் காக்க நடந்த போர். அப்போரில் வீடு வாசல்களை எல்லாம் மறந்து, உயிரையும் வெறுத்து, மருது பாண்டியரும் ஊமைத்துரையும் காட்டிய தியாக நெறியில் நின்று போராடி, தலையும் கையும் காலும் கழுத்தும் மார்பும் துண்டிக்கப்பட்டும் சுடப்பட்டும் மாண்ட அம்மா வீரர்கள் சிந்திய இரத்தத்தால் காளையார் கோவில் காடு புனிதத் தன்மை எய்தியது. தன் 'நாட்குறிப்பில்' ஓரிடத்தில் கர்னல் வெல்ஷே கூறுவதுபோல் அக்காட்டின் எட்டுத்திசையிலும் வீரத் தமிழ் மறவர்களின்

சிவந்த இரத்தம் கோலமிட்டதுபோல் ஒழுகிக் கிடந்த தாம்! ஆம். தாய்நாட்டின் மானத்தைக் காக்கத் தங்கள் வீரக் குருதியைத் தமிழ் மண்ணில் சொரிந்த அம்மறவர்களின் பொன்னடிகளை எந்நாளும் தமிழ் இனம் நினைவில் வைத்துப் போற்றும்.

இத்தகைய தமிழ் வீரர்களின் துணிச்சல் நிறைந்த போராட்ட முறைகளை நினைத்தாலே நம் நெஞ்சம் வியப்பாலும் வீரத்தாலும் விம்மிதம் கொள்ளும். காளையார் கோவில் காட்டில் நடந்த கடும்போரின் இறுதிக் கட்டத்தை நம்மால் மறக்கவே முடியாது.

காட்டை அழித்துப் பாதைபோடும் வேலையில் இறங்கியிருந்த கம்பெனிப் பட்டாளம் போராடிப் போராடி நாலு மைல் தூரம் முன்னேறி விட்டது; காளையார் கோவில் கோபுரமும் அவர்கள் கண்ணுக்குப் புலனாகியது. 'இடையே இருக்கும் கண்மாய்க்கரையைத் தாண்டினால் காளையார் கோவில் நம் கையில் தான்' என்று இறுமாப்புக் கொண்டது வெள்ளைப்படை. இரவெல்லாம் இந்த இறுமாப்பில் வெறிகொண்டு குடித்துக் கூத்தாடியது கம்பெனிப் பட்டாளம்!

அடுத்த நாள் காலை எழுந்து பார்த்தால் காளையார் கோவில் கோபுரம் காணவில்லை. கண்மாய்க்கரை மண் சுவர் எழுப்பப்பெற்று, பெருமலைபோல் உயர்ந்து கிடந்தது! கிட்ட நெருங்கினால் குண்டுகள் 'டபார் டபார்' என்று வெடித்தன. ஈட்டியும் வேலும் எதிர்த்து வந்து பாய்ந்தன. பதிலுக்குக் கம்பெனிப்படைகள் பீரங்கிக் குண்டுகளைப் பொழிந்தாலோ, அவை அத்தனையும் 'சொத், சொத்' என்று போய் விழுந்தன! வெடித்த குண்டுகள் எல்லாம் வீணாயின. என்னவென்று ஆராய்ந்த ஆங்கிலப்படைஞர் அப்போதுதான் உண்மை

உணர்ந்தனர்; 'அடே, அது பாஞ்சைப்பதியில் ஊமையன் எழுப்பிய கோட்டையைப் போன்றே அதிசயமான மண்மலை' என்று அறிந்து மனம் இடிந்து போயினர். இவ்வாறு 'ஆப்பசைத்த குரங்குபோல்' காட்டுக்கிடையே சிக்கிக்கொண்ட கம்பெனிப் பட்டாளத்தை விரட்டி விரட்டித் தாக்கினர் தமிழ் மறவர். இந்தத் தாக்குதலுக்கு உட்பட்டும், யார் செய்த புண்ணியத்தாலோ தப்பிப் பிழைத்து வந்து, நடந்தவற்றை எல்லாம் மிகச் சிறந்த நாட்குறிப்பாக வரைந்து வைத்திருக்கும் வெள்ளை மேஜர் வெல்ஷ் கூறுவதுபோல் மிக அருகில் இருந்தே குண்டுகள் சரமாரியாக வரும். ஆனால் ஆட்கள் மட்டும் கண்ணுக்குத் தெரியமாட்டார்கள். இவ்வாறு பகைவரின் பார்வைக்குப் புலப்படாதவாறு தங்களைப் பச்சைப் பசும் புதர்களிலும் காடுகளிலும் மறைத்துக் கொண்டே மருது பாண்டியரின் சேனை 'குரங்குப் போர்' நடத்தியது. ஆனால் ஏதுமே நேராது என்று கனவுகாணும் வெள்ளையரின் ஏகாதிபத்தியக் கும்பல். திடீரெனக்கவண் கற்களின் மழை பொழியும். தலை தூக்க முடியாது. ஒருகணம் எங்கும் அமைதி நிலவும். எங்கிருந்தோ மீண்டும் குண்டுகள் பாயும். சிப்பாய்கள் புழுப்போல் சுருள்வர்; குண்டுக்கு அஞ்சிக் கூடாரத்திற்குள் நுழைவர். 'தொப் தொப்' என்று கூடாரத்தின்மீது தீப்பந்தங்கள் விழும். 'ஐயோ! நெருப்பு' என்ற அலறல் காட்டைக் கலக்கும். எதிரே இருப்பவர் யாரெனத் தெரியாதவாறு காரிருள் கவிந்திருக்கும். மின்னல் வீச்சுப்போல் சுருள் கத்திகள் சுழலும். கண்ணை இமைப்பதற்குள் கணைக்கற்ற தலைகள்-கூலிச்சிப்பாய்களின், கம்பெனி வீரர்களின் தலைகள்-பனங்காய்கள்போல் உதிரும். பொழுது விடிந்து பார்த்தால், வீர மறவர்கள் இரவு நிகழ்ந்த போரில்

இறந்துபோன வீரர்களின் பிணங்களை இழுத்துச் சென்ற அறிகுறிகள் பரந்து கிடக்கும் இரத்தக்கறையால் தென்படும். சுதந்திர வீரர்கள் மிக நெருங்கிச் சுடப்பட்டால் ஒழிய, போர்க்களத்தில் மடிந்த வீரர்களை நம் புரட்சி வீரர்கள் தங்கள் தோள்களில் சுமந்து செல்லத் தவறியதில்லை. இதை வெல்ஷ் வியப்போடு கூறுகிறான்.

இவ்வாறு நடுக்காட்டில் சிக்கித் தவித்து மாண்டு மறைந்த கம்பெனிப் பட்டாளத்தின் துயரக் குரலே எதிரொலிப்பது போல் வெல்ஷ் துரை எழுதிவைத்திருக்கும் வரிகளைப் பாருங்கள் :

'இன்று ஆகஸ்டு மாதம் 30ஆம் தேதி காளையார் கோவிலுக்குச் சிறு வயலிலிருந்து பாதை போடும் முயற்சியைக் கைவிட்டு, இந்த இடத்தை விட்டுக் கிளம்பிவிடுவது என்ற முடிவிற்கு வந்தோம். இந்த முடிவைக் கேட்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஏனெனில் பெரும்பாலானவர்கட்குச் சுடுகாடாய் அமைந்த இடத்தைவிட்டுக் கிளம்பி விடுவது எங்கள் அனைவருக்கும் அளவற்ற மகிழ்ச்சி தந்தது. அம்மகிழ்சியில் ஒருமாத காலம் நாங்கள் அரும்பாடு பட்டுச் செய்த வேலையைக் கைவிடுவதால் ஏற்பட்ட அவமானத்தைக் கூட மறந்து விட்டோம். எங்கள் பாசறை முழுவதும் வயிற்றுப்போக்காலும் இரத்த பேதியாலும் அவதிப்படும்நோயாளிகள் நிறைந்த கூட்டமாகிவிட்டது. உண்மையில் அக்கொடிய நோய்க்கு இரையாகி மடிந்த அதிகாரிகளும் வீரர்களும் பலர். உடல் நலத்துடன் எஞ்சி இருந்தவர்களும் கண்ணெதிரில் பச்சைப்பசேலென மலைபோல் எழுந்து நின்று உட்புக முடியாதவாறு தடுக்கும் அடர்ந்த காட்டின் நடுவில் செயலற்றுக் கிடப்பதால் உள்ளம் குன்றி, மனநோய் பிடித்துக் கிடந்தார்

கள். எங்கள் எதிரிகளோ நாங்கள் மணிக்கொருமுறை தாக்கியும் எவ்வாறோ மாயமாய் மறைந்து, ஆனால் எங்களைச் சுற்றிச் சுற்றிவளைத்தவண்ணம் இருந்தார்கள். ஒருமாத காலமாக நாங்கள் பாளையங் கோட்டைக்கு ஒரு கடிதம் கூட அனுப்பமுடியவில்லை. அவர்களுடைய எச்சரிக்கையான கண்காணிப்பினின்றும் தப்பித்துச் செல்ல எவ்வளவோ முயன்றும் பயன் இல்லை. அப்பகுதியின் ஒவ்வொரு அங்குலத்தையும் அங்கு வாழும் மக்களையும் நன்கறிந்து சேவை செய்ய வலிய வந்த பாளையக்காரன் ஒருவனிடம் நானே ஐந்து வராகன் கொடுத்து ஒரு சிறு கடிதத்தைக் கொடுத்து அனுப்பினேன். அதைக் கொண்டு போய்க் கொடுத்ததும் இன்னொரு ஐந்து வராகனை அவனுக்குத் தருவது என்பது ஏற்பாடு. ஆனால் பின்னர் நான் அறிந்து கொண்ட வகையில் அவன் எவ்வளவோ எச்சரிக்கையாக இரவு நேரம் பார்த்துப் புறப்பட்டுப் போனபோதிலும் எங்கள் முகாமிலிருந்து சில மைல் கடப்பதற்கு முன்பே அவன் எங்கள் எதிரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்.'

இத்தகைய பயங்கரச் சூழ்நிலையில் 32 நாட்கள் அவதிப்பட்டுக் கம்பெனிப்பட்டாளம் குற்றுயிராய்க் கிடந்த நிலையில், அவர்கட்குப் புத்துயிர் அளிப்பதுபோல் இன்னொரு பட்டாளம் பிரான்மலைப் பக்கமிருந்து பேய்த்தனமாகத் தாக்கிக்கொண்டே முன்னேறிவந்தது. சாகக் கிடந்த கம்பெனிப் பட்டாளத்திற்கு இப் பேருதவி கிடைத்ததும் சும்மா இருக்குமா? அப் பட்டாளம் வெறி பிடித்து எழுந்தது; பல நாள் பாடுபட்டுத் தாங்கள் கட்டி வைத்த முகாங்கள் முதலியன தீக்கு இரையாகிய பின் காட்டை விட்டு வெளியேறித் தப்பினோம் என வந்து சேர்ந்தது.

11. மீண்டும் போர்!
மானம் காக்கும் சுதந்திரப் போர்!

வெறிகொண்டு வெள்ளையன் படை பெருகுவது கண்ட மருது பாண்டியர் - ஊமைத்துரை சேனை காட்டாற்று வெள்ளம்போல், ஆரவாரிக்கும் கடல்போல் பெருகியது! மருதுபாண்டியரும் ஊமைத்துரையும், 'உடல் நமக்குச் சுமை; உயிர் சிறு துரும்பு' என்று எண்ணி முழுப்பலத்தையும் காட்டிப் போரிட்டனர்.

காளையார்கோவில் காட்டிற்குள் இருந்து கம்பெனிப் படைகள் தப்பி வெளிவருவதை மருதுபாண்டியர்கள் மனம் விரும்பவில்லை. காளையார் கோவில் காட்டையே கம்பெனிப்படையின் சுடுகாடாக ஆக்க விரும்பியது அத் தமிழ் மறவர் உள்ளம். எனவே 1801ஆம் ஆண்டு, ஆகஸ்டு 23ஆம் தேதியிலிருந்து 30ஆம் தேதிவரை அவ்வீரர்கள் கடும்போர் நடத்தினர். ஆகஸ்டு 23ஆம் தேதி பலத்த போராட்டத்திற்கு இடையே கம்பெனிப் படைகள் காட்டிற்குள் சிக்கிக்கிடக்கும் படைகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் பொருட்டுச் சிறு வயலிலிருந்து காளையார் கோவில் காட்டுக்குள் நுழையும் பாதையின் வாயிலில் இரண்டாவது முறையாக ஒரு காவல் கொத்தளத்தைக் கட்டும் முயற்சியில் வெற்றி கண்டனர். இந்த முயற்சியின் போதும் இதைத் தொடர்ந்து ஒருவாரம் வரையும் கம்பெனிப் படைகள் வெளியுலகோடு எவ்விதத் தொடர்பும் கொள்ளாது துண்டித்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்துடன் போர் புரிந்தனர் மருத பாண்டியரும் ஊமைத்துரையும் அவன் படைகளும். இதற்குள் கர்னல் இன்ஸ் தலைமையில் கம்பெனிப்படையின் ஒரு பகுதி புதுக்

கோட்டை மன்னன் தத்தம் செய்திருந்த திருமயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்களையெல்லாம் திருப்பத்தூர் கோட்டைக்குள் திணித்து, அங்குத் தமிழர் படை புகுவதற்கு முன்பே எச்சரிக்கையோடு பலம் பொருந்திய தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தது. இவ்வாறு ஏற்பாடுகளை எல்லாம் செய்த கர்னல் இன்ஸ் பட்டமங்கலம் என்ற கிராமத்திற்குத் தன் படையுடன் வரும் வழியில் மருதுபாண்டியர் சேனையால் நையப் புடைக்கப்பட்டான். இதுபற்றிக் கர்னல் வெல்ஷ் பின் வருமாறு கூறியுள்ளார்:

'தமிழர் படை எட்டுத் திசையிலும் சுற்றி நின்று கொண்டு வீரப் போராட்டம் நடத்தியது. அதோடு தங்களுள் ஒரு பகுதியினர் கம்பெனிப் பட்டாளத்தின் குண்டுகட்கு இரையாகிச் சுருண்டு வீழ்வதற்கு முன்னால் அவர்கள் இடத்தில் மற்றொரு வீரத் தமிழ்ப் படை நின்று அஞ்சாநெஞ்சுடன் அமர் புரிந்தது'.

பீரங்கிப்பலத்தையும் துப்பாக்கிப் பலத்தையும் ஈட்டியும் வேலும் வாளுமே வென்றன. ஆயுத பலத்தை ஆள் பலமே அழிக்கும்நிலை ஏற்பட்டது. கம்பெனிப் பட்டாளம் பிணக்குவியலாகிவிடும் நிலைதோன்றியது. தாம் எண்ணியதற்கு மாறாக நிலைமை இருப்பது கண்டனர் வெள்ளைத் தளகர்த்தர்கள். கடை விரித்துக் கன்னித் தமிழகத்தில் காசு பறிக்க வந்த அவர்களின் சூழ்ச்சி மூளை சுறுசுறுப்பாய் வேலை செய்தது.

சென்ற அத்தியாயத்திலேயே வெள்ளைக் கம்பெனி அதிகாரிகள் மருது பாண்டியர்க்கு எதிராக உடையத் தேவர் என்ற 'பொம்மை ராஜா'வை உருவாக்கி வைத்திருந்தார்கள் என்று பார்த்தோம். ஆம். அந்த உடையத்

தேவருக்கு இப்போது அதிகார பூர்வமாகவே பட்டாபிஷேகம் செய்யத் துணிந்தது கம்பெனி வர்க்கம்.

சூதினால் வெற்றிபெறத் திட்டமிட்ட கம்பெனித் தளகர்த்தர்கள், 'தப்பினோம் தப்பினோம்' என்று தங்கள் படைகளுடனே விரைந்து ஒக்கூர்க்கு அருகில் உள்ள சோழபுரம் என்ற பெரியதோர் கிராமத்திற்கு வந்து, அங்கிருந்த பலம் பொருந்திய கோவில் மதில்களுக்குள் பாதுகாப்புத் தேடிக்கொண்டனர்; இங்கிருந்துகொண்டு தங்கள் சூழ்ச்சிச் செயல்களை வெற்றிகரமாகத் தொடங்கினர்; வெள்ளிப் பணத்தை வீசி எறிந்தனர்; 'வெற்றி பெற்றால் மானியம் தருவோம்; மதிப்புத் தருவோம்' என்றனர்; மண்ணுக்கும் பொன்னுக்கும் மயங்கினர். அருகில் இருந்த நாலு கோட்டைக் கிராமத்தைச் சேர்ந்த மறவர் சாதித் தலைவர்கள் மனமுவந்து அளிக்கும் அனுமதியின் மேல்தான் யாரும் சிவகங்கைச் சீமைக்குச் சடங்கு வழியாக மன்னர் ஆகவேண்டும். ஆனால் நம் மருது பாண்டியரோ அப்படிச் சாதி காரணமாகவோ சடங்கு காரணமாகவோ மன்னர் ஆனவர் அல்லர். நல்ல தலைவனற்ற கப்பல் நடுக்கடலில் திகைப்பது போல் கம்பெனிப் படையின் கொடுமையில் சிக்கித் தவித்த சிவகங்கைச் சீமையைக் காக்கும் பொருட்டு, மக்கள் அன்பின் துணைகொண்டு முடிசூடா மன்னராக ஆனவர்களே இவ்வீரத் தலைவர்கள். இந்த உண்மையை நன்கு உணர்ந்திருந்த கம்பெனி அதிகாரிகள் சாதியின் பெயரால், சடங்கின் பெயரால், தமிழினத்தின் ஒற்றுமையைப் பிளக்கப் பெருமுயற்சி செய்தனர். பணத்தை இறைத்தும், பொய்களை விரித்தும், பழிகளைப் பரப்பியும், அந்தோ! அந்நியர்கள் — வெள்ளை நரிகள் — செய்த அந்த முயற்சியும் வெற்றி கண்டதே! கொடுமை!! கொடுமை!!!

1801 செப்டம்பர் 12ஆம் தேதி கர்னல் அக்நியூ துரை முன்னிலையில் அக்கினி சாட்சியாக, ஐந்து பூதங்கள் சாட்சியாக, சோழபுரம் கோவிற் கட்டடம் சாட்சியாக, உடையத் தேவன், மறவர் சீமையின் பொம்மை ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டான். இந்த விந்தை மனிதனைப் பற்றிக் கர்னல் வெல்ஷ் என்னும் வெள்ளைத் தளகர்த்தனே நேரில் பார்த்து எழுதும் வரிகளைப் படிக்கும்போது நம்மை அறியாமல் நம் வாய் சிரிக்கும்! இதோ! படித்துப் பாருங்கள் அவ் வெள்ளையன் கூறுவதை:

'ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதி. இன்று மாலை மறவர் நாட்டின் புதிய ராஜா உடையத்தேவன் தன் அண்ணனோடும், ஒரு வயதான பிராமணனோடும் கர்னல் அக்நியூ துரையை முதன் முதலாகக் காண வந்தான். அவன் பார்வைக்குப் பரம சாது போல் தோன்றினான். ஆனால் சந்தர்ப்பமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் திடீரென எதிர் பாராதவிதமாக அவனை உயர்த்திவிட்டது. ராஜ பதவியின் பெருமிதத்திற்கும் கம்பீரத்திற்கும் அவன் மிகவும் புதியவன். ஆகையால் மிகுந்த கூச்சமும் கலக்கமும் உடையவனாக அவன் காணப்பட்டான். அதோடு கம்பெனி அதிகாரிகள் அவன் மீது காட்டிய கவனிப்பிற்கு மிகுந்த நன்றியுள்ளவனாகவும் அவன் காட்சி அளித்தான். அவனை நாங்கள் 'ராஜா' ஆக்கியது பற்றி மற்ற யார் யார் என்னென்ன சொன்னபோதிலும், தரித்திரத்திலிருந்தும், ஊர் பேர் தெரியாத நிலையிலிருந்தும் அவனை உயர்த்திச் சிம்மாசனம் தந்ததற்காகவும், ஒரு சீமையின் வருமானத்தையே அவனிடம் ஒப்படைத்ததற்காகவும், நாங்கள் பட்ட துன்பங்களுக்காகவும், செய்த முயற்சிகளுக்காகவும், அவன் எங்கள் பால்

காட்டிய ஆழ்ந்த விசுவாசத்தை நாங்கள் மிகவும் பாராட்டினோம்.'

இத்தகைய வேடிக்கை மனிதனால் வீர மறவர் சீமைக்கு நேர்ந்த வேதனை வாழ்வை எண்ணுந்தோறும் உள்ளம் புண்ணுகிறது. இந்தப் பொம்மை ராஜாவை வைத்துக்கொண்டு, மருது பாண்டியர்க்கு விரோதமாக கம்பெனிப்பட்டாளம் திரித்து விட்ட கதை - வதந்தி - பழிக் கயிறுகளின் நீளத்திற்கு ஓர் எல்லையே இல்லை. ஆனால் அந்தோ! அக்கயிற்றின் அழகிலும் பலத்திலும் மயங்கிய மறவர் நாட்டு மக்கள் அது தங்கள் கழுத்தையே இறுக்க விடப்பட்ட கயிறு என்று அறியாது போனார்கள். அதன் விளைவாக மறவர் சீமை இரண்டுபட்டது. 'புதிய ராஜா, புதிய ராஜா' என்று ஒரு கூட்டம் பிரிந்தது. மருது பாண்டியர் பலம் கோடைக்கால ஆறு போல் வற்ற ஆரம்பித்தது. தங்கள் சுக வாழ்வையும் துறந்து, சுதந்திரத்திற்காகப் போரிட்ட அம் மாவீரர்கள் தங்கள் நாட்டின் ஒற்றுமை இவ்வாறு பிளவுபட்டது கண்டு அடைந்த துயரம் சொல்லும் தரமன்று. எனினும் உறுதியைக் கைவிடாது, அவ் உத்தம வீரர்கள் கம்பெனிப் படையை எதிர்ப்பது போலவே தங்கட்கு எதிராகப் பரவும் கதைகளையும் பழிச் சொற்களையும் எதிர்த்துப் போரிட்டனர். சிதைந்து ஓடும் மறவர் குடிமக்களை அன்புக் கயிற்றால் பிணைத்து, அவர்கட்குக் கம்பெனிச் சூழ்ச்சியை அம்பலப்படுத்தி, அவர்கள் நெஞ்சில் சுதந்திர விளக்குச் சுடர் விட்டெரியச் செய்தனர். இவ்வளவு செய்தும் அவர்களால் கம்பெனி அதிகாரிகளின் பொய்ப் பிரசாரத்தை முற்றிலும் நிறுத்த முடியவில்லை. உடையத் தேவர் பட்டாபிஷேகத்தை ஒட்டிப் பலமான மழை பெய்தது. அவ்வாறு மழை பெய்தது

இறைவனுடைய 'ஆசீர்வாதம்' என்ற அளவிற்கு மக்களை நம்பும்படி செய்தனர் கம்பெனி வெள்ளையர். ஆனால் உண்மையில் அப்போது பெய்த அந்தப் பலத்த மழை கம்பெனிப்படைகட்குக் கிடைத்த பெரிய சாபம் என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

கம்பெனிப் பட்டாளம், 'உடையத் தேவரை ராஜா வாக்கி விட்டோம். இச் செயல் பலம் பொருந்திய நம் பீரங்கியாலும் பிளக்க முடியாத தமிழர் படையின் ஒற்றுமையை இனித் தவிடு பொடியாக்கிவிடும்' என்று இறுமாப்புக்கொண்டு எழுந்தது. ஆம். சாதியும் சடங்கும் பொய்யானவையே. ஆனால் அவை எவ்வளவு பொல்லாதவை, பயங்கரமானவை என்பதற்கு இச் சரித்திர நிகழ்ச்சியே சரியான சான்றாகும்.

கம்பெனிப் படைகள் 17 ஆம் தேதி புதிய ராஜாவின் பட்டாபிஷேகத்திற்குச் சரியாக ஐந்து நாட் கழித்து மேலூரை நோக்கிக் கிளம்பின. மேலூரை அடைவதற்குள் அவர்கள் பட்ட அல்லல் அளவிட்டுரைக்க முடியாதது. அச் சமயத்தில் 'ஆண்டவனது ஆசி' என்று மக்களால் நம்பப்பட்ட பெருமழை பெய்து, எங்கும் சேறாய்க் கிடந்தது. பீரங்கிகளையும் போர்த் தளவாடங்களையும் சுமந்துகொண்டு, பலத்த மழையால் பாழ்பட்டுக் கிடந்த அப்பாதையைக் கடக்க முடியாமல் கம்பெனிப் படை திண்டாடித் திணறியது. கடைசியாகச் சிங்கம்பிடாரியைச் சேர்ந்தது கம்பெனிப்படை. அங்கிருந்து பிரான்மலையில் வீர மறவர்கள் தங்கியிருக்கும் செய்தி அறிந்து, அம் மலையை மூர்க்கத்தனமாகத் தாக்கியது வெள்ளைப் பட்டாளம். பிரான்மலை, இறைவன் இருப்பதற்கு ஏற்ற கோவிலாக மட்டுமன்றி, எண்ணற்ற வீரர்கள் தங்கிப் போர்புரிதற்கு ஏற்ற பலம் நிறைந்த கோட்டையாகவும்

விளங்கியது. இம்மலையின் உச்சியிலிருந்து பார்த்தால் குன்றக்குடி, காளையார் கோவில், திருக்கோட்டியூர் முதலிய ஊர்கள் நன்றாகத் தெரியும். அதோடு மேலூர் ஆனைமலையும் அழகாகத் தோன்றும். சாதாரணமான எந்த மனிதனாலும் ஏறிக் காண முடியாத உயர்ந்த உச்சியையும், பலம் பொருந்திய பாறைகளின் பாதுகாப்பையும், வலுவான கோட்டை மதில்களையும் பெற்றுள்ளதாகிய இப்பிரான்மலையில் முகாம் அடித்திருந்த மறவர் சேனையை மோதியது கம்பெனிப்படை. ஆனால் ஏற்கெனவே தங்கட்கு எதிராக உருவாக்கப்பட்டுவரும் சதிகளாலும், மறவர் நாட்டு மக்கட்கு இடையே ஏற்பட்ட பிளவாலும் மனம் உடைந்துபோன மருது பாண்டியர் - ஊமைத்துரை சேனையால் கம்பெனிப்படைகளை எதிர்த்துத் தீவிரமாகப் போராட முடியவில்லை. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, கம்பெனிப்படைகள் பிரான்மலைக் கோவிலையும் கோட்டையையும் பிடித்துக் கொண்டன.

இதற்குப் பின் கம்பெனிப் பட்டாளம் புதிய உற்சாகத்தோடு காளையார் கோவிலை நோக்கித் தன் இறுதித் தாக்குதலை நடத்த ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. மருது பாண்டியரின் உயிர்நாடியாக இருந்த இக்காளையார் கோவிலைப் பிடிப்பதற்கான கடும்போர் ஆறு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. பலம் பொருந்திய காளையார் கோவிலைப் பிடிக்கும் பொருட்டுக் கம்பெனிப் பட்டாளம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று வழிகளில் அனுப்பப்பட்டது.

பிரான்மலையைப் போலவே காளையார் கோவிலும் கோவிலாக மட்டும் அன்றிக் கோட்டையாகவும் இருந்தது. பதினெட்டடி உயரமுடைய கற்சுவர்களால் சூழப்பட்ட

கோவிலாக இருந்தது காளையார் கோவில்! வெல்ஷ் கூறுவது போல் காளையார் கோவிலைச் சுற்றியிருந்த கோட்டைச் சுவர்கள் மிகப் பெரியனவாகவும் உறுதி படைத்தனவாகவும் விளங்கின. ஊருக்குள் எங்கும் எழிலும் ஏற்றமும் நிறைந்த மாளிகைகள் காணப்பட்டன. இத்தகைய பெரு நகரைப் பிடிப்பதற்காகப் பாய்ந்து வந்த பறங்கிப் பட்டாளத்தையும் கூலிப்படைகளையும் எதிர்த்து, வழி மறித்து, இரண்டு இடங்களில் மருது பாண்டியரும் ஊமைத்துரையும் கடும்போர் நடத்தினர். அப்போரில் கம்பெனி வீரர்களில் கணக்கற்றவர் வீரமறவரின் வாளுக்கு இரையாயினர். எவ்வாறோ கம்பெனிப் பட்டாளம் தமிழர் படையின் ஆவேசத் தாக்குதலினின்றும் தப்பிக் காளையார் கோவிலுக்குள் நுழைந்துவிட்டது.

எந்த அக்டோபர் மாதம் 16ஆம் தேதி வீரபாண்டியனைத் தூக்கிலிடுவதின் மூலம் பாளையக்காரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்து நடத்திய போரின் முதற்கட்டம் முடிந்ததோ, அதே அக்டோபர் மாதத்தில், சரியாக இரண்டு ஆண்டுகள் கழித்துப் பாளையக்காரரின் வீரப்போரின் முடிவிற்குரிய அறிகுறிகள் தோன்றின.

காளையார் கோவிலுக்குள் கம்பெனிப் படைகள் நுழைந்த சமயம் வீரன் ஊமைத்துரையின் உள்ளமும் மருது பாண்டியர் நெஞ்சமும் பெரிதும் இடிந்துபோய் இருந்தன. 'தன் நாட்டு மக்களே-தமிழ் நாட்டு மக்களே-தங்கள் ஒற்றுமையை அறியாமையால் சிதறும்படிவிட்டு, அந்நியனுக்கு இடம் கொடுத்துவிட்டார்களே!' என்று எண்ணிக் கலங்கினர். எனினும் அச் சுதந்திர வீரர்கள் நெஞ்சம் கலங்கினாலும் முற்றிலும் சோர்ந்து விடவில்லை;

காளையார் கோவிலுக்குள் நுழைந்த அந்நியப் படையை ஆனமட்டும் ஒருகை பார்ப்பது என்ற உறுதியோடு துள்ளி எழுந்தனர்; 'எழுக படை! முழங்குக முரசம்! தாக்குக பறங்கிப் படையை' என்று வாளுருவி ஆணை பிறப்பித்தனர். பெரும்போர் குமுறி எழுந்தது. அக்டோபர் மாதம் முதல் தேதி யன்று காலை 11 மணிக்குக் காளையார் கோவிலுக்குள் நுழைந்த கம்பெனிப் படைகள் கனல்வாய்ப் பீரங்கிகளைத் திறந்துவிட்டன. சுமார் இரண்டு மணி நேரம் ஒரே வெடி முழக்கம்—கடல் ஒலியை அடக்கும் பெருமுழக்கம். பீரங்கியாலும் துப்பாக்கியாலும் சுட்டவண்ணம் இருந்தனர். ஊரெங்கும் இரத்தப் பெருக்கு! பிணக் குவியல்! பயங்கர அலறல்! கணக்கற்ற உயிர்கள் இவ்வுலகைத் துறந்தன. மாடமாளிகைகள் மண்ணாயின. எங்கும் புகை மண்டலம்! இருள்! அழிவு! ஐயோ! ஐயோ! என்ற ஓலம். அந்தோ! அன்று நடந்தபோரில் காளையார் கோவில் பாழடைந்தே போய்விட்டது. அந்த அழிவின் அடையாளங்கள் இன்றும் காட்சி தருகின்றன.

இக்கடும்போர் நடந்த அன்று இரவு காளையார் கோவிலை அடுத்துள்ள காளையார் மங்கலத்தில் மருது பாண்டியரும் ஊமைத்துரையும் நடுக்காட்டில் நள்ளிரவில் கூடினர். அவர்களைச் சுற்றி நின்றது ஒரு பெருஞ்சேனை. வெகு தூரத்தில் திசைகள் எட்டிலும் தீவட்டியோடு வாளும் கையுமாக வீரர்கள் காவல் காத்து நின்றனர். ஆம். அவர்கள் கையில் இருந்த தீயும் கண்களில் இருந்த நெருப்பும் ஒரே தன்மையாகத்தான் இருந்தன.

சுதந்திர சேனை சூழ்ந்திருக்க, எழுந்தான் ஊமைத்துரை. அவன் வாய் பேசவில்லை. கைவிரல்கள் பேசின. அந்த மௌனப்பேச்சை விழித்த கண் இமையாது

பார்த்திருந்த வீரர்களின் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர்கள் அடிக்கடி கையை நிலத்தின்மேல் அறைந்து சபதம் செய்தனர். அப்படி என்ன ஊமைத்துரை உணர்த்தினான் தன் சாடை மொழியில்? 'மானம் உள்ள தமிழ் மறவர்களே, நம் எண்ணிக்கை குறைந்துவிட்டது. படைப்பலம் குன்றிவிட்டது. நம் ஊரும் கோட்டையும் அந்நியர் கையில்! ஆனாலும் உயிருள்ள வரை போராடியே தீருவோம். மானங்கெட்டு ஒரு வினாடியும் வாழமாட்டோம். சில ஊர்களும் சில கோட்டைகளும் போனால் என்ன? தமிழ் நாட்டில் எஞ்சியிருக்கும் கோட்டைகளுக்குள் புகுவோம். சிதைந்து விட்ட மறவர் சீமையில் ஒற்றுமைச் சங்கு ஊதுவோம். இதோ என் கையில் இருக்கும் இந்தத் துரும்பை நசுக்கி ஊதி எறிவது போல் கம்பெனித் துருப்புக்களைக் கசக்கி எறிவோம். தமிழ் நாட்டிலிருந்து பறங்கியரை வெளியேற்றுவோம். வெற்றி - இல்லையேல் சாவு.' இதுவே அவ்வீரப் பெருமகன் பேசிய பேச்சு. கேட்டிருந்த - இல்லை - கண்டிருந்த மறவர் உடம்பெல்லாம் கொதிப்பேறின. அவர்கள் ஆரவாரத்தோடு எழுந்தனர்; அதற்குள் பெரிய மருது எழுந்ததைக் கண்டு அமைதியாய் அமர்ந்தனர்.

ஒரு வெள்ளி நாணயத்தை எடுத்துச் சுண்டிக்காட்டினான் பெரிய மருது; அதைக் கீழே இட்டுக் காலால் மிதித்தான்; மீண்டும் கையில் எடுத்தான்; 'பார்த்தீர்களா இவ்வெள்ளிப்பணத்தை! இதில் இருப்பது தமிழ் எழுத்தா? தமிழ் இலச்சினையா? இல்லை. கம்பெனியான் பணம். இந்தப் பிச்சைக் காசுக்கு ஆசைப்பட்டு நம்மவர் அறிவை விற்கின்றனர்; அருமைத் தாயினும் சிறந்த நாட்டின் மானத்தைக் காற்றில் பறக்க விடுகின்றனர். வீரர்களே, இந்தப் பணத்தைத் தீண்டாதீர்கள். காறி உமிழுங்கள்.

நமக்குக் காசல்ல - மானம் - மறவர் சீமையின் சுதந்திரம் தான் பெரிது' என்று கூறிக்கொண்டே உறுதியான அந்த வெள்ளி நாணயத்தை இரண்டாக வளைத்தான். அதைக் கண்ட தமிழ் மறவர் தோள் தட்டி எழுந்தனர். 'எட்டுத் திக்கிற்கும் செல்லுங்கள். சுதந்திரக் கனலை மூட்டுங்கள். ஆம். சுதந்திரம்! சுதந்திரம்! அதுவே நம் உயிர்' என்று ஆவேசத்துடன் கூவினான் பெரியமருது.

ஓங்கி உயர்ந்த அப்பெருமகனது வீர முழக்கத்தைக் கேட்ட மறவர் கூட்டம் எண்டிசையிலும் மாயமாய் மறைந்தது. ஆம். அவர்களோடு சேர்ந்து ஊமைத்துரையும் மருதுபாண்டியரும் எங்கோ சென்றுவிட்டனர்.

காளையார் கோவிலைப் பிடித்துவிட்டான் கம்பெனியான். ஆனால் வீரமிக்க ஊமைத்துரையையும் அவன் உயிர்த்தோழர்களான மருது பாண்டியரையும் பிடிக்க முடியவில்லை. 'எவ்வளவோ நாசத்திற்குப் பின் இன்னுமா இந்நிலை?' என்று கம்பெனி அதிகாரிகள் ஆத்திரம் அடைந்தனர். கர்னல் அக்நியூ துரையிடம் இருந்து அதிகாரங்களை எல்லாம் ஏற்றுக்கொண்ட புதிய தளகர்த்தன் மக்காலே துரை மூக்கெல்லாம் சிவந்தவனாய், 'அவர்களைப் பிடிக்காமல், பிடித்துக் கொல்லாமல் விடுவதில்லை' என்று துப்பாக்கியைத் தூக்கினான்.

12. களபலி

கட்டுப்பாடு நிறைந்த பட்டாளமாக இருந்த மறவர் சேனை நானாதிசைகளிலும் பிரிந்து போய் விட்டது. ஊமைத்துரை - மருது பாண்டியர்கள் விருப்பப்படி திருமயம், திண்டுக்கல், சங்கரப்பதி முதலிய கோட்டைகளில் இருந்து புதியதோர் போராட்டத்திற்குத் தங்களையும் மக்களையும் தயார் செய்வதே அவர்கள் திட்டம். அதன்படி தமிழகத்தின் கோட்டைகள் பலவற்றிலும் சுதந்திரவீரர்கள் மறைந்து மறைந்து இருந்து, தமிழ் மக்கள் நெஞ்சில் வீரபாண்டியக் கட்டபொம்மன் ஏற்றி வைத்த சுதந்திரச் சுடரை அணையாவாறு காப்பாற்றும் வேலையில் தீவிரமாக ஈடுபடல் ஆயினர். காற்றைப்போல் எவர் கண்கட்கும் புலப்படாமலும், ஆனால் சக்தி வாய்ந்த காரியங்களைச் செய்யும் தீரர்களாகவும் அவர்கள் திகழ்ந்தனர். ஆயினும் என்ன? அந்நியர் - வெள்ளையர் - சூழ்ச்சி பலித்துவிட்டது. மருது பாண்டியரின் கட்டுப்பாடான சேனை எட்டுத்திசைகளிலும் சிதறி ஓடச் சதி செய்தனர் வெள்ளையர். அது வென்றுவிட்டது. ஊமைத்துரை மட்டும் அடிக்கடி இந்தச் சுதந்திர வீரர்கள் தங்கிவந்த கோட்டைகளுக்கு மாறு வேடம் பூண்டு போய்வந்து கொண்டிருந்தான். இந்த உண்மையை எவ்வாறோ ஊகித்துணர்ந்த தமிழ் மக்கள் தமிழ் நாட்டில் இருந்த பற்பல கோட்டைகளையும் 'ஊமையன் கோட்டை' என்றே பயபக்தியோடு சுட்டிக் காட்டிக் குறிப்பிடலாயினர். அப்பெயர்கள் இன்றும் நிலைபெற்று விளங்குகின்றன. இவ்வளவெல்லாம் இருந்தும் ஊமைத்துரையாலும் மருதுபாண்டியராலும் இழந்த பலத்தை மீண்டும் பெறமுடிய

வில்லை. ‘வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது’ போன்று ஆயிற்று அவர்கள் கதை.

வீரமிக்க மருது சகோதரர்கள் தங்கள் உயிரனைய உத்தமத் தோழர்கள் - வீரர்கள் - இருநூறு பேரோடு சங்கரப்பதி காடுகளில் கரந்துறையலாயினர். இந் நிலையில் கம்பெனியார் நாட்டு மக்கள் நெஞ்சில் பரப்பிய பொய்யும் பழியுமாகிய நஞ்சு மிக வேகமாகச் செயற்படலாயிற்று. புதிய புதிய கதைகளைக் கம்பெனியார் தினமும் கட்டி விட்டனர்; புதிய புதிய பசப்பு மொழிகளை எங்கும் பரப்பி விட்டனர். அவற்றுள் ஒன்று, கம்பெனியாருக்கு முதலில் சிறு தொகை செலுத்திப் பின் ஆண்டுதோறும் முறையாகக் குறைந்த கிஸ்தி கட்டத் தயாராக இருப்பவர்க்குச் சிவகங்கைச் சீமையில் பல கிராமங்கள் சாசுவதக் கவுலாகக் கொடுக்கப்படும் என்பது. இச் செய்தி அறிந்த எண்ணற்ற மக்கள் மண்ணாசையால் அறிவிழந்து ஆங்கிலக் கம்பெனிக்குச் சலாம் போடலாயினர். கம்பெனியார் பரப்பிய மற்றொரு பொய், மருது சகோதரர்கள் கோடிக் கணக்கான பணத்தைக் காட்டில் உள்ள பாலை மரப் பொந்துகளில் ஒளித்து வைத்துள்ளார்கள்; அதை அவ்வாறு அவர்கள் மறைத்து வைக்க, மரத்தில் துளை போட்டுத் தந்தவர்களை எல்லாம் இரகசியம் வெளியாகாதிருக்கக் கொலை செய்து விட்டார்கள்; இப்போது யார் இம் மரங்களைக் குத்தகை எடுக்கின்றார்களோ அவர்களுக்கு அதிர்ஷ்டம் என்பதாகும். இதைக் கேட்டவர்கள் நாக்கில் நீர் ஊறியது. கம்பெனியாரின் அதிகாரம் பெற்றிருந்த பொம்மை ராஜா உடையத் தேவரிடம் போய்க் காடுகளைக் கவுல் கேட்பதில் பலத்த போட்டி ஏற்பட்டது. காடுகளில் பெரும்பாலான பகுதி கவுல்

விடப்பட்டது. கவுல் எடுத்த மக்கள் அவ்வளவு காடுகளையும் அழித்துத் தொலைத்தனர். அதனால் சுதந்திர வீரர்கள் இயற்கையின் அரவணைப்பில் ஆறுதலோடு தங்கும் நிலையும் இல்லாது போயிற்று.

இதை அறிந்து மகிழ்ச்சி கொண்டிருந்த கம்பெனியார் தம் பட்டாளத்துடன் மங்கலம் என்ற கிராமத்தில் முகாம் அடித்திருந்தார்கள். அவ்வாறு தண்டு இறங்கி இருந்த வெள்ளையரிடம் போய்ப் பல ஊர்களின் பெரியதனக்காரர்கள் சலாம் செய்து மாலை மரியாதைகளுடன் அவர்களை வரவேற்று, பல கிராமங்களைத் தங்கட்குக் கவுல் விடும்படி கேட்டுக் கொண்டனர். அதோடு அவர்களைத் திருப்தி படுத்த வேண்டும் என்ற வீணாசையால் மன்னிக்க முடியாத ஒரு குற்றத்தையும் செய்யத் துணிந்து, மருது சகோதரர்களும் ஊமைத்துரையும் மறைந்திருந்து மீண்டும் தமிழகத்தின் வீரப் போருக்கான ஏற்பாடுகளைச் செய்துவரும் சங்கரப்பதிக் காட்டையும் கோட்டையையும் காட்டிக் கொடுத்து விட்டார்கள்! உண்மை அறிந்த கம்பெனியாரின் உள்ளம் பூரித்தது. அவர்கள் நள்ளிரவில் கொள்ளையடிக்கும் கள்ளர் போல் துப்பாக்கிப் பீரங்கிகளோடு சென்று, சுதந்திர வீரர்கள் தங்கி இருந்த கோட்டையையும் காட்டையும் வளைத்துக்கொண்டு குண்டுமாரி பொழிந்தனர். அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வீரர்கள் பலரும் குண்டு பாய்ந்து பிணமாயினர். விழித்தெழுந்த வீரர்கள் சிலரும் மருது சகோதரர்களும் ஊமைத்துரையும் தன்னந் தனியாக வீரப்போர் புரிந்து தப்பினர். ஆனால் கம்பெனித்தளகர்த்தனா விடுவான்? சங்கரப்பதிக் காடுகளைச் சுற்றிலும் பட்டாளத்தைப் பரப்பிவிட்டான். முப்பெரு வீரர்களின் விலைமதிக்க

முடியாத தலைகட்டும் விலை வைத்தான் பரதேசி வெள்ளையன். அந்தத் தலைகட்கு வைத்த விலையை - நாலாயிரத்தைய்—பெறவேண்டும் என்ற பேராசையால் கம்பெனிப் பட்டாளத்திலிருந்த சிப்பாய்கட்கு இடையே பலத்த உற்சாகமும் போட்டியும் ஏற்பட்டன. எந்த வெள்ளையன்—காப்டன் வெல்ஷ் - மருது சகோதரர்களிடம் வாள், கதை, வளரித்தடி முதலியவற்றைப் பயன்படுத்தும் கலையைக் கற்றானோ, அவனே மருது சகோதரர்களையும் ஊமைத்துரையையும் எப்படியாவது பிடித்துத் தர வேண்டும் என்று நன்றி கெட்ட நெஞ்சத்தோடு துடியாய்த் துடித்தான் என்றால் மற்றவர்களைப்பற்றி என்ன சொல்வது!

இந் நிலையில் ஒருநாள் கம்பெனிப்படை காடுகளை எல்லாம், மூலை முடுக்குகளை விடாது துருவித் துருவித் தேடிக்கொண்டிருக்கும் போது, தம் உயிரினும் இனிய படைவீரர்கள் உயிர் வாழ, உணவின்றி அவதிப்படும் நிலையை எண்ணி, உள்ளமும் உடலும் சோர்ந்து, உடைவாள் ஒன்றே கதியாகத் தனிவழியே ஊமைத்துரையும் மருது சகோதரர்களும் நடந்து சென்று கொண்டிருந்தனர். வேட்டை நாய் போல் இதை எப்படியோ மோப்பம் பிடித்த கம்பெனிச் சிப்பாய்கள் அவர்களை வளைத்துப் பிடிக்கப் பாய்ந்தனர். ஆனால் மருது சகோதரர்களோ மூச்சுள்ள வரை போராடும் தீரர்கள் அன்றோ? முப்பெரு வீரர்கட்கும் கம்பெனிச் சிப்பாய்கட்கும் இடையே வெறிபிடித்த போர்—இறுதிப்போர்—நடந்தது. அப்போரிலும் கம்பெனிச்சிப்பாய்களை எல்லாம் வெட்டி வீழ்த்தி, மருது சகோதரர்களும் ஊமைத்துரையும் வெற்றி பெற்று விடுவார்களோ என்ற நிலை இருந்தபோது, கொலைகாரக் கம்பெனிப்படையைச்

சேர்ந்த ஒரு பாவி சுட்ட துப்பாக்கிக் குண்டு, அந்தோ! பெரிய மருதுவின் தொடையில் பாய்ந்து எலும்பை முறித்தது. எந்தக் கன்னித் தமிழ்நாட்டின் உரிமையை, மானத்தை, காக்கப் போரிட்டானோ, அந்த மாவீரன் அதே தமிழ் நாட்டு மண்ணில் காலூன்றி நிற்கவும் வலிமை அற்றவனாய், தரையில்-தமிழ்த் தாயின் மடியில், சாய்ந்தான். தான் பெற்ற வீர மைந்தன் இவ்வாறு தன் நாட்டு மக்களாலேயே கைவிடப்பட்டு, அந்நியன் ஆயுத வெறிக்கு இரையாகி, அவதிப்பட்டு வீழ்ந்த காட்சியைப் பொறுக்காதவளாய்த் தமிழ் அன்னை சிந்திய இரத்தக் கண்ணீர்போல் அவன் தொடையில் இருந்து வழிந்த தியாக இரத்தம் தமிழ் மண்ணை நனைத்துப் புனிதமாக்கியது! ஆம்! அவன் இரத்தம் பட்டுப் புனிதமான வீர மண்தான் நம் தாயகமாம் தமிழ் நாடு!

பெரிய மருது உணர்ச்சியற்றுத் தரையில் சாய்வது கண்டதும், தன் வீரவாளைச் சுழற்றிக் கம்பெனிச் சிப்பாய்களின் கழுத்தைப் பதம் பார்த்துக் கொண்டிருந்த ஊமைத்துரை, உடைவாளை வீசி எறிந்து விட்டுப் பெரிய மருதுவை நோக்கித் தாவிப் பாய்ந்தான். 'உடுக்கை இழந்தவன் கை' போல் தனக்கு உற்றுழி உதவிய ஆருயிர் நண்பனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கண்டு உயிர் துடித்து, அவ்வீரனைக் காக்கத் தாவிப்பாயும் ஊமைத்துரையைக் கண்டதும், கூலிச் சிப்பாய்கள் மத்தியில் சிங்கம் போல் போரிட்டு, அவர்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த சின்ன மருதுவும் வேங்கை போல் கண்களில் தீச்சுடர் பறக்க ஓடி வந்து, உத்தம சகோதரனை பெரிய மருதுவைத் தன் இரு கரங்களிலும் தூக்கித் தன் மடிமீது சார்த்திக் கொண்டான். கல்லும் மண்ணும் கண்டு கலங்கும் இத் துயரம் நிறைந்த

காட்சியைக் கண்டும் எஞ்சியிருந்த கம்பெனிச் சிப்பாய்களின் கொலையுள்ளம் கொண்ட இரத்தவெறி அடங்கவில்லை. ஆயுதமற்று அச் சுதந்திர வீரர்கள் அழுத கண்ணீரில் மூழ்கிக் கிடக்கும் நிலையில், 'இத் தருணம் தப்பின் எத்தருணம் வாய்க்குமோ' என்று எண்ணியவர்களாய் வேட்டை நாய்கள் போல் அவர்கள் மேல் வீழ்ந்து கவ்விக் கொண்டனர் கம்பெனிச் சிப்பாய்கள்! தமிழ் மக்களின் அடிமை விலங்கை முறித்து எறிந்து, அவர்களின் மானத்தைக் காக்கப் போரிட்ட அம்மாவீரர்களின் திருக்கரங்களில் ஏகாதிபத்தியத்தின் இரும்பு விலங்குகள் ஏறின! வேல் பிடித்த வீரக் கரங்களில் - அறிவிலும் ஆண்மையிலும் சிறந்த மக்கட்கெல்லாம் பொன்னும் பொருளும் வாரி வாரி வழங்கிய அன்புக் கரங்களில் - விலங்கு பூட்டப்பட்ட அந்தக் கோரக் காட்சியை இன்று நினைத்தாலும் நெஞ்சு பகீர் என்கிறது. அடி வயிற்றில் தீ மூள்கிறது!

மருது சகோதரர்களை, ஊமைத்துரையை, சின்ன மருதுவின் வீர மைந்தர்களான சிவஞானத்தை, பச்சிளம் பாலகனை துரைசாமியைக் கைது செய்ததோடு விட்டதா கொலைக்காரக் கம்பெனி வர்க்கம்! அந்தோ! அவர்கள் செய்த ஆருத்துயர் விளைக்கும் அந்தச் செயலை எவ்வாறு தமிழ் எழுத்தால் எழுதுவது! அந்தக் கொடுமை நிறைந்த செயலை நினைக்கும் போதே கண்களில் நீர் பெருகுகிறது.

கொலைக்கஞ்சாத கம்பெனிப்படை காரைக்குடியிலிருந்து மதுரை செல்லும் வழியிலுள்ள திருப்பத்தூர் கோட்டைக்குச் சுதந்திர வீரர்களை - மருது சகோதரர்களைப் பலத்தகாவலுடன் தூக்கிச் சென்றது. அங்கே மானங்காக்கப் போரிட்ட அவ் வீரர்களைச் சாதாரண

மான ஒரு தூக்கு மரத்தில் ஏற்றிக் கொன்றது கம்பெனிப் பட்டாளம்! ஆம். அப்பொழுதெல்லாம் சுதந்திர வீரர்களைத் தொடர்ந்தாற் போல் தூக்கிலிடுவதற்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பலம் பொருந்திய தூக்கு மேடைகளைக் கட்டி வைக்கும் 'நாகரிகத்தை' அடையவில்லை!

வீரபாண்டியன் தொடங்கிவைத்த தமிழகத்தின் விடுதலைப் போரை முன்னிலும் பன்மடங்காகத் தொடர்ந்து நடத்திய மருது சகோதரர்கள் தூக்கிலிடப் பட்டார்கள் — இல்லை — கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் பொன்னுடலங்கள் உயிரற்ற சவமாய்த் தூக்கு மரத்தில் தொங்கின! அந்தோ! அந்தக் கோரக்காட்சியை என்னென்று கூறுவது! பெற்ற தாய் தந்தையர் இறப்பதையும் கூடப் பொறுக்கலாம். ஆனால் பெற்ற தாயினும் தந்தையினும் பெரிய தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகக் காலமெல்லாம் போரிட்டு, அல்லற்பட்ட அரும்பெரும் வீரர்களை, வெறிபிடித்த வேட்டை நாய்கள் போன்ற வெள்ளையர் தூக்கிலிட்டுக் கொன்றதை எந்தத் தமிழ் நெஞ்சந்தான் பொறுக்க முடியும்!

திருப்பத்தூர் கோட்டையில் மருது சகோதரர்களையும் அவர்கள் அருமை மைந்தனை சிவஞானத்தையும் தூக்கிலிட்டுக் கொன்ற ஏகாதிபத்திய வெறியர்கள் ஊமைத்துரையை மட்டும் அதே இடத்தில் தூக்கிலிடவில்லை. இரத்த வெறி பிடித்த அந்தக் கொலைகாரக் கூட்டம் ஆளைக் கொல்லுவதிலும் கூட இடம் பார்த்து, நேரம் பார்த்து, நிலைமை பார்த்தல்லவா கொல்லும்!

பாஞ்சைப் பதியின் சுதந்திரத்திற்காக அண்ணனைப் போலவே - இல்லை - அண்ணனைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகவும் ஆவேசமாகவும் போரிட்ட அந்த ஊமைத்துரையை, அவன் சொந்தச் சீமையின் தலைநக

ராகிய பாஞ்சைப்பதிக்கே கொண்டு போய், அங்குள்ள பழைய பீரங்கி மேட்டிலேயே மரம் நட்டு, வாய் வல்லமையினும் வாள் வல்லமையே பெரிது எனக் காட்டிய பெரியோனை - தலையாய தமிழ் வீரனை - தூக்கிலிட்டுக் கருணையின்றிக் கொலை செய்தார்கள் கொடிய வெள்ளையர்கள்.

விடுதலைப் போரைத் துவக்கி வைத்த கட்டபொம்மனைப்போலவே, தூக்கிலிடப்பட்டுக் கொலையுண்ட அந்த மா வீரர்கள் சாகும் தருவாயில் என்னென்ன வெல்லாம் நினைத்தார்களோ ? அவர்கள் எதை நினைத்திருந்தாலும் நினையாமல் போயிருந்தாலும் இவற்றை மட்டும் நிச்சயமாக நினைத்திருப்பார்கள் :

' அந்தோ! தமிழகமே! உனக்காக, உன் மானத்தைக் காக்க, ஆண்டுக் கணக்காக - அல்லும் பகலும் - அதே நினைவாகப் போராடினோம். துணிச்சல் நிறைந்த வீரர்களைப் பெற்ற உன் திருவயிறு, துரோகிகளையும் பெறாமல் இருந்திருந்தால், நிறத்தால், பேசும் மொழியால், பண்பாட்டால், எல்லாவற்றிலும் முற்றிலும் அந்நியனான பரதேசி வெள்ளையர் இப்படி எங்களைத் தூக்கிலிட்டுக் கொன்று கொக்கரிக்கும் அவமானம் நிறைந்த தீயநிலை ஏற்பட்டிராது. தொலையட்டும். நாங்கள் போகிறோம். ஆனால் எங்கள் வாழ்வு கற்பிக்காத பாடத்தை உனக்கும் உன் வருங்கால சந்ததிக்கும் எங்கள் வீரச் சாவாவது கற்பிக்கட்டும். நாங்கள் சாகிறோம். ஆனால் எங்கள் இலட்சியமும் நாங்கள் தொடங்கிய போராட்டமும் சாகா. அவை தொடர்ந்து நடைபெறும். அவற்றிற்கு வெற்றியன்றி வீழ்ச்சி இல்லை.'

ஆம். அந்த வீரப் பெருமக்கள் இவ்வாறு எண்ணிய எண்ணம் வீணாகவில்லை. அவர்கள் இறந்தார்கள். ஆனால் அவர்களின் இலட்சியம் இறக்கவில்லை. அது வெற்றியே

கண்டது. தமிழகத்தின் மன்னர்களாலேயே துவக்கி வைக்கப்பட்ட இந்தியச் சுதந்திரப்போர் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழ் மக்களால் பண்படுத்திப் பாரறியச் செய்யப்பட்ட மனித குலத்தின் மணிவிளக்காம் மகாத்மாவால் வீழ்ச்சி காணாத வெற்றியோடு முடிந்தது.

தூக்குமரத்தில் தொங்கிச் சுதந்திர தேவியின் சந்நிதியில் களபலியான மருது பாண்டியரின் ஆவி பிரியும் நேரத்தில் - தூக்கிலிடப்பட்ட அவர்களின் கடைசி மூச்சும் ஒடுங்குவதற்கு முன், அவர்களைக் கருணை பொருந்திய கம்பெனி அரசாங்கத்தின் கொலையாளிகள், ' உங்கள் கடைசி விருப்பம் என்ன ?' என்று கேட்டார்களாம். ஒருவேளை வருத்தப்பட்டு ஏதாவது கூறுவார்கள் என்று எண்ணினார்கள் போலும் அந்தப் பேடிகள் ! ஆனால் சிறிதும் கலங்காத வீரப் பார்வையோடு, நாடாளும் மன்னன் என்ற இறுமாப்போடு, கணீர் என்ற குரலில் பெரிய மருது தன் கடைசிவேண்டுகோள்கள் இரண்டைக் கூறினான். அவற்றுள் முதலாவதாக அவன் விளம்பியது, ' நாங்கள் முள்ளால் கீறியவையும், சொல்லால் கூறியவையும், எள்ளால் இறைத்தவையும் ஆகியபொருள்களை அவரவர்கட்கே அளித்துவிடவேண்டும் ' என்பது. இரண்டாவதாக அவன் செப்பியது, ' நாங்கள் ஆர்வத்தோடு கட்டிய காளையார் கோவில் சோமேசுவர சுவாமி ஆலயத்தின் கோபுர வாசற்படிக்கு நேர் எதிரிலேயே எங்கள் உடலைச் சமாதிவைக்கவேண்டும் ' என்பது.

மறைமொழி போல் அவ்வீரன் கூறிச்சென்ற இச் சொற்களை எண்ணும் போதெல்லாம் நம் மெய் சிலிர்க்கிறது. தூக்கிலிடப்பட்டுச் சாகும்போதும், ' எங்கள் உடல் அழிக ! ஆனால் எங்கள் அறநெஞ்சம் நிலைபெறுக!' என்று எண்ணிய அந்த மாவீரர்களின் அற உணர்வும்

ஆண்மை எழுச்சியும் நிறைந்த உள்ளத்தை என்ன வென்று கூறி எவ்வாறு போற்றித் துதிப்பது !

ஆயினும், 'சிந்தையிலே தூய்மையும் செயலிலே உறுதியும் கொண்டு, எங்கள் தாய் நாட்டின் மானங் காத்த மருது பாண்டியர்களே, ஊமைத் துரைச் சீமானே, சிவஞானச் செல்வமே, செந்தமிழ் நாட்டுச் சுதந்திர வீரர்களே, உங்கள் பொன் உடலை எங்கள் மூதாதையர்கள் மண்ணில் புதைத்தார்கள். ஆனால் நாங்கள் உங்கள் புகழுடலை எங்கள் மனத்திலே புதைத்து, என்றென்றும் போற்றி வழிபடுவோம். நீங்கள் துவக்கிய விடுதலைப் போரில் வெற்றி கண்டு, எங்கள் தலைமுறை அடைந்துள்ள கண்ணினும் இனிய சுதந்திரத்தை எங்கள் உயிரினும் சிறந்ததாகக் கருதிக் காப்பாற்றுவோம்' என்று உணர்ச்சியால் கலங்கும் கண்ணீர் மல்க கையுயர்த்திச் சூள் செய்வோமாக !

13. கர்னல் வெல்ஷைக் கேளுங்கள்

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் தமிழகத்தின் உரிமைக்காகப் போரிட்ட வீரர்களின் முதல்தர விரோதிகளுள் ஒருவன். அவனைப்பற்றி இதற்குமுன் நாம் பல சந்தர்ப்பங் களிலும் படிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதற்கு முக்கிய காரணம்போர்வெறி பிடித்த அவன், வரலாற்று உணர்ச்சியோடு எழுதிவைத்துள்ள 'ராணுவ நினைவுகள்' என்ற புத்தகமே. நாட்குறிப்புக்கள் போல் அவன் வரைந்து வைத்துள்ள செய்திகள் நம் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன. பாஞ்சாலங் குறிச்சியில் துவங் கிய சுதந்திரப் போரில் தீவிரப் பங்கு கொண்டு, இறுதியில் மருது பாண்டியரையும் பிடிக்க, வேட்டை நாய்போல் அலைந்து திரிந்த இந்த வெல்ஷ் மருது சகோதரர் களுக்கு நெருங்கிய நண்பனாக இருந்து, பின் மிகக் கொடிய பகைவனாக மாறினான் என்றும் பார்த்தோம். தமிழகத்தின் சுதந்திர வீரர்கள் நடத்திய முதற் பெரும் போரின் இறுதிக் கட்டத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கும் நாம் இந்தச் சுதந்திர விரோதியின் வாயிலாகவே தெரிந்து கொள்ளவேண்டிய திடுக்கிடும் செய்திகள் இன் னும் சில இருக்கின்றன.

பாஞ்சைப்பகுதியில் வீரன் ஊமைத்துரையைத் தூக்கிலிட்ட பீரங்கி மேட்டையும் வெள்ளைக்காரர்களுக் காக எழுப்பப்பட்ட நினைவுக் கற்களையும் தவிர, மற்ற இடங்கள் யாவும் நாசமாக்கப்பட்டு, உழுது, உப்புடன் வரகைக் கலந்து விதைத்து, ஆமணக்குச் செடிகளை நடும் படியும், அப்பகுதியிலே எந்தத் தமிழ் மகனும் தலை காட்டக் கூடாது என்றும் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் கட்டளை இட்டது. குடிமக்கள் எல்லாம்

விரட்டி அடிக்கப்பட்டனர். ஆம். அந்த மண்ணுக்கு இருந்த ஆற்றல் கம்பெனியாரையன்றி வேறு யாருக்கும் அவ்வளவு நன்றாக, அனுபவ வாயிலாகத் தெரியாது அல்லவா? தப்பித் தவறி யாரேனும் ஒரு பிடி மண்ணை அங்கிருந்து அள்ளினாலும் அவர்கள் வெள்ளையன் குண்டுக்கு இரையாகும் நிலையை ஏற்படுத்தினர் கம்பெனி அதிகாரிகள்.

மருது சகோதரர்களையும் ஊமைத்துரையையும் கைது செய்த கம்பெனிப்பட்டாளம் அவர்களுடைய உற்றார், உறவினர், நண்பர், வேலையாட்கள் ஆகிய அனைவரையும் கைது செய்திருந்தது. அவ்வாறு கைது செய்யப்பட்டோருள் தூக்கிலிட்டுக் கொலை செய்யப்படாமல் எஞ்சியிருந்தோர், மருது சகோதரர்களைச் சார்ந்த 70 வேலையாட்களும், சில நண்பர்களும், சின்ன மருதுவின் அருமை மகனும், பதினைந்து ஆண்டுகளே நிரம்பியவனும் ஆகிய துரைசாமியுமே ஆவர். இவர்களுள் யாரையும் கொலை செய்யாமல், ஆனால் தீவாந்தர தண்டனை அளித்துக் கடலுக்கு அப்பால் உள்ள 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' என்ற தீவில் கொண்டுபோய்த் தவிக்கவிட முடிவு செய்தது இரக்கமே வடிவான கிழக்கிந்தியக் கம்பெனி. முக்கியமாகப் பதினைந்தே வயதான துரைசாமி தூக்கு மரத்தில் துடிதுடித்துச் சாகுமாறு செய்வது அவர்கள் கொலை நெஞ்சிற்கும் ஒவ்வாத கொடிய செயலாகப் பட்டது போலும்! ஆம். கொலையாளியின் பகை நெஞ்சையும் உருக்கியது அவ் இளைஞனது கள்ளமற்ற இனிய முகம்.

இவ் இளைஞனையும் இவனோடு சேர்ந்த எழுபது பேர்களையும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து பத்திரமாகக் கப்பலேற்றிக் கண்காணாத ஒரு கண்ணற்ற தீவில் ஆயுள்

காலம் வரை அடைபட்டுக் கிடந்து சாகும்படி அனுப்பும் மிக முக்கியமான கடமை கர்னல் வெல்ஷ் துரைக்கே கிடைத்தது. உடுத்திய உடையோடு, குற்றமற்ற முகத்தின் ஒளி வீசப் பதினைந்து வயது இளைஞனையும் அவனைச் சார்ந்தோரையும் பெற்ற தாய் நாட்டினின்றும் ஒரேயடியாகப் பிரித்துக் கடலுக்கு அப்பால் அனுப்பும் கொடுமையைக் கல் நெஞ்சத்தோடு தான் சாதித்தபோது அவ் இளைஞனும் அவனைச் சார்ந்தோரும் இருந்த காட்சியையும், அதைக் கண்ட கர்னல் வெல்ஷின் நெஞ்சில் பீறிட்டு எழுந்த உணர்ச்சிகளையும் அவனே சொல்லட்டும், கேட்போம். இதோ கர்னல் வெல்ஷ் கூறும் உணர்ச்சி நிறைந்த வார்த்தைகள்:

'போர் முடிந்ததும் எஞ்சியிருந்த எதிரிகளை எல்லாம் கப்பலேற்றித் தீவாந்தரம் அனுப்பும் பொறுப்பை நானே ஏற்க வேண்டியதாயிற்று. சின்ன மருதுவின் மைந்தன் தனக்கு நேர்ந்த விபத்தை நொந்த உள்ளத்தோடு-ஆனால் கம்பீரமாகப் பொறுத்துக் கொண்டான். பெருந்தன்மையும் தியாக உணர்ச்சியும் தவழும் முகத்தோடு விளங்கிய அவ் இளைஞன் - இனிய பண்புகள் படைத்த அந்நல்லோன் - தன் கொடிய தலைவிதியை ஒரு சிறு முணு முணுப்பும் இன்றி ஏற்றுக் கொண்டான். ஆனால் அவனுடைய அழகு பொருந்திய திருமுகத்தில் குடிகொண்டிருந்த அந்த ஆழ்ந்த சோக உணர்ச்சியைக் கண்ணால் காண்பதும், கண்டு கலங்காமல் இருப்பதும் அறவே முடியாத செயல். அவன் என் நேரடியான பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு இருந்தமையால் நான் அவன் தப்பி ஓடுவதற்கு உடந்தையாக இருக்க முடியவில்லை. ஆனால் பலத்த பாதுகாப்புடைய ஒரே இடத்தில் நானும் அவனும் இருந்தமையால் அவனைத் தன்

வேலையாள்களுக்கு மத்தியிலேயே அவமானம் தரும் கை விலங்குகளோடு நிற்கும் காட்சியினின்றும் விடுதலை செய்யக் கருதி, தன் முன்னாள் வேலையாளிடமிருந்து தனியாகப் பிரித்து வைத்தேன்; அவன் கை விலங்குகளையும் கழற்றும்படி செய்தேன். ஆம். அவ்வாறு நான் என்னுடைய வருந்தத்தக்க பழைய நண்பன் சின்ன மருதுவின் மக்களுள் தப்பித்து உயிரோடு இருந்த அந்த ஒரே மைந்தன் - பதினைந்தே வயதான இளைஞன் - நிரந்தரமான தீவாந்தர வாசத்திற்கு இரையாக்கப்பட்டிருந்த துரைசாமியின் கை விலங்குகளைத் தளர்த்தியதன் வாயிலாகத்தான் என் உள்ளத்தில் ஏதோ ஒரு வகையான துக்கம் நிறைந்த ஆறுதலாவது ஏற்பட்டது.'

ஒரு குலத்துக்கு ஒரே மைந்தனாகிய அவ்விளைஞனையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கொல்லாமல் கொல்வதற்காகக் கடல் கடந்த இடத்திற்கு அனுப்பியது. அக்கொடுமையை அவ் ஏகாதிபத்தியத்தின் சார்பில் நடத்தி வைத்த கர்னல் வெல்ஷ் மேலும் அந்த நிகழ்ச்சியைச் சித்திரித்துக் காட்டும் பகுதி இதோ இருக்கின்றது :

'எனக்குத் தரப்பட்டிருந்த பொறுப்பைத் தூத்துக்குடித் துறைமுகத்தில் லெப்டினன்ட் ராக் ஹெட்டிடம் ஒப்படைத்த அந்தத் துயரம் நிறைந்த நாளை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அந்த இளைஞன் துரைசாமியைக்கடல் கடந்துபோகும் கப்பலில் ஒப்படைத்தபோது அழகொழுகும் அவன் முகத்தில் புதைந்து கிடந்த ஏக்கம் இப்பொழுதும் கண்ணெதிரே காண்பது போல் தோன்றுகிறது. அதோடு அவனைப் போலவே வெந்துயரில் வீழ்ந்து கிடந்த அவன் நண்பர், பெற்ற நாட்டைப் பிரியும் நேரத்தில் உண்டான பெருந்துன்பத்தை

மௌனமாகவும் ஆண்மையோடும் பொறுத்துக்கொண்ட காட்சி இன்றும் என் கண்முன் தோன்றுகிறது.'

இந்நிகழ்ச்சி நடந்தபோது கர்னல் வெல்ஷ், துரைசாமியைச் சந்திக்கும் கடைசி முறை அதுதான் என்று எண்ணிக் கலங்காத நெஞ்சமும் கலங்கினான். ஆனால் இன்னொரு சந்திப்பையும் ஏற்படுத்தி, அவன் மனத்தில் பெரியதோர் உணர்ச்சிப் பேரிடி விழுமாறு செய்யக் காலம் காத்துக்கொண்டே இருந்தது.

1818ஆம் ஆண்டில் - ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் கழித்து - கர்னல் வெல்ஷ் பினாங்கிற்குப் போனான். அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சியை அவனே கூறுகிறான் :

"ஒருநாள் நான் அலுவலகத்தில் இருந்த போது திடீரென மூத்துத் தளர்ந்துபோன ஒரு ஏழைக் கிழவன் என்முன் தோன்றினான். பழைய நினைவு ஏதுமே அற்ற மனத்தோடு இருந்த நான் அவனை அதிகாரக் குரலில், 'நீ யார்? எதற்காக வந்தாய்?' என்று அதட்டிக் கேட்டேன். அவன் என்னைக் கொஞ்ச நேரம் உற்று நோக்கினான். கோடு கோடாய்த் திரை விழுந்துபோன அவனுடைய முகத்தில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடியது. நெடுநேரம் கழித்துக் கடைசியாக அவன் சொல்லிய வார்த்தை : 'துரைசாமி.' ஆம். அந்தச் சொல் என் இதயத்தில் ஈட்டிபோல் பாய்ந்தது."

வெல்ஷ் வந்திருக்கிறான் என்ற செய்தியைக் கேட்டு அவ்வளவு உணர்ச்சியோடும் உருக்கத்தோடும் அவன் ஏன் அங்கே வந்தான்? தன் விடுதலைக்கா? உயிர்ப் பிச்சைக்கா? தப்பி ஓட உதவி வேண்டியா? இல்லை. இல்லை. சுதந்திரம் என்பது போரிட்டு வாங்குவதே அன்றிப் பிச்சை கேட்டுப் பெறும் பொருள் அல்ல என அறிந்த, வாழ்ந்த வீரமரபின் கான்முளை அன்றோ அவன்? பின் அவன்

எதற்காக வந்தான்? அக்காரணத்தைக் கர்னல் வெல்ஷே கூறுவதை இன்று நினைத்தாலும் கண்ணீர் பெருகுகிறது. கர்னல் வெல்ஷ் கூறுவதைக் கேளுங்கள் :

'என்னிடம் அவன் வந்த காரணம் தன் தாயகத்தில் வாழும் உறவினர்களுக்குக் கடிதம் அனுப்ப உதவ வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் சட்டம் அதற்கு இடம் தராததால் என்னால் ஒன்றும் முடியாது என மறுத்து விட்டேன்'

தன் 'நினைவுகளின்' இறுதியில் கர்னல் வெல்ஷ் கூறுமிதைப் படிக்கும்போது நம் உள்ளத் துயர் எல்லை கடந்து போகிறது. இதோ வெல்ஷின் இறுதிச் சொற்கள் :

'துரைசாமிக்கு என்னால் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனால் இறுதியாக என் உள்ளத்தில் உள்ள ஒரு நம்பிக்கையை மட்டும் கூறிவிடுகிறேன். துரைசாமியைப்பற்றி மேலே நான் சொல்லியுள்ள வாசகங்களை வருங்காலத்தில் படிக்கும் எந்தக் கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவனாவது அருள் கூர்ந்து, ஒரு குற்றமும் செய்யாத இந்த மனிதனுக்கு முழுவிடுதலை தர முடியாவிடினும் இவன் படும் அவதியையாவது குறைக்க முற்படுவானாக !'

வெல்ஷ் நினைத்த இந்த நினைப்பும் மண்ணாயிற்று. கடல் அலைகட்கு அப்பால் கொண்டுபோய்க் கொல்லாமல் கொல்லப்பட்ட தியாகி துரைசாமியின் மூச்சும் முடிவும் கால அலைகளோடு கலந்து கரைந்து ஒன்றாகிவிட்டன. அந்தோ ! துரைசாமி ! சாகாமல் செத்துக்கொண்டிருந்த நீ இந்தச் செந்தமிழ் நாட்டோடு - உன் தாயினத்தோடு- எழுத்தாலாவது, கடிதத்தாலாவது, உறவு கொள்ள துடியாய்த் துடித்தாயாமே ? தாரை தாரையாக உன் கண்ணீர் இன்பத் தமிழ் நாட்டை எண்ணி எண்ணி

வழிந்ததாமே ! உன் பகைவனே இந்த உண்மையை உளம் திறந்து கூறுகிறானே ! துரைசாமி, தியாகத்தின் திருவிளக்கே, தூக்கில் ஏறிய உன் தந்தையர் கூட ஒரு நொடியில் உயிர்போக்கிக்கொண்டார்கள். ஆனால் நீயோ ஆண்டுக் கணக்காகச் சாகத் துடித்தாயாமே ! எங்கள் குல தெய்வமே, தியாக ஒளியே, உன் வீரத் திருவடிகளை அகக்கண்களாலாவது கண்டு, தொட்டு வணங்குகிறோம். அப்பா, துரைசாமி, உன்னை, உன் தியாகத்தை ஒரு நாளும் மறவோம், மறவோம்.

14. வீரர்களை வணங்குவோம் !

தமிழகத்தின் 'ஜிப்ரால்டர்' என்று வெள்ளையராலேயே போற்றப்படும் பேரும் புகழும் படைத்து விளங்கியது பாஞ்சாலங்குறிச்சி. உலகம் முழுவதிலும் இணைகாண ஒண்ணாப் பலம் பொருந்திய மிகப்பெரிய இயற்கை அரண்களைப் பெற்றுத் திகழும் ஜிப்ரால்டரை ஒருவர் பிடித்துவிட்டால், பின் மத்தியதரைக்கடல் முழுவதும் அவர் ஆதிக்கத்திற்கு உள்ளாவது எளிது. அவ்வாறே பாஞ்சாலங் குறிச்சியை - தமிழகத்தின் ஜிப்ரால்டரை - வென்று விட்டால், தென் தமிழ் நாடு முழுதும் நம் அடிப்படும் எனக் கருதினர் வெள்ளையர் ! அத்தகைய வன்மையும் வான்புகழும் பெற்றிருந்த பாஞ்சாலங்குறிச்சியின் பெயரை மக்கள் நினைப்பினின்றும் அழித்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தில், ஆணவத்தில் தேசப்படங்களினின்றும் அகற்ற ஆணையிட்டது கம்பெனி வர்க்கம். மேலும் அத் திருநகரைத் தலைநகராகக் கொண்ட பாஞ்சைப் பதியிலும் அதைச் சுற்றிச் சூழ்ந்த நாட்டிலும் வாழ்ந்த வீர மறவர்கள்,

'மண் வெட்டிக் கூலிதின லாச்சே—எங்கள்
வாள் வலியும் வேல் வலியும் போச்சே !
விண்முட்டி சென்ற புகழ் போச்சே—இந்த
மேதினியில் கெட்ட பெய ராச்சே!'

என்று நெஞ்சம் துடிக்கும்படி அவர்கட்கு நேர்ந்த அழிவை நினைத்தே ஆத்திரமுற்றுப் பாடுவதுபோல் பாரதி பாடியுள்ள இக் கவிதை காட்டும் காட்சியே கன்னித்தமிழகத்தின் நிலையாயிற்று.

இவ்வளவு கொடுமைகளையும் செய்த ஏகாதிபத்தியம் இன்று அழிந்து தொலைந்துவிட்டது. அதன் அழிவிற்காக ஒரு துளி கண்ணீர்விட்டு எவரும் அழவில்லை. ஆனால் பாஞ்சைப்பதியின் வீர வரலாற்றையும், வீர பாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது பாண்டியர் ஆகியோரின் வீரவாழ்வையும் எண்ணுந்தொறும் நன்றி உணர்ச்சியால் கண் கலங்கி மெய் நடுங்கும் மக்கள் தமிழகமெங்கும் நிறைந்துள்ளனர்.

வெள்ளையரால் விளைந்த எவ்வளவோ கொடுமைகட்குப்பின்னும் தமிழ்நாட்டுப்பெருங்குடி மக்கள் உள்ளத்தில் மருது பாண்டியர்களின் நினைவு ஒரு சிறிதும் மங்கவில்லை. இந்த உண்மையை அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவில், காந்தி மகானின் சுதந்திரப்போர் துவங்கப் பெறாத இருள் சூழ்ந்த காலத்தில், 1891ஆம் ஆண்டு மே திங்களில் தென்பாண்டிச் சீமையில் இன்பத் தமிழ் ஏடுகளைத் தேடிச் சுற்றுப் பயணம்செய்த காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதியுள்ள 'என் சரித்திரம்' என்ற நூலில் எவ்வளவு உணர்வோடு சித்திரித்துள்ளார் என்பதை இங்கே நாம் நினைவுபடுத்திக் கொள்ளல் பொருத்தமும் பயனும் உடையதாகும் :

'குன்றக்குடியைச் சார்ந்த இடங்களிலெல்லாம் ஜனங்கள் மருது பாண்டியரைப் பற்றிய வரலாறுகளையும் கொடையையும் பாராட்டியும், அவரைப்பற்றிய தனிப் பாடல்களைச் சொல்லியும் இன்புற்றனர்.

சிறுவயல் ஜமீன்தாரும் பல வரலாறுகளைச் சொன்னார் : 'நான் வசித்துவரும் இந்த மாளிகை மருதுபாண்டியர் இருந்த அரண்மனையாகும். அதனால் இவ்வூருக்கு அரண்மனைச் சிறுவயலென்னும் பெயர் உண்டாயிற்று. சிவகங்கைச் சமஸ்தானத்துத் தலைவர்களுள் அவரைப் போலப் புகழ் பெற்றவர் சிலரே. தம்முடைய வீரத்தால் சமஸ்தானத் தலைமையை அவர் பெற்றார். அவர் மிக்க

தெய்வபக்தி உடையவர். பல ஸ்தலங்களில் அவர் திருப்பணி செய்திருக்கிறார்; முக்கியமாகக் குன்றக்குடியில் சில மண்டபங்களைக் கட்டி இருக்கின்றார். அவரால் செப்பம் செய்யப்பட்ட திருக்குளம் 'மருதாபுரி' என்ற பெயரோடு இப்போதும் விளங்குகிறது. **அவருடைய சமஸ்தானத்தில் இருபத்தொரு தமிழ் வித்துவான்கள் இருந்தார்கள்.** அவரைப் பாராட்டி அவர்கள் பாடிய செய்யுட்கள் பல. ஜமீன்தார், மருது பாண்டியருடைய கல்வியிலும் கொடையிலும் வீரத்திலும் ஈடுபட்டவராதலின் மணிக்கணக்காக அவர் புகழை இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தார்.'

தென்பாண்டி நாட்டில் இன்றும் மருதுபாண்டியர் புகழைப் பேசாமல் பேசிக்கொண்டிருக்கும் எத்தனையோ வரலாற்றுத் தொடர்புடைய செல்வங்கள் உள்ளன. சான்றாகக் குன்றக்குடிக் கோயில், மருதுபாண்டியர் கட்டியுள்ள மண்டபங்கள், புதுப்பித்த குளம், காளையார்கோவிலில் இவ்வீரர்களால் கட்டப்பட்ட சோமேசுர சுவாமி கோயில், அங்கே உள்ள இவர்களின் சமாதி, அதற்கருகில் இவர்கள் தாயாரால் வெட்டுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஊருணி, காரைக்குடிக்கும் தேவகோட்டைக்கும் இடையே உள்ள சங்கரப்பதிக் காட்டில் பாழடைந்து கிடக்கும் சங்கரப்பதிக் கோட்டை, அக் கோட்டையில் காணப்படும் சுரங்க வழி, மருது பாண்டியர் புகழுடன் தொடர்புடைய இத்தகைய பிற இடங்களையும் கட்டடங்களையும் சுதந்திர இந்தியாவின் அரசாங்கம் தலைசிறந்த சரித்திரச் சின்னங்களாகக் கருதி என்றென்றும் போற்றவேண்டும். மருது பாண்டியர் தியாகத்தில் மனத்தைப் பறிகொடுத்த நம் தமிழ் நாட்டுக் கலைஞர்கள் குன்றக்குடியிலும் மருது பாண்டியரின் சமாதிகள் உள்ள

காளையார் கோவிலிலும் மிகப்பெரிய அளவில் அவ்விரு சகோதரர்களின் திருவுருவங்களை அழகும் ஆண்மையும் ஒளிரச் செதுக்கி வைத்துள்ளார்கள். இத்திருவுருவங்களைத் தெய்வச் சிலைகட்குச் சமானமாகக் கருதி நம் முன்னோர்கள் ஆலயங்களிலேயே அவைகட்கு இடம் அளித்த அருமைப்பாட்டை என்னென்று போற்றுவது! ஆம். உண்மையான தேசபக்தியும் உயர்வான தெய்வபக்தியும் வேறு வேறானவை அல்லவே? இவ் உண்மையை நம் மக்களும் அரசாங்கமும் நன்குணர்ந்து போற்றுவதோடு சிலைவடிவில் நிற்கும் அச் செந்தமிழ் வீரர்களின் பெயரால் நாடெங்கும் மக்கட்குப் பலவகையான பயனுடைய நினைவு நிலையங்களை நிறுவவேண்டும்.

இவ்வாறெல்லாம் செய்யவேண்டுவது நம் கடமை மட்டுமன்று; கொள்கைக்காக உயிர் கொடுக்கும் வீரர்களைத் தெய்வமெனக் கருதி வழிபடும் தீந்தமிழ்ப் பண்பாடும் அதுவேயாகும். இடைக்காலத்தில் இப்பண்பாடு பழுதுபட்டது. வீர வழிபாடு தொலைந்து வெற்று வழிபாடுகள் பல்கின. அதனால் வழிபாட்டின் பயனே பாழாகியது. இந்நிலை மாறுங்காலம் நாட்டின் வளர்ச்சியும் வாழ்வும் ஆயிரம் மடங்காக ஓங்கி மேன்மை அடையும் ஒப்பற்ற காலமாகும்.

இந்தியாவை, தமிழகத்தை அடக்கி ஆளவந்த ஆணவம் மிக்க ஆங்கிலக் கொள்ளைக் கூட்டத்தை ஆரம்ப நாளிலேயே ஆவேசத்துடனும் ஆண்மையுடனும் எதிர்த்து, இருபத்தைந்து மாதங்கள் இடைவிடாது போரிட்டு மடிந்த எண்ணற்ற வீரர்களை ஈன்றெடுத்த பெருமை தமிழ் மண்ணிற்கே உள்ள தனியுரிமையாகும். அவ்வீரப்போரைத் தொடர்ந்து நடத்திய பெருமை தமிழ் மக்களுக்கு, இளைஞர்கட்கு உண்டெனினும் அப்

போரைத் தொடங்கி வைத்துத் தலைமை தாங்கிய பெருமை தமிழகத்தின் மன்னர்கட்கே உண்டு. ஆம். **இந்திய விடுதலைப் போரை-நாட்டின் மானங்காக்கும் ஆண்மைப் போரை - துவக்கி வைத்த முதல் இந்திய இனம் தமிழ் இனமே ஆகும்.** அப்போரில் மூண்டெழுந்த தியாகத்தீயில் குதித்துச் சிறைப்பட்டும், குண்டுக்கும் பீரங்கிக்கும் இரையாகியும், தூக்கு மேடைகளில் தொங்கியும், தீவாந்தரத் தண்டனைகளைப் பெற்றும் அவதிப்பட்ட முதல் இனம் தமிழ் இனமே. அத்தகைய வீரத்தமிழ் இனம் தந்த இணையில்லா இரு மாணிக்கங்களைப் பற்றியே சிறப்பாக இப்புத்தகத்தில் படித்தோம்.

மருது சகோதரர்கள் நம் தாய் நாட்டின் மானங் காத்த மாண்பு மிக்க வீரர்கள்; தமிழச் சாதியின் சுதந்திர வேட்கையையும் தியாக வெறியையும் மலைமேல் இட்ட மங்காச் சுடர் விளக்காய்ச் செய்த புகழுடையோர்கள்.

'இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப் பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே'

என்று பாடினார் தேசிய கவி பாரதியார். அவர் பாட்டைத் தம் வாழ்வாக்கி, வாழ்ந்தும் மடிந்தும் அழியாப் புகழ் கொண்ட ஆண்மைச் சிங்கங்கள் மருது பாண்டியர்கள். வீர பாண்டியன் நடத்திய போர் சிலவாரங்களே நடந்தது. ஆனால் மருது பாண்டியர் நடத்திய போரோ பல மாதங்கள் நடந்தது. வீர பாண்டியன் நடத்திய போர் பெரும்

பாலும் பாஞ்சைப் பதிக்குள்ளேயே அடங்கிவிட்டது. ஆனால் மருது பாண்டியர் நடத்திய போரோ பல சதுர மைல்கள் தூரம் பரவி, ஊர் மாறி ஊர், கோட்டை மாறிக் கோட்டை, காடு விட்டுக் காடு, எல்லை விட்டு எல்லை நடந்தது. எல்லா வகையாலும் வீர பாண்டியன் துவக்கிவைத்த போரை, மாற்றான் பகைக்கஞ்சாது, காலந் தந்த வாய்ப்பால் அண்ணனினும் திறமையாகத் தம்பி ஊமைத்துரை நடத்திய போரை, மருது சகோதரர்கள், ஊமைத்துரையின் உறுதுணையோடு சற்றேறக்குறைய ஐந்து மாதங்கள் இடையறாது நடத்தினர். அப்போர்க் காலத்தில் அவர் காட்டிய வீரமும், செய்த தியாகமும், பட்ட துன்பமும் கொஞ்சமோ? சுதந்திர வீரர்கள் இரவும் பகலும் போரிட்டனர்; எண்ணற்ற வீரர்கள் பலியாவது கண்டு கண்ணீர் விட்டனர்; 'எவ்வாறேனும் வெற்றி பெறுவோம்; அந்நியனை முறியடிப்போம்; அமைதி காண்போம்' எனத் துடித்தனர். ஆனால் அவர்கட்கு அமைதி, வெற்றியால் கிட்டவில்லை. வீரச் சாவால்தான் கிடைத்தது.

'உலக வரலாற்றிலேயே இவ்வளவு ஆயுத பலம் நிறைந்த ஒரு கூட்டத்தை ஆள் பலம் மட்டுமே கொண்ட ஒரு கூட்டம், இவ்வளவு வீரத்துடனும் திறமையுடனும் எதிர்த்துப் போராடியது எக்காலத்திலும் இல்லை' என்று வரலாற்று அறிவுடையோர் கூறும்படி செய்தனர் மருது பாண்டியர்; முறத்தினால் புலியைக் காக்கும் மொய்வரை குறப்பெண் போலத் தாக்கி, 'உருளுக தலைகள்; ஓங்குக மானம்' என்று போர் முரசம் கொட்டிக் கடும் போர் புரிந்தனர். ஆயினும் வெற்றி பெறவில்லை. ஆனால் அழியாப் புகழ் எய்தினர். 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனர்'

வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்திற்கு வாழ்த்துக்கூறி அமரகவி பாரதியார் அருமையாக ஒன்பது பாடல்கள் பாடியுள்ளார். அவற்றில் உள்ள ஒவ்வொரு சொல்லும் வீரமறவர்—மருதுபாண்டியர் நடத்திய போரையும் அதன் முடிவையுமே மனத்தில் வைத்துப் பாடியதாக அமைந்துள்ளது. 'அறத்தினால் வீழ்ந்துவிட்டாய், வண்மையால் வீழ்ந்துவிட்டாய், மானத்தால் வீழ்ந்துவிட்டாய், வீரத்தால் வீழ்ந்துவிட்டாய், துணிவினால் வீழ்ந்துவிட்டாய்' என்றெல்லாம் அவர் உள்ளம் கொதித்துக் கூறும் சொற்களில் அயல் நாடாகிய பெல்ஜியத்திற்குத்தான் ஆறுதல் கூறுகிறார் என்றாலும், தென்பாண்டி நாட்டில் பிறந்த அந்தத் தீந்தமிழ்க் கவிஞர்பெருமான் தன் உள் மனத்தில் தன் தாயகத்திற்காக நடந்த சுதந்திரப்போரில் பலியான கட்டபொம்மனை, ஊமைத்துரையை, மருது பாண்டியரை எண்ணியே, தம் கொதிக்கும் உள்ளத்திற்கு ஆறுதல் கூறிக்கொள்ளவே அவ்வாறு பாடினார் என்று தோன்றுகிறது.

இவ்வாறு தம் நாட்டு மகாகவியின், மக்களின் உள் மனத்தை எல்லாம் உருக்கும் ஆற்றல் படைத்த வாழ்வு வாழ்ந்த மருதுபாண்டயரைத் தமிழகத்தின் விடுதலைக்காகப் போரிட்ட வீரர்களாகமட்டும் கருதுவது தவறாகும். அப்பெருவீரர்களை அடிமை வாழ்வை எதிர்த்துச் சுதந்திரப் போர்புரிந்த மாஜினி, கரிபால்டி, ஆப்ரகாம் லிங்கன், ஜியார்ஜ் வாஷிங்டன் போன்ற உலகப் பெருவீரர்களோடு சேர்த்துவைத்துப் போற்றுவதே பொருத்தமாகும்.

மருது பாண்டியரைப் பெற்றெடுத்த பூமி, அவர்கள் எந்த ஆயுத பலத்தை, ஆள் பலத்தாலும் ஆயுதபலத்தாலும் வெல்ல முடியவில்லையே என்று எண்ணித் துடித்தார்களோ, அந்த ஆயுதபலத்தை வெல்லவல்ல ஓரே கருவி அன்பு பலமே என்று உலகில் நிறுவிக்காட்டவல்ல ஒரு மகாத்மாவைப் பெற்றெடுக்க ஒன்றரை நூற்றாண்டுகள் சென்றன. ஆயினும் நாம் பாக்கியம் செய்தவர்கள். 'மருதுபாண்டியரும் நம் முன்னோர்களும் காணமுடியாத சுதந்திரத்தை நாம் காணும் பேறு பெற்றோம்' என்று நினைக்கும்போது இன்பவெள்ளம் நம் உள்ளத்தில் பொங்குகிறது. ஆயினும் அந்தக்களி வெறியில் நாம் இன்று தலைநிமிர்ந்து அனுபவிக்கும் சுதந்திரத்தை அடைவதற்காகப் போராடிப் போராடி உயிர்துறந்த உத்தமர்கட்குத் தலைவணங்கி நன்றி செலுத்தவேண்டிய கடமையை மறவாது இருப்போமாக!

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்பது வள்ளுவர் வாக்கன்றோ?

'பூர்விக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பிராது' எனத் தெளிந்து கூறினார் தேச பக்தியோடு தீர்க்க தரிசனமும் சேரப்படைத்த செந்தமிழ்நாட்டுக் கவிஞர் பாரதியார். மகான்கள் என அவர் கூறியது மாவீரர்கட்கும் முற்றிலும் பொருந்தும்.

நம் தாய்நாட்டின் வருங்காலம் ஒளியும் பயனும் படைத்த பொற்காலமாக ஆகவேண்டுமானால் எண்ணற்ற மாவீரர்கள்-மருதுபாண்டியர்கள் தேவை. சுதந்திரத்திற்காகப் போராட அல்ல - போராடிப் பெற்ற சுதந்திரத்தைப் போற்றிப் பாதுகாக்க.

எனவே நமக்காகவும் நம் தாயகத்தின் மானத்திற்காகவும் போராடிய அப்பெருவீரர்களை வணங்குவோம். வரலாறாக, காவியமாக விளங்கும் அவர்கள் வாழ்வில் நம், அறிவை - நெஞ்சைப் பறிகொடுப்போம். மானத்தோடு வாழ்ந்து, மானங்காக்கவே போராடி, மானத்துக்காகவே தூக்குமேடையிலும் ஏறி, ‘சாவு வருக! மானம் வாழ்க!’ எனப் புன்முறுவலோடு அப்பெருவீரர்கள் உயிர் துறந்த அந்த ஒப்பற்ற காட்சியை நம் மனக்கண்களால் காண்போம். தூக்குமேடையில் தாய்நாட்டின் மானத்திற்காகத் தொங்கிய அத்திருவுருவங்களை எண்ணும்போது பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துவிட்டுப் புதிய தமிழகத்தை, புதிய இந்தியாவை, புதிய உலகை ஆக்கும் பணியில் அனைவரும் ஒன்றுபட்டு முனைவோம்!

வாழ்க மருது பாண்டியர் புகழ்!

V2,11'L60
N54

RCHIVES LIBRARY
108182
MADRAS